சாதியைப் பார்க்காமல், பாலினப் பார்வையோடு பட்ஜெட் உருவாக்குவதும்

பாலினப் பார்வை இல்லாமல் தலித் பட்ஜெட் உருவாக்குவதும்

உள்ளதால்

# இரட்டை புறக்கணிப்புக்கு ஆளாகும் தலித் பெண்கள்

சமூக கண்காணிப்பகம் - தமிழ்நாடு

**தமிழ் பதிப்பு : ஆகஸ்ட் 2014**
(ஆங்கில பதிப்பு : அக்டோபர் 2013)

வெளியிடுவோர்:
**சமூக கண்காணிப்பகம் தமிழ்நாடு**
202, சித்ரா அவென்யூ வணிக வளாகம்
9, சூளைமேடு நெடுஞ்சாலை
சென்னை 600 094
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி: 044-23746044
மின்அஞ்சல்: admin@swtn.org
இணையதளம்: www.swtn.org

இந்தியாவின் 2011 மக்கள்தொகை கணக்குப்படி தலித் பெண்கள் 9 கோடியே 40 லட்சம் பேர் இருக்கிறார்கள். உலகத்தில் சமூகரீதியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய சமூகக் குழுக்களில் ஒன்றாக அவர்கள் இருக்கிறார்கள்.

நாடு முழுவதும் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. இந்திய மக்களில் பல பிரிவினர் சமூகரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர். வாழ்க்கைப் போராட்டத்தில் வர்க்கம், சாதி, பாலினம் தொடர்பான பல்வேறுவகையான பாகுபாடுகளுக்கு மக்கள் ஆட்படுகிறார்கள். ஆனால் இத்தகைய மக்களில் தொடர்ந்து அதிகம் பாதிக்கப்படுபவர்களாக தலித் பெண்கள் இருக்கிறார்கள். போட்டி நிறைந்த உலகமய சந்தையின் காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். இந்த காலத்திற்கு ஏற்ப செயல்படுவதற்கு தேவையான ஆதார வளங்களாக நிலமும் பண ~ உதவிகளும் திறன்களும் இருக்கின்றன. அப்படிப்பட்ட வளங்கள் தலித் பெண்களின் வாழ்க்கையில் முடக்கப்பட்டு வருகின்றன. இந்திய சமூகத்தின் அடிமட்டத்துக்கும் கீழாக, பாதாளத்தில் பலவீனமான நிலையில் தொடர்ந்து இருக்குமாறு தலித் பெண்கள் வைக்கப்பட்டு உள்ளனர்.

பெரும் எண்ணிக்கையில் தலித் பெண்கள் இருக்கிறார்கள். கற்பனை செய்யமுடியாத அளவு பாகுபாடுகளுக்கு ஆட்படுபவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அப்படி இருந்தும் இந்திய அரசின் பொருளாதார கொள்கைகளிலும், அதன் பல்வேறுபட்ட மாநிலங்களின் பொருளாதார கொள்கைகளிலும் ஏறக்குறைய அவர்களுக்கு எதுவுமே இல்லை என்ற நிலைதான் இருக்கிறது.

தமிழ்நாட்டில் நடக்கிற பட்ஜெட் தயாரிப்புகளை தலித் பெண்களின் பார்வையோடும் பல்வேறு பாகுபாட்டு வடிவங்களை ஆய்வு செய்யும் அணுகுமுறையோடும் நெருங்கி ஆய்வு செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது. அத்தகைய ஒரு ஆய்வுத்திட்டத்தை புது டெல்லியில் உள்ள ஐக்கிய நாடுகள் பெண்கள் எனும் அமைப்பு எமது சமூக கண்காணிப்பகம் தமிழ்நாடு அமைப்புக்கு வழங்கியது.

இந்த ஆய்வில் அதிர்ச்சி தரும் பல விஷயங்கள் வெளியாகின. உங்கள் கையில் உள்ள இந்த ஆய்வேட்டில் அந்த விசயங்கள் எல்லாம் இருக்கின்றன. சமூக கண்காணிப்பகம் தமிழ்நாடு இந்த ஆய்வேட்டை மத்திய மாநில அரசாங்கங்களுக்கு அளிக்கிறது. அதே போல நாட்டில் உள்ள தலித் அமைப்புகளுக்கும் சிவில் சமூகத்துக்கும் வழங்குகிறது. தீர்மானகரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய தெளிவான விவாதங்களின் மையமாக இந்த ஆய்வேட்டை மாற்றுவதே இதன் நோக்கம்.

டெல்லியில் உள்ள ஐ.நா. பெண்கள் அமைப்பு அளித்த நிதி ஆதரவுக்காக சமூக கண்காணிப்பகம் தமிழ்நாடு நன்றி செலுத்துகிறது. அதே போல எங்களின் ஆலோசகர் அருட்தந்தை மனு, இந்த ஆய்வை சரியான திசையில் கொண்டு சென்ற எங்கள் மூத்த ஆய்வாளர் திருமிகு. காமாட்சி, ஆய்வுக்கு உதவியாக இருந்த திருமிகு. சந்தனமேரி, திருமிகு. செம்மலர், திருமிகு. வெளிச்சம் ஷெரீன், கல்வி கேந்திரத்தின் திருமிகு. சின்னப்பன், மனிதவள மேம்பாட்டு அமைப்பின் திருமிகு. தயாளன், ஜனோதயத்தின் திருமிகு.இஸ்ரவேல் ஆகியோரின் ஒத்துழைப்புக்கு நன்றி.

சென்னை **ஜான்குமார்**

ஆகஸ்ட் 2014, இயக்குனர்

**சமூக கண்காணிப்பகம் – தமிழ்நாடு**

“எங்களது மனித உரிமைகள் மீது
கடந்த காலத்தில் நடத்தப்பட்ட மீறல்களுக்காக
சமன்செய்து சரி செய்யும் செயல்பாடுகளைத்
தலித் பெண்கள் தேடிக்கொண்டு இருக்கிறோம்.

எங்களைப் பற்றி எதுவுமே தெரிந்து கொள்ளாத
அரசாங்கங்களை எதிர்த்து நாங்கள்
போராடவில்லை.

எங்களுக்கு அரசியல்
சாசனங்கள் இருக்கின்றன.
எங்கள் அனைத்து மக்களையும்
விடுதலை செய்ய தலித் பெண்கள்
உறுதியேற்றாக வேண்டும்.

எங்களின்
உரிமைகள் சூரியனைப் போல எழுகின்றன,
எங்களுக்காக
சூரியன் உதிப்பதை யாரால்
தடுக்கமுடியும் ?”

**ஹேக் மாநாட்டில் ரூத் மனோரமா, 2006.**

# உள்ளடக்கம்


பக்கம்

I. ஆய்வு 7

II. பல்வேறு நிலைகளில் பாகுபாடுகள் தாக்கம் செய்தல் பற்றிய கருத்தும் கருவியும் 8

III. பாலினப் பார்வை இல்லாத, சிறப்புப் புரிதல் உள்ள பட்ஜெட்டும் 10
சாதியப் புரிதல் இல்லாத, பாலினப் பார்வை கொண்ட பட்ஜெட்டும்

i. தமிழ்நாட்டில் பாலின பார்வை இல்லாத சிறப்புக்கூறு திட்டம் ஒரு பார்வை 11

ii. சாதிய புரிதல் இல்லாத பாலினத்தை புரிந்து கொண்ட பட்ஜெட் (பெண்களை நோக்கிய திட்டங்கள்) 27

IV. பல்வேறு பாகுபாடுகளையும் பற்றிய புரிதல் உள்ள பட்ஜெட்டை தலித் பெண்களுக்காக உருவாக்குதல் ஒரு அவசர தேவை 39

V. தமிழக அரசு திட்டங்களும் தலித் பெண்களும் இடைவெளிகளும் அக்கறைகளும் 40

1. தலித் பெண்களும் கடனுதவி பெறுதலும் “மகளிர் திட்டம்‘ 42

2. தமிழ்நாட்டில் கையால் மலமள்ளும் தொழிலாளிகளுக்கான மறுவாழ்வு 51

3. தலித் பெண்களும் தமிழ்நாட்டில் மகாத்மாகாந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டமும் 60

4. தலித் பெண்களும் அவர்களுக்கு தமிழகத்தில் உயர்கல்வி கிடைப்பதும் 67

# பலவகைப் பாகுபாடுகள் ஒன்றையொன்று குறுக்கிட்டுத் தாக்கம் செய்யும் சந்திப்பில் தலித் பெண்கள்.

"பலவகைப் பாகுபாடுகள் என்பதற்கு ஓர் அர்த்தம் உண்டு. அதாவது, ஒன்றின்மேல் ஒன்றாக, ஒடுக்குதல் நடக்கும்போது, பாகுபாட்டை மனிதர்கள் அனுபவத்தால் உணர்கிறார்கள். இவ்வாறு உணர்ந்து அனுபவிக்கும் குறிப்பிட்ட படிவங்களை அல்லது வழிகளை அந்த ஒடுக்குதலே உருவாக்குகிறது

குறுக்கு நெடுக்காக, மேல், கீழ் எனப் பல நிலைகளில பாகுபாடுகள் அதிகரிக்கின்றன. மேலும், அவை பெண் சந்திக்கும் தடைகளைப் பெரியதாக்குகின்றன. அதனால், அந்தப் பெண்களை மென்மேலும் பயனற்ற, துயர நிலைக்குத் தள்ளுகின்றன.

பாலினப்பாகுபாடு (ஏழ்மை சாதி, கிராமப்புற வீட்டு வசதி இன்னும் பல) தடைகளோடு குறுக்கிட்டுத் தாக்கம் செய்வதால், பன்முக விளைவு ஏற்படுகிறது. அது, தனிப்பட்ட ஒரு பாகுபாட்டைப் போல் அல்லாமல், எதனோடும் ஒப்பிட முடியாததாயும் அழுத்தமானதாகவும் உள்ள விளைவை உண்டு பண்ணுகிறது.

மூன்றுபாகுபாடுகள் குறுக்கிட்டு ஒன்றையொன்று தாக்கம் செய்யும் இடத்தில், தலித்பெண்கள் உள்ளனர். இவை சந்திக்கும் இடம் 'ஒடுக்குதல்' எனும் நச்சு சூழலை வலுப்படுத்துகிறது. மேலும், தலித் பெண்களின் மனித உரிமைகளை அமைப்பு ரீதியாக மறுப்பதையும் பலப்படுத்துகிறது. அவை:

1. தீண்டத்தகாதவர்களாகவும், சாதிக்கு புறம் தள்ளப்பட்டவர்களாகவும் இருப்பதால், சாதிப்பாகுபாட்டைச் சந்திக்கிறார்கள்
2. பெண்களாக இருப்பதால், பாலினப் பாகுபாட்டை எதிர்கொள்கிறார்கள்.
3. ஏழைகள் என்பதால், வர்க்கப் பாகுபாட்டை அனுபவிக்கிறார்கள்

பொதுவாக, தலித் பெண்கள் தங்களின் பிரச்சனைகளை எழுப்பும் போது, சாதிப் பாகுபாட்டின் மேல் வெளிச்சம் விழுகிறதே தவிர, அத்துடன், அதே தலித் பெண்கள் என்கிற பரிமாணத்தில் ஒடுக்குதல்களுக்கு உள்ளாகிற பாலின அம்சங்களைக் காணாமல் ஆக்கி விடுகின்றன.

அது போலவே, பெண்களின் பிரச்சனைகள் விவாதிக்கப்படும் போது, தலித் பெண்களை ஒடுக்குகிற சாதிக்கூறுகள் வெளியில் போடப்படுகின்றன."

(**PWESCR**, "ராஜஸ்தானில் தலித்பெண்கள்", 2009)

# ஆய்வு[1]

தமிழ்நாடு அரசு, தமிழகத்தில் உள்ள தலித் பெண்களுக்காக, பாலினப் புரிதலோடு பட்ஜெட்டு உருவாக்கிடவேண்டும்.அதற்கு, இன்று காணப்படும் பாகுபாடுகளின் பல்வேறு பட்ட நிலைகளை ஆய்வுசெய்தல் எனும் அணுகுமுறை உதவும்.அப்படிப்பட்ட வாய்ப்பு அண்மையில் கிட்டியது. ஐ.நா. பெண்கள் அமைப்பிடம் இருந்து சமூகக் கண்காணிப்பகம் – தமிழ்நாடு, கடந்த 2011 செப்டம்பரில் ஒரு 18 மாத கால ஆய்வுத்திட்டத்தை ஒப்பந்தமாக ஏற்றது. இந்த ஆய்வுதிட்டத்தின் தலைப்பு: தமிழகத்தில் **"தலித் பெண்களுக்கான, பாலினப்புரிதலுடன் – கூடிய – பட்ஜெட்டை உருவாக்குவதற்காகத் தமிழக அரசின் பட்ஜெட்டை ஆய்வுசெய்தல்: பாகுபாட்டின் பல்வேறு பட்ட நிலைகளைக் கணக்கில் கொள்ளும் வகையான ஆய்வு".**

இந்த ஆய்வு, தமிழக அரசு தயாரித்த பட்ஜெட்டுகளில் தலித் பெண்களுக்கு எந்த விதமான பயன்கள் கிடைத்துள்ளன எனக் கண்டுபிடிக்க முனைந்தது. இது ஒரு ஆவண ஆய்வு என்பதால், 2009-10, 2010-11, 2011-12 ஆகிய மூன்று ஆண்டுகளின் தமிழகப் பட்ஜெட்டுகளைக் குறித்தெடுத்து ஆய்வு செய்தது.

இன்றைய கொள்கையை உருவாக்கும்போது அதற்கு எல்லை, வரையறைகள் உள்ளன. அரசு திட்டங்கள் தீட்டுகின்றது. அதே வேளை, தலித் பெண்களின் சமூக, பொருளாதார, வாழ்க்கை நடப்பு யதார்த்தங்களும் உள்ளன. இந்நாள்வரை கருத்தில் கொள்ளப்படவேண்டிய தேவைகள் கொள்கை, திட்டம், யதார்த்தம் ஆகிய மூன்றுக்கும் மத்தியில் இடைவளிகள் உள்ளன.சில முக்கிய அரசு திட்டங்கள் தமிழ்நாட்டில் உள்ள தலித் பெண்களின் வாழ்வுக்கும் வாழ்வாதாரங்களுக்கும் முக்கியமானவையாக இருக்கின்றன. அவற்றை ஆழமாக ஆய்வு செய்வதன் மூலமாக, தலித் பெண்களுக்கும் அரசுத் திட்டங்களுக்குமான இடைவெளிகளை இனங்காண இந்த ஆய்வு முயல்கிறது. எனவே, நாங்கள் வாழ்வாதாரங்கள், நிதிஉதவி கிடைக்கும் தன்மை, உயர்கல்வி கிடைக்கும் தன்மை, கையால் மலம் அள்ளும் பெண் தொழிலாளிகளுக்கான மறுவாழ்வு ஆகியவற்றை முக்கிய பிரச்சனைகளாக எடுத்துக் கொண்டோம்.அந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வுத்திட்டங்களாக உள்ள மகாத்மா காந்தி தேசிய வேலை வாய்ப்பு உறுதி தேசிய திட்டம், மகளிர் திட்டம், +2 படிப்புக்கு மேல் அடுத்த படிப்புகளுக்கான கல்வி உதவித் தொகைகள் மற்றும் கையால் மலமள்ளுவோர் விடுதலை மற்றும் மறுவாழ்வுக்கான தேசிய திட்டம் ஆகியவற்றையே ஆழமான ஆய்வுக்கு எடுத்துக் கொண்டோம்.

இந்த ஆய்வு பல ஆண்டுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு பலரும் பயன் பெற வேண்டும். மேலும், தமிழகத்தில் எதிர்காலத்தில் தொடர்ச்சியான ஓர் ஆதரவு திரட்டும் முயற்சிகளுக்கான உள்ளார்ந்த ஆற்றலும் தரப்படவேண்டும். அதற்காக, இந்த ஆய்வை, போதுமான அளவு பரந்த அடிப்படையிலும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய முறையிலும், சமூக கண்காணிப்பகம் – தமிழ்நாடு உருவாக்கி உள்ளது. தமிழகத்தின் தலித் பெண்கள் குறித்த ஆய்வுகளிலும் களப்பணியிலும் நீண்டகாலம் செயல்படுத்துகின்ற அமைப்புகளையும், தனிநபர்களையும், இந்த ஆய்வுக்கான ஆலோசகர்களாகவும், ஆய்வுக்கான உதவியாளர்களாகவும், கூட்டாகச் செயல்படுபவர்களாகவும், இதில் நாங்கள் இணைத்துள்ளோம்.

தமிழகத்தின் 10க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் பரவி வாழும் பற்பல கிராம முன்னேற்ற பணிகளில் ஈடுபட்டுள்ள சுமார் 160 தலித் பெண்களை நாங்கள் சந்தித்தோம். அவர்களின் வழியாக, மாநில அரசின் குறிப்பிட்ட திட்டங்களை ஆய்வு செய்வதற்கான ஒரு மாதிரி ஆய்வைச் செய்தோம். அதன் மூலம், அடித்தட்டு தலித் பெண்களின் வாழ்க்கை யதார்த்தத்தைப் பற்றிய முக்கியமான புரிதல்களை உருவாக்க இந்த ஆய்வு முயற்சி செய்துள்ளது. மேலும், அதன் மூலம் இந்தத் திட்டங்களுக்கும், தலித் பெண்களின் வாழ்க்கை யதார்த்தங்கள், மற்றும் அவர்களின் உண்மையான தேவைகளுக்கும் மத்தியில் உள்ள இடைவெளிகளை அடையாளம் காட்ட, இந்த ஆய்வு முயற்சி செய்துள்ளது.

தலித் பெண் பஞ்சாயத்துத் தலைவர்கள், தலித் பெண்களின் நலன்களுக்குப் பொருந்தும் வகையில் சிறப்புக் கூறு திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பான எதிர்பார்ப்புகளோடு இருக்கிறார்கள். அத்தகைய, தலித் பெண் தலைவர்கள் குழு ஒன்றோடும் நாங்கள் கலந்துரையாடல் நடத்தினோம்.

[1] Refer www.swtn.org, for the complete study Report on "towerds Budgeting for Dalit women in Tamilnadu - An Intersectional Approach", 2014.

# பல்வேறுபட்ட நிலைகளில் பாகுபாடுகள் தாக்கம் செய்தல் பற்றிய கருத்தும் கருவியும்

குறுக்கிட்டுத் தாக்கம் செய்தல் என்பது ஒரு கருத்து. அது சமூகத்தில் நிகழும் செயல்பாடுகளோடு காணப்படுகிறது. சமூகத்தில் பாகுபாடுகள் உள்ளன. அவை இரண்டுக்கு மேற்பட்ட வகைகளில் உண்டு. அவற்றையே மனிதர்களைத் தாழ்த்துகிற அமைப்புகள் என்றும் சொல்லலாம். இந்தப் பாகுபாடுகள் அல்லது தாழ்த்துகிற அமைப்புகள் தங்களுக்குள் ஒன்றையொன்று தாக்கம் செய்வது உண்டு. இதனால் அமைப்புரீதியாகவும் துடிப்பான வகையிலும் விளைவுகள் ஏற்படுகின்றன. இவற்றைக் கண்டுபிடிப்பதே குறுக்கிட்டுத் தாக்கம் செய்தல் என்ற கருத்தின் பணி.

இதுவே, இன்னொரு பிரச்சனையை நேருக்குநேர் கவனிக்கிறது. அதாவது, இன்றைய நடப்பில் இனவெறி, தகப்பன் மைய அமைப்பு, பொருளாதார ரீதியாகப் பிற்படுத்தப்பட்ட நிலைகள் மற்றும் பிறபாகுபாட்டு அமைப்புகள் ஆகியவை உண்டு. அவை, பெண்கள், ஆண்கள், இனங்கள் மற்றும் பிறகுழுக்களை ஏற்றத்தாழ்வுகளோடு சமூக அடுக்குகளில் இருத்தி அமைப்பு ஆக்குகின்றன.

இந்தப் பிரச்சனையைக் கவனிக்கும் அதே கருத்து இன்னோரு பணியும் செய்கிறது. சமூகதளத்தில் குறிப்பிட்ட சட்டங்களும் கொள்கைகளும் பாரமான சுமைகளை உருவாக்குகின்றன. இந்தச் சுமைகள் குறுக்கும் நெடுக்குமாக உள்ள நிலைகளில் எழுகின்றன. எழுந்து, மக்கள் அதிகாரமில்லாமல் பலவீனமாகும்படி செய்ய ஒரு துடிப்பான இயங்கும் சக்தியை உருவாக்குகின்றன. இவற்றையெல்லாம் கணிக்கிறது, அந்தக்கருத்து.

இதே கருத்து, ஆய்வுசெய்யும் போது ஒரு கருவியாகி உதவுகிறது. நுணுக்கமாகப் பலவழிகளைப் பகுத்து ஆராய உதவுகிறது. இந்த வழிகளில் பாலின அம்சம், அதனோடு உள்ள வர்க்கம், இனம் ஆகிய அடையாளங்களைக் குறுக்கிட்டுத் தாக்கம் செய்வது நிகழ்கிறது. அதனால், ஒடுக்கு முறையும் பாகுபாடும் மென்மேலும் உருவாக்கப்படுகின்றன. இப்படிச் சொல்வதால், பாகுபாட்டின் பல அம்சங்கள் வெளியிலிருந்து சேர்க்கப்பட்டவை என்று அர்த்தம் அல்ல, மாறாக, உள்ளிருந்து

தெளிவான அனுபவங்களைத் தரக்கக்கூடியவைகளாக உள்ளன என்று புரிந்து கொள்ள வேண்டும். இவற்றைப் பல வல்லுனர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறுக்கிட்டுத் தாக்கம் செய்தல், சமூகத் தொடர் நிகழ்வுகளைக் குறிப்பாக சுட்டிக் காட்டுகிறது. இந்தத் தொடர் நிகழ்வுகள் அடுத்தடுத்து நடப்பதோடு, இடைவிடாது வளர்த்து, செயல்படும் வழி முறைகளாக ஆகும். இவை மூலம் அதிகார அமைப்புகளும் ஏற்றத்தாழ்வின் பல்வேறு வடிவங்களும் கட்டி எழுப்பப்படுகின்றன. மேலும் பராமரிக்கப்படுகின்றன.

குறுக்கிட்டுத் தாக்கம் செய்தல் அடிப்படையில் நடக்கும் பகுப்பாய்வு, பல்வேறு வகையான பாகுபாடுகளையும், நலிவுற்றுள்ளத் தாழ்த்தப்பட்ட நிலைகளையும் தெளிவாகக் காட்டுகின்றது. பல்வேறு அடையாளங்கள் தங்களுக்குள் இணைவதால் ஏற்படும் பக்க விளைவாக இந்தப் பாகுபாடுகள் மற்றும் தாழ்நிலைகள் நிகழ்கின்றன,

குறுக்கிட்டுத் தாக்கம் செய்தல் என்கிற கண்ணோக்கில் நடக்கும் பகுப்பாய்விற்கு ஒரு சக்தி உண்டு. அதாவது, இன்றைய சமூகத்தில், நாம் பேசுகிற அதிகார அமைப்புகளும் ஏற்ற தாழ்வுகளும் உண்டு. மேலும், சமூகத் தள அமைப்புகளுக்கு உள்ளும், நிறுவனங்களுக்குள்ளும், இன்று காணப்படும் சித்தாந்தங்களோடும் தனி ஆள் ஒருவர் செயல்படும் சாத்தியம் உள்ளது. என்றாலும் இந்த இரண்டையும் ஒரு சேர இணைக்கும் வல்லமை கொண்டதும், தத்துவார்த்தமானதுமான, ஓர் அறிவார்ந்த வளர்ச்சியே இந்தப் பகுப்பாய்வு.

இதுவரைச் சொன்னதை இந்தியச் சூழலில் ஆழமாகப் பொருத்திப் பார்க்கலாம். குறுக்கிட்டுத் தாக்கம் செய்தல் அடிப்படையிலான பகுப்பாய்வு, பிரச்சனைகளாக கருதுபவை: பாலினம், சாதியம், வர்க்கம் ஆகிய மூன்றுமே பாகுபாட்டின் பல்வேறு விளை நிலங்கள் ஆகும்.

*(The above quotations are mostly from Ramu Bishwakarma & co., "Education of Dalit Women; Beyond a One-Dimensional Policy-Formulation", Himalaya XXVII (1-2),2007).*

*Refer also: "Dalit -Women Speak out - Violence Against Dalit Women in India", NCDHR, 2006; and "Human Rights and Dignity of Dalit Women", Report of the Conference in the Hague, 20-25 November 2006; and "Unheard Voices - Dalit Women", an Alternate Report to the Committee on Elimination of Racial Discrimination (CERD), prepared by the Tamilnadu Women's Forum, 2007.*

## பாலினப் பார்வை இல்லாத, சிறப்புப் புரிதல் உள்ள பட்ஜெட்டும் சாதியப் புரிதல் இல்லாத, பாலினப் பார்வை கொண்ட பட்ஜெட்டும்

கடந்த பல ஆண்டுகளில் தலித் மக்களுக்கான சிறப்புக்கூறு திட்டமும் பாலினப் புரிதல் உள்ள 'பட்ஜெட்டும்' தேசிய அளவிலும் மாநிலங்கள் அளவிலும் ஒப்பீட்டளவில் முற்போக்கான பொது கொள்கைகளாக உருவாகி உள்ளன. இக்கொள்கைகளோடு, சமூக சமத்துவம் மற்றும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய வரவு செலவுத் திட்டமிடுதலும், தேவையான திட்டமுறைமை சேர்ந்து உருவாகி உள்ளன.

மக்கள் தொகைக்கேற்ற விகிதாச்சார அடிப்படையில் உண்மையான தத்துவக் கருத்துகள், சுய முடிவெடுத்தல், வேறுபட்ட விசயங்கள் குவிந்து இணைதல் ஆகியவற்றோடு இன்னும் சில பட்ஜெட் உருவாக்கங்களிலும் நிதி ஒதுக்கீடுகளிலும் சமூக சமத்துவத்தை மையமான கரிசனம் ஆக்குவதில் பெரும் பங்காற்றி உள்ளன. இவற்றோடு விகிதாச்சார அடிப்படையில் உறுதிப்படுத்துவது போதாது என இருந்தால், மத்திய, மாநில அரசுகளின் நிதியாதாரங்களில் பங்கு கிடைப்பதையும் உறுதிப்படுத்தவேண்டும். [2]

ஆனாலும் அப்படிப்பட்ட முற்போக்கான அம்சங்கள் கொண்ட பட்ஜெட்டுகள்கூடத் தலித் பெண்களின் நலனைத் தொடவில்லை. அவர்களுக்குப் போதிய பங்கைத் தரவில்லை. அல்லது அவற்றின் மூலம், தலித் பெண்கள் உண்மையில் நன்மைபெற வாய்ப்போ இடமோ கிடைப்பதில்லை.

[2] Refer www.swtn.org for the earlier publication of SW-TN, especially, “Social Development of Dalits and Tamilnadu Govt Budget”, 1999, :Special Component Plan -Dalit Hopes betrayed?”, 2003 and “Towards Gender Budgeting in Tamilnadu”, 2008.

# தமிழ்நாட்டில் பாலின பார்வை இல்லாத சிறப்புக்கூறு திட்டம் - ஒரு பார்வை

***"தலித் பெண்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை கணக்கில் கொண்டுதான் தலித் சமூகத்தின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும்"***

**- டாக்டர் அம்பேத்கர்**[3]

தலித்துகளுக்கான சிறப்புக்கூறுதிட்டத்தின் முறையான அமலாக்கம் பற்றிய விவாதத்தை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் சமூக கண்காணிப்பகம் ~ தமிழ்நாடுதான் 1990 களின் கடைசியிலேயே அரசு நிர்வாக மட்டத்திலும் சிவில் சமூக மட்டத்திலும் முன்னதாக எடுத்துச்சென்றது.

இந்த திட்டத்தை முறையாக அமல்படுத்துவதற்கான ஆதரவைத் திரட்டும் முயற்சிகளிலும் அதற்கான ஆய்வுப்பணிகளிலும் ஒருங்கிணைக்கும் மையமான ஒரு பணியை சமூக கண்காணிப்பகம் ~ தமிழ்நாடு எடுத்துச்செய்துள்ளது.[4]

அது மட்டுமல்லாமல் சிறப்புக்கூறு திட்டத்தை அமலாக்குவதில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு இருப்பதாக விரிவான அளவில் அங்கீரிக்கப்பட்டு இருக்கிறது. 2010ல் மாநில அரசாங்கம் தனது 2010-11 பட்ஜெட்டில் அந்த வருடத்துக்குரிய திட்டச்செலவில் 19.14 சதவீத நிதியான 3828 கோடிகளை பட்டியல் சாதியினருக்கான துணைத்திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடாக முதல்முறையாக ஒதுக்கி இருப்பதாக பெருமையுடன் அறிவித்தது. பட்டியல் சாதியினருக்கான துணைத்திட்டத்துக்கு என்றே பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ள கணக்கு தலைப்பு எண் 789ன் கீழ் அது கணக்கும் வைக்கப்பட்டது.[5] ஒதுக்கப்பட்ட நிதியில் தரமற்ற, அர்த்தமில்லாத திட்டங்களை போட்டு வீணடித்ததைக் கடுமையாக விமர்ச்சித்தாலும் கூட, பட்ஜெட்டில் தலித் மக்களின் எண்ணிக்கையைப் பொறுத்து போதுமான அளவு நிதி ஒதுக்கீட்டைச் "செய்த மாநில அரசை சிவில் சமூகம் பாராட்டவே செய்தது.[6]

**ஆனால் இங்கே எங்களது நோக்கம் "மாநிலத்தில் போடப்படுகிற பட்ஜெட்டில் உள்ள சிறப்புக்கூறு திட்டத்தில் பாலின பார்வை என்பது இருக்கிறதா?" எனக் கேள்வி கேட்பதே. வேறு வார்த்தைகளில் சொல்வதாக இருந்தால் "மாநிலத்தில்உள்ள தலித் மக்கள் தொகையில் 49.96 சதவீதம் இருக்கிற தலித் பெண்களின் தேவைகளை அக்கறையோடு கணக்கில் எடுத்துக்கொண்ட உணர்வுடன், மாநிலத்தில் உள்ள சிறப்புக்கூறு திட்ட அமலாக்கம் நடைபெறுகிறதா?"**

இந்த கேள்விகளுக்கான பதில்களை கண்டறிய 2009-10, 2010-11, 2011-12 ஆகிய மூன்றாண்டுகளில் மாநில அரசின் பட்ஜெட்டில் சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட எல்லா திட்டங்களையும் விரிவான முறையில் ஆய்வு செய்தோம். கீழ்வரும் பட்டியலில் இதனைக் காணலாம்.

---

[3] Speech to the Dalit Mahila Federation, 1942

[4] Refer Tamilnadu People's Forum for Social Development of Dalits and Tamilnadu Govt. Budget," 1999; and SW - TN,"Special Component Plan - Dalit Hopes Betrayed?", 2004 (both accessible at www.swtn.org/publications)

[5] ADTW Department Policy Note 2010-11

[6] Refer Thudi publication, "We can STILL praise the TN Government", April 2010.

# தமிழ்நாட்டின் சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள்

(ரூ.லட்சங்கள்)

| எண் | கணக்கு தலைப்பு | திட்டங்கள் | 2009-10 | 2010-2011 | 2011-2012 |
|---|---|---|---|---|---|
| 1 | 220201789JA | சர்வசிக்ஷாஅபியான் (அனைவருக்குமான கல்வி திட்டம்) | 8871.27 | 14580.00 | 17992.66 |
| 2 | 220201789JD | அறிவியல் பாடப் புத்தகங்கள் வழங்குதல் | 143.64 | --- | --- |
| 3 | 220201789JE | நடுநிலைப்பள்ளிகளுக்கு கணினிகள் வழங்குதல் | 1000.00 | 1000.00 | 200.00 |
| 4 | 220202789JA | மேல் நிலைப்பள்ளிகளுக்கு கணினி வழங்குதல் | 284.21 | --- | --- |
| 5 | 220202789JB | உயர்நிலைப்பள்ளிகளில் கணினிக்கல்வியை ஒரு பகுதியாக ஆக்குதல் | 36.70 | --- | --- |
| 6 | 220202789JC | 12வது தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கல்வி உதவி | 20.00 | ---- | 20.00 |
| 7 | 220202789JD | 10வது தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கல்வி உதவி | 159.00 | ---- | 159.00 |
| 8 | 220202789JE | மேல் நிலைக்கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டத்தில் மாநில அரசின் பங்கு | 5400.00 | 4500.00 | 4500.00 |
| 9 | 220202789JF | அரசு உதவி பெற்ற பள்ளிகளில் சிறப்பு கட்டணத்தை ஒழிப்பதற்கான இழப்பீடு | 714.00 | ---- | 750.00 |
| 10 | 220202789JG | நகராட்சி பள்ளிகளில் சிறப்பு கட்டணத்தை ஒழிப்பதற்கான இழப்பீடு | ---- | ---- | 10.00 |
| 11 | 220203789JA<br>222501789JD | பள்ளி கல்வி இயக்குனர் பாடப்புத்தகங்கள் வழங்கல் | 958.12 | ---- | ---- |
| 12 | 220203789JA | முதலமைச்சரின் விவசாயிகள் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் உதவி | ---- | 100.00 | 160.00 |
| 13 | 220203789JB | விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் சட்டம் படிப்பதற்கான உதவி | 10.00 | 10.00 | ---- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | 220280789JA | ஐஐடியில் படிக்கிற மாணவர்களுக்கான கல்வி உதவி | 10.28 | 9.30 | ---- |
| 15 | 220280789JB | கால்நடை மருத்துவ படிப்புகளை பயிலுவோருக்கான உதவி | 6.40 | 6.40 | --- |
| 16 | 220280789JC<br>240100789UD | விவசாய அறிவியலை படிப்போருக்கான உதவி | 105.75 | ---- | ---- |
| 17 | 220280789JD | மருத்துவம்,துணை மருத்துவப் படிப்புகளுக்கான உதவி | 32.15 | ---- | 32.15 |
| 18 | 220300789JA<br>420201789JA | நபார்ட் வங்கி கடன்கள் மூலம் உள்கட்டமைப்புகளை கட்டுதல் | 5040.00 | ---- | ---- |
| 19 | 220300789JA | பாலிடெக்னிக்,பொறியியல் படிக்கும் மாணவர்களுக்கான உதவி | ---- | 30.00 | 50.00 |
| 20 | 220300789JB | முதல் தலைமுறை மாணவர்களுக்கான கல்விக்கட்டணங்களைத் திரும்ப தருதல் | 0.00 | --- | 5225.00 |
| 21 | 220400789UA | NSS க்கான செலவினம் | 0.00 | --- | --- |
| 22 | 220400789UB | மேல் நிலை பள்ளிகளில் NSS க்கான செலவினம் | 0.00 | --- | --- |
| 23 | 221080789JA<br>222501282JA | பட்டியல் சாதியினருக்கான ஆரோக்கியத்துக்காக | 5015.00 | --- | --- |
| 24 | 221080789JA | கலைஞர் காப்பீட்டுத்திட்டம் | --- | 25003.01 | 4003.00 |
| 25 | 221080789JB | தேசிய கிராமப்புற சுகாதார இயக்கத்தின் கீழான ஆம்புலன்ஸ் சேவைகளுக்காக | --- | --- | 638.50 |
| 26 | 221080789JC | முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு திட்டம் | ---- | ---- | 3750.00 |
| 27 | 221100793SA | ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் செயலாக்கம் பெருந்திட்டங்கள் | 3989.53 | ---- | ---- |
| 28 | 221501789JA<br>421501789JA | குறைந்த பட்ச தேவைகளுக்கான திட்டத்தின் கீழ் கிராமப்புறத்தில் தண்ணீர் வழங்குதல் | 16000.00 | ---- | ---- |
| 29 | 221603789JB | பட்டியல் சாதியினருக்கான கான்க்ரீட் வீடுகள் கட்டுதல் | 16200.00 | 9000.00 | 63770.71 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30 | 221704789JE | 12வது நிதிக்கமிஷன் முடிவின்படி குடிசை மாற்று வாரியத்துக்கான சிறப்பு நிதி உதவி | 4000.00 | --- | --- |
| 31 | 221704789JG | ஒருங்கிணைந்த வீட்டுவசதிக்கும் குடிசைப்பகுதி மேம்பாட்டுக்குமான திட்டம் | 1320.00 | 2000.00 | 400.00 |
| 32 | 221704789JH | ஜவகர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் இயக்கத்தின் அடிப்படையில் நகர்ப்புற ஏழைகளுக்கு அத்தியாவசிய தேவைகளை அளித்தல் | 4000.00 | 5200.00 | 9600.00 |
| 33 | 221704789JT | 13வது நிதிக்கமிஷன் முடிவின்படி குடிசைப்பகுதி மேம்பாட்டுக்கான நிதி உதவி | --- | --- | 1875.00 |
| 34 | 222060789JA<br>222501789JC | வண்ணத்தொலைகாட்சி பெட்டிகள் வழங்கியது | 5000.00 | --- | --- |
| 35 | 222060789JA | வண்ணத்தொலைகாட்சி பெட்டிகள் வழங்கியது. | ---- | 15000.00 | ---- |
| 36 | 222501102UA | கூட்டுறவுகளில் உள்ள பட்டியல் சாதியினர்களான விவசாயிகளுக்கான உதவி | 20.00 | --- | --- |
| 37 | 222501277<br>JA/JB/JC/JG/JI/JJ | பட்டியல் சாதியினருக்கான நல்வாழ்வு கல்வி | 3111.87 | ---- | ---- |
| 38 | 222501277JG | பள்ளிக்கல்வி | ---- | 2650.01 | 2362.6139 |
| 39 | 222501277JJ | ஆதிதிராவிடர் ஆரம்ப பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக உயர்த்துதல் | ---- | 171.17 | 201.11 |
| 40 | 222501277JL | ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப்பள்ளிகளாக உயர்த்துதல் | ---- | 154.48 | 202.93 |
| 41 | 222501277JR | பட்டியல் சாதியினருக்கும் பழங்குடிகளுக்குமான சிறப்பு ஐடிஐ களுக்கு | --- | 28.64 | 46.20 |
| 42 | 222501277JS | பட்டியல் சாதியினர்,பழங்குடியினர் கிறிஸ்துவராக மதம் மாறிய பட்டியல் சாதியினருக்கு BA/BSC/B.Com படிப்புகளுக்காக கல்வி உதவித்தொகைகள் | --- | 94.50 | 94.50 |
| 43 | 222501277JU/<br>JX/JY/KB/KC/<br>KD | பட்டியல் சாதியினருக்கான நல்வாழ்வு கல்வி | 3818.97 | ---- | ---- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 44 | 222501277JX | 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் பட்டியல் சாதியை சார்ந்த பெண்குழந்தைகளுக்கான கல்விக்கு சிறப்பு ஊக்கத்தொகை | 300.00 | 400.00 | 400.00 |
| 45 | 222501277JY | 6ஆம் வகுப்பு படிக்கும் பட்டியல் சாதியை சார்ந்த பெண்குழந்தை களுக்கான கல்விக்கு சிறப்பு ஊக்கத்தொகை | 300.00 | 400.00 | 400.00 |
| 46 | 222501277KB | கல்லூரி செல்லும் பட்டியல் சாதியை சேர்ந்த மாணவர்களுக் கான முதலமைச்சரின் மெரிட் அவார்ட் | --- | 67.64 | 67.64 |
| 47 | 222501277KD | விடுதிகள் | --- | 1542.78 | 2415.87 |
| 48 | 222501277KE | முதுகலை படிக்கும் பட்டியல் சாதியினருக்கான விடுதிகள் திறப்பு | --- | 118.73 | 128.20 |
| 49 | 222501277KF | ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்துதல் | ---- | 687.19 | 713.77 |
| 50 | 222501277KH | பட்டியல் சாதியினர் பழங்குடியினர் வெளிநாட்டில் கல்வி பயிலுவதற்கான கல்வி உதவித்தொகைகள் | 0.01 | ---- | 21.55 |
| 51 | 222501277KJ | 10வது,12வது படிக்கும் மாணவிகளுக்கான சைக்கிள் வழங்கல் | 1488.76 | 2077.87 | 2268.39 |
| 52 | 222501277KK | மதம்மாறிய பட்டியல் சாதியினர் முதுநிலை படிப்புகளை படிக்கும்போது இலவசக்கல்வி | 50.00 | 52.50 | 52.50 |
| 53 | 222501277KL | பட்டியல் சாதியினருக்கும் பழங்குடி மக்களுக்குமான உயர் கல்விக்கான கல்வி உதவித்தொகை | 1420.00 | 1696.73 | 1813.50 |
| 54 | 222501277KM | கல்விச்சலுகைகள் | 12463.57 | 12500.00 | 12463.57 |
| 55 | 222501277KN | பல்கலைகழகங்களில் விடுதிகளை கட்டுதல் | 0.01 | ---- | ---- |
| 56 | 222501277KO | 10வது 12வது படிக்கிற மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கல் | 1380.53 | 1854.92 | 2017.72 |
| 57 | 222501277KP | தொழிற்முறை படிப்புகளுக்கு நுழைவுத்தேர்வுகளுக்கான பயிற்சி | 0.01 | --- | --- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 58 | 222501277KQ | ஆதி திராவிடர் பள்ளிகளில் 10வது 12வது படிக்கிறவர் களுக்கான சிறப்பு பயிற்சி | 60.00 | 67.32 | 73.26 |
| 59 | 222501277KR | பட்டியல் சாதியினருக்கான நல்வாழ்வு திட்டங்கள் | 2500.00 | 2500.00 | 2500.00 |
| 60 | 222501277KS | பெயர் பெற்ற பள்ளிகளில் உள்ள தரமிக்க மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகைகள் | 173.60 | 180.00 | 180.00 |
| 61 | 222501277SA | கல்விரீதியான சலுகைகள் | 2656.35 | --- | --- |
| 62 | 222501277SB | பட்டியல் சாதிகளை சார்ந்த மாணவர்களின் தரத்தை உயர்த்துதல் | 0.04 | --- | --- |
| 63 | 222501277UA | கல்விரீதியான சலுகைகள் | 146.99 | 150.60 | --- |
| 64 | 222501282JA | பட்டியல் சாதியினர் குடியிருப்பு களில் குடிநீர் கிணறுகள் | --- | 15.00 | 15.00 |
| 65 | 222501283 JA/JB/JE/JH/JQ | பட்டியல் சாதியினர் நல்வாழ்வு வீட்டு வசதி | 1157.30 | --- | --- |
| 66 | 222501283JA | பட்டியல் சாதியினருக்கான வீட்டுமனைகள் உள்கட்டமைப்புகளுக்காக | --- | 1103.43 | 1103.43 |
| 67 | 222501283JQ | தமிழ்நாடு பரிசுத்திட்டத்தின் அடிப்படையில் பட்டியல் சாதியினருக்கான வீட்டுமனைகள் உள்கட்டமைப்புகள் | --- | 111.09 | --- |
| 68 | 222501789JA | பாடப்புத்தகங்களை வழங்குதல் | 1235.90 | 1313.62 | 1604.48 |
| 69 | 222501789JB | சீருடைகளை வழங்கல் | 1157.20 | 1211.86 | 3504.93 |
| 70 | 222501789JD | பாடப்புத்தகங்களை வழங்கல் | 0.00 | 1172.64 | 1480.32 |
| 71 | 222501789JE | பள்ளி செல்லும் குழந்தைகளுக் கான காலணிகளை வழங்கல் | --- | --- | 475.00 |
| 72 | 222501793SB | பட்டியல் சாதியினருக்கான நல்வாழ்வுத்திட்டங்கள் | 5200.00 | --- | --- |
| 73 | 222501800 *JA/ JB/JI/JL* 622501800 *JA05/07* | பட்டியல் சாதியினருக்கான நல்வாழ்வு இதர செலவினங்கள் | 226.54 | --- | --- |
| 74 | 222501800JA | பட்டியல் சாதிகளை சேர்ந்த மாணவர்களுக்கான டைப்ரைட்டிங், சுருக்கெழுத்து பயிற்சிகள் | --- | 3.98 | --- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 75 | 222501800JB | தொழில்நுட்ப ரீதியாக பயிற்சி பெற்றவர்களுக்கான உதவி | --- | 100.01 | 100.01 |
| 76 | 222501800JI | மயானங்களுக்கு செல்வதற்கான பாதைகளை அமைப்பதற்காக | --- | 75.84 | 75.84 |
| 77 | 222501800 JC/ JD/JE/JJ/JN/ LS | பட்டியல் சாதியினர்களுக்கான நல்வாழ்வு இதர செலவினங்கள் | 62.00 | --- | --- |
| 78 | 222501800LS | பட்டியல் சாதியினருக்கும் பழங்குடியினருக்கும் ஆன பயிற்சி வழிகாட்டி மையங்களை அமைத்தல் | --- | 64.27 | 57.68 |
| 79 | 222501800LX | டாக்டர் அம்பேர்கர் விருதுகள் | --- | 1.25 | --- |
| 80 | 222501800UL | குடிமை உரிமைகள் பாதுகாப்பு சட்டம்(1955) த்தை அமலாக்குவதற்கான நிர்வாக வசதிகளுக்காக | --- | 27.40 | 22.81 |
| 81 | 223001789JA | அமைப்புசாரா தொழிலாளர்களின் நல்வாழ்வு கழகத்துக்கான நிதி உதவி | 0.00 | 1500.00 | 2700.00 |
| 82 | 223003789JA | வேலை இல்லாத இளைஞருக்கான திறன் மேம்பாட்டு திட்டத்துக்காக | 240.00 | 248.35 | 240.00 |
| 83 | 223502789JD | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தின் மகளிர் திட்டம் | 744.88 | 1331.96 | 1259.89 |
| 84 | 223502789JE | சுய உதவிக்குழுக்களுக்கான பயிற்சியின் ஒரு பகுதிக்காக | 500.00 | --- | 847.39 |
| 85 | 223502789JF | வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள பெண்களின் திருமண உதவி | 5000.00 | 10000.00 | 12855.25 |
| 86 | 223502789JG | சுய உதவிக்குழுக்களில் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள பெண்களின் பெண்குழந்தைகளுக்கான திருமண உதவி | 500.00 | --- | 500.00 |
| 87 | 223502789JH | வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள பெண்களின் பெண்குழந்தை களுக்கான திருமண உதவி | 100.00 | --- | 399.17 |
| 88 | 223502789JI | தமிழ்நாடு கலப்பு மணங்களுக்கான உதவி திட்டம் | 470.00 | --- | 698.72 |
| 89 | 223502789JJ | ஆதரவற்ற விதவைகளுக்கு தையல் மிஷின்கள் வழங்குதல் | 22.65 | --- | 45.50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 90 | 223502789JL | ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கான திருமண உதவி | 14.80 | --- | 52.25 |
| 91 | 223502789JM | ஏழை விதவைகளின் பள்ளிக்குழந்தைகளுக்கான உதவி | 2.30 | --- | --- |
| 92 | 223502789JN | பெண் குழந்தைகள் நல்வாழ்வு திட்டத்துக்கான உதவி | 1875.00 | --- | 1875.00 |
| 93 | 223502789JO | உலக வங்கி உதவியிலான TNEPR Projectக்குக்காக | --- | 5524.25 | --- |
| 94 | 223502789PA | உலக வங்கி உதவியிலான TNEPR Projectக்குக்காக | --- | --- | 9453.30 |
| 95 | 223560200JK<br>223560789JS | வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ளவர்களுக்கு கைத்தறி துணி வழங்கல் | 6400.00 | --- | --- |
| 96 | 223560789JB | அன்ன பூர்ணா திட்டத்தை நிறைவேற்றுவதற்காக | 110.60 | 110.60 | 110.60 |
| 97 | 223560789JC | வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள பெண்களின் பிரசவங்களுக்கான பேறுகால உதவி | 7000.00 | 9000.00 | 14893.05 |
| 98 | 223560789JD | வேலையில்லாத இளைஞர்களுக்கான நிவாரணம் வழங்க | 1845.80 | 1894.32 | 1200.00 |
| 99 | 223560789JE | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதியங்கள் | 14696.64 | 14000.00 | 26457.24 |
| 100 | 223560789JF | ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகள், விதவைகள் ஓய்வூதியங்கள் | 1106.99 | 1181.25 | 2337.03 |
| 101 | 223560789JG | ஆதரவற்ற விவசாயக் கூலிகளுக்கான ஓய்வூதியங்கள் | 1174.98 | 1775.00 | 6526.21 |
| 102 | 223560789JH | கணவனால் கைவிடப்பட்டோருக்கான ஓய்வூதியங்கள் | 7250.90 | 1464.00 | 3105.10 |
| 103 | 223560789JI | விதவைகள், மாற்றுதிறனாளிகள், ஓய்வூதியர்களுக்கு இலவச ரேஷன் | 291.85 | 441.29 | 441.29 |
| 104 | 223560789JJ | வயதான ஓய்வூதியர்களுக்கான வேட்டி சேலைகள் வழங்க | 988.97 | 1523.02 | 1523.02 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 105 | 223560789JK | நிவாரண திட்டம் | 600.07 | 404.31 | 404.31 |
| 106 | 223560789JL | ஈமச்சடங்குகளுக்கான உதவி | 2104.00 | 2104.00 | 1993.49 |
| 107 | 223560789JM | விவசாய தொழிலாளி வாரியங்களின் உறுப்பினர்களின் திருமண உதவி | 362.00 | 362.00 | 48.24 |
| 108 | 223560789JN | ஓய்வூதிய உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான திருமண உதவி | 1990.00 | 1990.00 | 482.04 |
| 109 | 223560789JO | உறுப்பினர்களுக்கான முதியோர் ஓய்வூதியம் | 381.70 | 384.45 | 1677.70 |
| 110 | 223560789JP | ஓய்வூதியம்உறுப்பினர்களின் விபத்துகள், மரணங்கள், ஈமச்சடங்குகளுக்கான உதவி | 278.00 | 278.00 | 826.42 |
| 111 | 223560789JR | இலவச கேஸ் சிலிண்டர்களும் கேஸ் அடுப்புகளும் வழங்குவதற்காக | 3000.00 | 4500.00 | --- |
| 112 | 223560789JS | ஏழை மக்களுக்கு கைத்தறி துணி வழங்கல் | --- | 6400.00 | 6400.00 |
| 113 | 223560789JT | ஆதரவற்ற விதவைகளுக்கான ஓய்வூதியம் | 1139.34 | 4425.00 | 9982.90 |
| 114 | 223560789JU | எலக்ட்டிரிக் பேன், மிக்சி, கிரைண்டர்கள் இலவசமாக வழங்க | --- | --- | 31250.00 |
| 115 | 223560789SA | இந்திரா காந்தி தேசிய மாற்றுத்திறனாளி ஓய்வூதிய திட்டம் | --- | 393.75 | --- |
| 116 | 223560789SB | இந்திராகாந்தி தேசிய விதவை ஓய்வூதிய திட்டம் | --- | 3150.00 | --- |
| 117 | 223602789JD | தமிழகத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் கட்டம் III | 4389.08 | 5700.01 | 5700.01 |
| 118 | 223602789JE | சத்தான மதிய உணவு திட்டம்(59 வயது குழந்தைகளுக்கானது) | 1724.36 | 3139.49 | 2307.45 |
| 119 | 223602789JG | 24 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு உணவளித்தல் | 685.67 | 2042.26 | 2415.23 |
| 120 | 223602789JH | புரதம் நிறைந்த சத்துணவை வழங்கல் | 3.61 | --- | --- |
| 121 | 223602789JI | சத்தான மதிய உணவு திட்டம் (10~14 வயது குழந்தைகளுக்கு ) | 678.62 | 1748.95 | 2081.87 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 122 | 223602789JJ | முதியோர் பென்ஷன் வாங்குவோருக்கு சத்தான மதிய உணவுத்திட்டத்தின் கீழ் உணவுவழங்கல் | 106.23 | 58.70 | 73.50 |
| 123 | 223602789JK | மதிய உணவுத்திட்டத்தில் முட்டை வழங்கல் | 3534.34 | 3480.44 | 8065.98 |
| 124 | 223602789JL | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் முட்டைவழங்கல் | --- | 1776.20 | 1770.19 |
| 125 | 223602789JM | மதிய உணவுத்திட்டத்துக்கான பொருள்கள் வழங்கல் | | 115.14 | 152.18 |
| 126 | 223602789JN | சத்தான மதிய உணவு (5~9 வயதுக்குழந்தைகளுக்கு) | --- | 1679.61 | 1373.66 |
| 127 | 223602789JO | சத்தான மதிய உணவு (10~14 வயதுக்குழந்தைகளுக்கு) | --- | --- | 1049.97 |
| 128 | 240100789JA | நெல்,சிறு தானிய வகைகளை வாங்கவும் வினியோகிக்கவும் | 656.36 | 951.53 | 1066.53 |
| 129 | 240100789JB | பயறு, பருப்பு வகைகளை பெருக்க, வினியோகிக்க | 240.62 | 240.62 | 240.62 |
| 130 | 240100789JC | பயிர் பாதுகாப்பு | 35.43 | 35.43 | 35.43 |
| 131 | 240100789JD | தோட்ட மேம்பாடு | 45.95 | 45.95 | 73.15 |
| 132 | 240100789JE | எண்ணை வித்துக்களை உற்பத்தி அதிகரித்தல் | 455.22 | 456.15 | 456.15 |
| 133 | 240100789JI | பம்ப்செட்டுகளை வைத்து விவசாயிகளின் வருமானத்தை கூட்டுதல் | 250.00 | 250.00 | --- |
| 134 | 240100789JJ | விவசாய காப்பீட்டுக்கான அரசு மானியம் | 712.50 | 712.50 | 712.50 |
| 135 | 240100789JK<br>240100789JL | NADP-RKVY திட்டம் (விவசாயம் /தோட்டக்கலை) | 477.03 | --- | --- |
| 136 | 240100789JK | NADP-RKVY திட்டம் (விவசாயம்) | --- | 1377.60 | 1972.69 |
| 137 | 240100789JL | NADP-RKVY திட்டம் (தோட்டக்கலை) | --- | 750.00 | 884.72 |
| 138 | 240100789 JM/JN/JO/JP/JQ | பயிர் காப்பீடு திட்டங்கள் | 287.50 | --- | --- |
| 139 | 240100789JM | பயிர் காப்பீடு திட்டங்களுக்கான அரசு மானியம் | --- | 37.50 | 37.50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 140 | 240100789JN | பயிர் காப்பீடு திட்டத்துக்கான அரசு மானியம் (தோட்டக்கலை) | --- | 12.50 | 12.50 |
| 141 | 240100789JO | விவசாயக்காப்பீடு திட்டத்துக்கான அரசு மானியம் (தோட்டக்கலை) | --- | 167.90 | 237.50 |
| 142 | 240100789JP | தேசிய விவசாயக்காப்பீடு திட்டம் | --- | 8000.00 | 8000.00 |
| 143 | 240100789JQ | நெல் கொள்முதலின்போது விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை | | 8000.00 | 4000.00 |
| 144 | 240100789PB | TNIAM-WARM திட்டத்தின் கீழ் மைக்ரோ பாசனம் | --- | 293.20 | 133.80 |
| 145 | 240100789PC | TNIAMWARM திட்டத்தின் கீழ் குளங்கள் இல்லாத பகுதியில்மைக்ரோ சாசனம் | --- | --- | 133.20 |
| 146 | 240100789UA | ஒருங்கிணைந்த தானியப்பயிர்கள் மேம்பாட்டு திட்டம் அரிசி | 337.00 | 30.20 | 32.00 |
| 147 | 240100789UB | தீவிர பருத்தி மேம்பாட்டு திட்டம் | 100.00 | 25.00 | 22.25 |
| 148 | 240100789UC | ஒருங்கிணைந்த தானியப்பயிர்கள் மேம்பாட்டுத்திட்டம் | 161.14 | 39.75 | |
| 149 | 240100789UD | பனை எண்ணை மேம்பாட்டு திட்டம் | --- | 25.72 | 30.72 |
| 150 | 240100789UF | கரும்பு அடிப்படையாக கொண்ட பயிர் தொழில் | 0.02 | --- | --- |
| 151 | 240100789UH | எண்ணை வித்துக்கள் உற்பத்தி திட்டம் | 258.68 | 64.66 | 67.16 |
| 152 | 240100793UA | ஒருங்கிணைந்த சோளப்பயிர்கள் மேம்பாட்டுத்திட்டம் சோளம் | 20.50 | --- | --- |
| 153 | 240200789JC | NADP-RKVY விவசாய பொறியியல் | --- | 1100.00 | 1446.00 |
| 154 | 240300789JA | கால்நடை மருந்தகங்கள் | 49.70 | 49.68 | 61.76 |
| 155 | 240300789JB | கால்நடை மருத்துவமனைகளை மேம்படுத்துதல் | 8.60 | 5.88 | --- |
| 156 | 240300789JC | நடமாடும் கால்நடை மருத்துவ பிரிவுகள் | 19.10 | 16.65 | 21.95 |
| 157 | 240300789JE | வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள மக்களுக்குஆடுகளை விநியோகித்தல் | --- | --- | 3375.00 |
| 158 | 240300789JF | வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள மக்களுக்கு பால் தரும் பசுக்கள் தருதல் | --- | --- | 1400.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 159 | 242500789JA | கூட்டுறவு அமைப்புகளுக்கு வட்டி மானியம் | 4000.00 | 4000.00 | 4000.00 |
| 160 | 250106789JA | SJGSY திட்டம் | 657.10 | | 740.20 |
| 161 | 250501789JD | இந்திரா அவாஸ் யோசனா | --- | --- | 6832.57 |
| 162 | 250501789JE | இந்திரா அவாஸ் யோசனா திட்டத்தின் கீழ் குடிசைகளை மேம்படுத்தல் | 440.52 | --- | --- |
| 163 | 250501789JH | மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதி திட்டம் MGNREGS | 10500.00 | 15000.00 | 17610.00 |
| 164 | 347500789JA | நகர்ப்புற கூலி வேலை திட்டம் | 94.91 | --- | 85.36 |
| 165 | 347500789JB | Assistance to SJSRY community components க்கான உதவி | 41.23 | --- | 28.46 |
| 166 | 400103789OS | மின் மாற்றமும் வினியோகமும் | --- | --- | 11796.17 |
| 167 | 420201789JA | பள்ளி கட்டிடங்களை கட்டுதலும் NABARD வங்கியின் RIDF நிதிகளில் இருந்து உள்கட்டமைப்புகளும் | --- | 5000.00 | 7384.55 |
| 168 | 420201789JB | மடிக்கணினிகளை இலவசமாக வழங்கல் | --- | --- | 22800.00 |
| 169 | 421501789JA | குறைந்த பட்ச தேவைகள் திட்டத்தின் கீழ் கிராமப்புற தண்ணீர் விநியோகம் | --- | 15134.00 | 15064.00 |
| 170 | 421501789JB | தேசிய கிராமப்புற குடிநீர் திட்டம் | --- | --- | 9481.00 |
| 171 | 421602789QA | அவசர சுனாமி மறுகட்டுமான திட்டம் | 499.00 | --- | --- |
| 172 | 421603789JA | கலைஞர் வீட்டுவசதி திட்டம் | --- | 78000.00 | --- |
| 173 | 421603789JB | சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம் | --- | --- | 18220.00 |
| 174 | 422501190JE | பொதுத்துறையிலும் அரசு நிறுவனங்களிலும் முதலீடு செய்தல் | 331.50 | 331.50 | 1320.01 |
| 175 | 422501277JA | ஆதி திராவிட மாணவர் விடுதிகளில் உள்கட்டமைப்புகளை உருவாக்கல் | --- | 1302.50 | 4835.50 |
| 176 | 422501277JB | ஆதி திராவிட மாணவர்களுக்கான விடுதிகள் கட்டுதல் | 139.20 | --- | --- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 177 | 422501277JI | பட்டியல் சாதியினருக்கான விடுதிகளை கட்டுதல் | 0.01 | --- | --- |
| 178 | 422501277JK | NABARD கடன்களை பயன்படுத்தி ஆதி திராவிடர் பள்ளிகளின் உள்கட்டமைப்பு களை மேம்படுத்துதல் | 0.01 | --- | --- |
| 179 | 422501277SB | பட்டியல் சாதியினர் பழங்குடியினரை சார்ந்த பெண்களுக்கான விடுதிகளுக்கு | 500.00 | --- | --- |
| 180 | 422501277UA | அரசு மாணவர் விடுதிகளில் கட்டுமான பணிகள் | 250.00 | --- | --- |
| 181 | 422501800JA | சமூக நல கூடங்களை கட்டுதல் | 0.01 | 100.01 | 100.01 |
| 182 | 422501800JB | RIDF திட்டத்தின் கீழ் பட்டியல் சாதியினர் குடியிருப்புகளுக்கு உள்கட்டமைப்புகள் | 6087.00 | --- | --- |
| 183 | 451500789JA | அண்ணா மறுமலர்ச்சி திட்டம் கிராமங்கள் | 9152.20 | 9058.83 | --- |
| 184 | 451500789JB | சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டம் | 7050.00 | --- | 9400.00 |
| 185 | 451500789JC | அண்ணா மறுமலர்ச்சி திட்டம் ஒன்றியங்கள் | 500.00 | --- | --- |
| 186 | 451500789JD<br>505404789JA | NABARD கடன்களின் மூலம் கிராமப்புற சாலைகளை மேம்படுத்துதல் | 7100.01 | --- | --- |
| 187 | 451500789JD | NABARD நிதிகளின் மூலம் சாலைப்பணிகள் | --- | 7000.00 | --- |
| 188 | 505404789JC | ஒருங்கிணைந்த சாலை மேம்பாடு | 12238.00 | 13385.00 | 31000.00 |
| 189 | 622501800JA | பட்டியல் சாதியினர் பழங்குடியினர் கிறிஸ்துவ மதம் மாறியவர்கள் தொழில்முறை படிப்புகள் படிப்பதற்கு கடன்கள் | 3.44 | 3.50 | --- |
| 190 | 622501800JE | கூட்டுறவு சங்கங்களில் உள்ள பட்டியல் சாதியினருக்கு வட்டி இல்லாத கடன்கள் | 25.00 | 25.00 | 25.00 |
| **மொத்தம்** | | | **261544.37** | **382783.50** | **500749.52** |

பின்குறிப்பு: நமது ஆய்வுக்காலமான மூன்று ஆண்டுகளிலும் எந்த ஒதுக்கீடும் இல்லாத திட்டங்கள், மேற்கண்ட பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

*ஆதாரம்:*

*2009-10 தமிழ்நாடு நிதித்துறை, பட்ஜெட் வெளியீடு 62*
*(ஆண்டு திட்டம் திட்டம்பட்ஜெட் லிங்க்) இணைப்பு*
*IV (சிறப்பு கூறு திட்டம்) மாநில அரசு திட்டங்கள் (பக்கங்கள் 254 - 269)*

*2010-11 தமிழ்நாடு நிதித்துறை, பட்ஜெட் வெளியீடு 62*
*(ஆண்டு திட்டம் திட்டம் பட்ஜெட் லிங்க்) பட்டியல்சாதியினர் துணைத்திட்டம் (பக்கங்கள் 47-53)*

*2011-12 தமிழ்நாடு நிதித்துறை, பட்ஜெட் வெளியீடு 65*
*(ஆண்டு திட்டம் திட்டம் பட்ஜெட் லிங்க்) பட்டியல்சாதியினர் துணைத்திட்ட விபரங்கள் பக்கங்கள் 79-91)*

## “தலித் பெண்களை நோக்கிய” திட்டங்கள்

(ரூ.லட்சங்கள்)

| எண் | கணக்கு தலைப்பு | திட்டம் | 2009-10 | 2010-11 | 2011-2012 |
|---|---|---|---|---|---|
| 44 | 222501277JX | பட்டியல் சாதிகளை சேர்ந்த பெண்களின் கல்விக்காக சிறப்பு ஊக்கத்தொகை ( III-V வகுப்புகளுக்கு ) | 300.00 | 400.00 | 400.00 |
| 45 | 222501277JY | பட்டியல் சாதிகளை சேர்ந்த பெண்களின் கல்விக்காக சிறப்பு ஊக்கத்தொகை (VI வகுப்புக்கு ) | 300.00 | 400.00 | 400.00 |
| 51 | 222501277KJ | 10வது 12வது படிக்கிற மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கல் | 1488.76 | 2077.87 | 2268.39 |
| 52 | 222501277KK | மதம் மாறிய பட்டியல்சாதிகளை சேர்ந்த, முதுகலை படிப்புகளை படிப்போருக்கு இலவச கல்வி | 50.00 | 52.50 | 52.50 |
| 83 | 223502789JD | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தின் மகளிர் திட்டம் | 744.88 | 1331.96 | 1259.89 |
| 84 | 223502789JE | சுய உதவிக்குழுக்களின் பயிற்சியின் ஒரு பகுதியாகுதல் | 500.00 | --- | 847.39 |
| 85 | 223502789JF | வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள பெண்களுக்கு திருமண உதவி | 5000.00 | 10000.00 | 12855.25 |
| 87 | 223502789JH | வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள பெண்களின் மகள்களுக்கு திருமண உதவி | 100.00 | --- | 399.17 |
| 89 | 223502789JJ | ஆதரவற்ற விதவைகளுக்கு தையல் மிஷின்கள் வழங்கல் | 22.65 | --- | 45.50 |
| 90 | 223502789JL | அனாதை பெண்களுக்கு திருமண உதவி | 14.80 | --- | 52.25 |
| 92 | 223502789JN | பெண் குழந்தைகளின் நல்வாழ்வுக்கான திட்டத்துக்கான உதவி | 1875.00 | --- | 1875.00 |
| 97 | 223560789JC | வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள பெண்களின் பிரசவங்களுக்கு பேறுகால உதவி | 7000.00 | 9000.00 | 14893.05 |
| 102 | 223560789JH | கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ஓய்வூதியம் | 7250.90 | 1464.00 | 3105.10 |
| 103 | 223560789JI | விதவைகள் மாற்றுத்திறனாளிகள் முதியோர் ஓய்வூதியர்களுக்கான ரேஷன் திட்ட முறைகள் | 291.85 | 441.29 | 441.29 |
| 113 | 223560789JT | ஆதரவற்ற விதவைகளுக்கான ஓய்வூதியம் | 1139.34 | 4425.00 | 9982.90 |
| 116 | 223560789SB | இந்திரா காந்தி தேசிய விதவை ஓய்வூதிய திட்டம் | --- | 3150.00 | --- |
| 179 | 422501277 SB | SC/ST பெண்களுக்கான விடுதிகள் கட்டுதல் | 500.00 | --- | --- |
| | | **மொத்தம்** | **26578.18** | **32742.62** | **48877.68** |

12 முதல் 23 வரையான பக்கங்களில் சுமார் 190 திட்டங்கள் தமிழகத்தின் சிறப்புக் கூறுதிட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றில் ரூ.2615.44 கோடிகள் (2009-10), ரூ. 3827.84 கோடிகள் (2010-11) and ரூ.5007.50 கோடிகள் (2011-12). நிதி ஒதுக்கப்பட்டுள்ளன.

"இந்த 190 திட்டங்களில் குறிப்பாக தலித் பெண்களை நோக்கி உள்ளவை எத்தனை?" என்பதே நமது அடுத்த கேள்வி.

**பக்கம் 25ல் உள்ள பட்டியலில் மூன்று வருடங்களாக சிறப்புக்கூறு திட்ட நிதிகளை கொண்டு போடப்பட்டு உள்ள ஏறத்தாழ 190 மாநில அரசு திட்டங்களில் வெறும் 17 மட்டும்தான் தலித் பெண்களை நோக்கி இருக்கின்றன.**

**தலித் மக்கள் தொகையில் 49.96 சதவீதமாக இருக்கிற தலித் பெண்களுக்கு, அந்த மூன்று நிதியாண்டுகளிலும் முறையே 10.16 சதவீதமும், 8.55 சதவீதமும், 9.76 சதவீதமும் தான் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

தமிழகத்தில் சிறப்புக்கூறு திட்டத்தை போன்ற ஒரு ஒப்பீட்டளவில் முற்போக்கான திட்டம் கூட ஒரு பாலின பார்வை இல்லாமல் இருப்பது வெளிப்படையாக தெரிகிறது.திட்டங்களை பொறுத்தவரை குறிப்பாக தலித் பெண்களின் நல்வாழ்வை நோக்கமாக கொண்ட எவ்விதமான உத்தியும் இல்லாமல் இருப்பதாகவே தோன்றுகிறது.

வெறும் வெற்று கணக்குகளாகவும் ஒதுக்கீடுகளாகவும் உள்ள இந்த நிலைமையை கடந்து சென்று பார்த்தால், சாதாரண திட்டங்களின் தரம் கூட தீவிரமாக ஆய்வு செய்யப்பட வேண்டியதாக இருக்கும்.திருமணம், பேறுகால உதவிகள், ஓய்வூதியங்களும், தலித்பெண் கல்வி, தொடர்பான திட்டங்களை தவிர, சொத்து உருவாக்கம், வேலைவாய்ப்பு ஆகியவற்றை உருவாக்கக்கூடியதாக இந்த திட்டங்கள் இல்லை.

**சிறப்புக்கூறு திட்டத்தை தங்களுடையதாக தலித் பெண்கள் ஏற்க வேண்டும் என்றால் அவர்களின் தேவைகளையும் கோரிக்கைகளையும் அது உள்ளடக்க வேண்டும்.அது தலித் பெண்களுக்காக போதுமானஅளவு நிதி ஒதுக்குவதிலும் தரமான திட்டங்களை உருவாக்குவதிலும் வெளிப்பட வேண்டும்.**

## சாதிய புரிதல் இல்லாத பாலினத்தை புரிந்து கொண்ட பட்ஜெட்டிங் (பெண்களை நோக்கிய திட்டங்கள்)

சிவில் சமூகத்தின் தொடர்ச்சியான முயற்சிகளும் மகளிருக்கும்[7] குழந்தைகளுக்குமான மத்திய அமைச்சகத்தின் முயற்சிகளும் இருந்தாலும்,[8] தமிழகத்தின் அரசாங்கங்களும் அதிகாரவர்க்கமும் கடந்த பல ஆண்டுகளாக தமிழகத்துக்கு எவ்விதவடிவிலும் பாலின பட்ஜெட் தேவைஇல்லை என மறுப்பு சொல்லி வருகின்றன.

எனவே, மாநில அரசின் பட்ஜெட்டுகளில், பாலின பார்வை கொண்ட எந்த திட்டங்களும் இல்லை. அதனால் நாம் பெண்களை நோக்கிய திட்டங்களையும் பெண்களுக்கு சாதகமான திட்டங்களையும் கணக்கில் எடுக்கலாம். நாம் ஆய்வுக்கு எடுத்துள்ள அந்த மூன்று ஆண்டுகளில் இத்தகைய திட்டங்களில் ஏதாவது ஒன்று பட்டியல் சாதிகளை சேர்ந்த பெண்களை நோக்கியதாக இருக்கிறதா என பார்ப்போம்.

நாங்கள் முன்னதாக நடத்திய ஆய்வுகள் தமிழக அரசின் திட்டமிடுதலில் பாலின புரிதலோடு பட்ஜெட் போடுவது என்பதை பொறுத்தவரை நிலைமைகள் படுமோசமாக இருப்பதை தெளிவாக காட்டுகின்றன.[9]

ஆனாலும் நாம் நமது இந்த ஆய்வில் இப்போது தமிழக அரசின் பட்ஜெட்டில் இருக்கிற பாலின பார்வையில் பெண்களின் மீதான பல்வேறுவகையான பாகுபாடுகளை புரிந்துகொண்ட தன்மை இருக்கிறதா என்று வெளிப்படுத்துவதற்காக இந்த பட்ஜெட்டில் பெண்களை நோக்கிய திட்டங்கள் (WTS) அல்லது பெண்களுக்கு சாதகமான திட்டங்கள் (PWS) என்று 200910, 201011, 2011-12 ஆகிய ஆண்டுகளின் பட்ஜெட்டுகளில் வரையறுக்க கூடிய வற்றை ஆழமாக ஆய்வு செய்துள்ளோம். அவற்றுக்குள்ளே தலித் பெண்களுக்கு எவ்வளவு இடம் தரப்பட்டுள்ளது என பார்த்தோம்.

எங்கள் மதிப்பீடுகளின் முடிவுகளை கீழ்க்கண்ட பட்டியலில் வைத்துள்ளோம்.

---

7 *பார்க்க SW-TN, " பாலின பார்வையோடு பட்ஜெட் உருவாக்குவதை நோக்கி ", 2008*

8 *2011 ஏப்ரல் 19 - 21 காலகட்டத்தில் மத்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமும் குழந்தைகள் மேம்பாட்டுக்கான மக்கள் ஒத்துழைப்புக்கான தேசிய நிலையமும் இணைந்து தமிழக அரசாங்க அதிகாரிகளுக்கு மாநில அளவிலான பயிற்சி பட்டறையை நடத்தின. சமூக கண்காணிப்பகமும் பட்ஜெட் மற்றும் ஆளுகை கடமைப்பொறுப்புக்கான மையமும் இந்த பயிற்சிக்கான தகவல்களை தருபவர்களாக அழைக்கப்பட்டு இருந்தோம். எந்த வடிவத்திலும் பாலின அடிப்படையிலான பட்ஜெட்டிங்கையும் எதிர்க்கின்ற ஒரு போக்கை நாங்கள் அதில் கண்டோம். குறிப்பாக உயர் அதிகாரிகள் இடையே அது தெளிவாக தெரிந்தது. அந்த பயிற்சி பட்டறைக்கு பிறகும் நல்ல மாறுதல்கள் எதுவும் நடக்க வில்லை.*

9 *பார்க்க. SW-TN, " தமிழ்நாட்டில் பாலின பார்வை உள்ள பட்ஜெட்டிங்கை நோக்கி ", 2008*

# தமிழ்நாட்டின் பாலின புரிதல் உள்ள பட்ஜெட்டிங்கான கணக்கு

(2009-10, 2010-11 and 2011-12 ஆகிய ஆண்டுகள்)

(ரூ. லட்சங்களில்)

| எண் | திட்ட எண் | திட்டம் | GRB | 2009-10 | 2010-11 | 2011-12 |
|---|---|---|---|---|---|---|
| 1 | A0109036 | பெண் குழந்தைகளுக்கு தென்னங்கன்றுகளை அளித்தல் | WTS | 0.01 | --- | --- |
| 2 | A0110022 | பெண்கள் சுய உதவிக்குழுக்களுக்கு விவசாயக்கருவிகள் வினியோகித்தல் | WTS | 0.01 | --- | --- |
| 3 | A0702020 | மீன்பிடி தடை அறிவிக்கப்படும்மாதங்களில் மீனவ பெண்களுக்கு நிவாரண திட்டம் | WTS | 1432.12 | 1815.00 | 1815.00 |
| 4 | A1302A14 | பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் மகளிர் திட்டம் | WTS | ---- | --- | 79.20 |
| 5 | A3103008 | ஏழைக்குடும்பங்களுக்கு கியாஸ் அடுப்புகளும் கியாஸ் கனெக்சன்களும் வழங்கல் | PWS | 1000.00 | --- | --- |
| 6 | A3104001 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் ஏழைக் குடும்பங்களுக்கு கியாஸ் அடுப்புகளும் கியாஸ் கனெக்சன்களும் வழங்கல் | PWS | 3000.00 | 4500.00 | --- |
| 7 | A3201006 | அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் பெண்களுக்கு ஆரம்பக்கல்வி | WTS | 23985.29 | --- | --- |
| 8 | A3201D01 | மாணவர்களுக்கு இலவசமாக பள்ளி சீருடைகள் வழங்கல் | PWS | 4628.82 | 4689.88 | 14757.60 |
| 9 | A3202L12 | 11வது 12வது மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கல் | PWS | 264.46 | 383.60 | 383.60 |
| 10 | A3203C01 | அரசுக்கல்லூரிகளில் பட்டப்படிப்புகளைத் தொடங்குதல் (ஆண்கள் பெண்கள்) | PWS | 204.77 | --- | 328.49 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | A3203F03 | ஏழைக்குடும்பங்களில் இருந்து வரும் பெண்களுக்கு முதுகலைப்படிப்புகள் படிக்க இலவசக்கல்வி | WTS | 30.00 | --- | 15.00 |
| 12 | A3203H04 | பார்வை இழந்த மாணவ மாணவியருக்கு கணினி மையம் ஏற்படுத்துதல் | PWS | 3.20 | --- | --- |
| 13 | A3709002 | குழந்தை மரணம், பேறுகால மரணம் தொடர்பான சேவைகளுக்காக | PWS | 2970.99 | --- | 3389.97 |
| 14 | A3709003 | கர்ப்பகால, சிசு பராமரிப்பு வேலைகள் | PWS | 20.00 | --- | --- |
| 5 | A3709004 | தன்னார்வ சுகாதார நிறுவனங்களின் குழந்தைப் பிறப்புக்கு பிந்திய திட்டங்களுக்கான நிதி உதவி | WTS | 0.01 | --- | --- |
| 16 | A3709007 | பெண்களுக்கு பிரசவ உதவி | WTS | 18000.00 | 27000.00 | 44083.43 |
| 17 | A3709010 | சிறப்பு கூறுதிட்டத்தின் கீழ் பெண்களுக்கான பிரசவ உதவி | WTS | 7000.00 | 9000.00 | 14893.05 |
| 18 | A3709012 | பழங்குடி மக்களுக்கான துணைத்திட்டத்தின் கீழ் பெண்களுக்கான பிரசவ உதவி | WTS | --- | --- | 595.72 |
| 19 | A3709013 | மாதவிலக்கு சுகாதார திட்டம் | WTS | --- | --- | 4560.91 |
| 20 | A3713007 | மாநில குடும்ப நல்வாழ்வு கழகம் | PWS | 2.01 | --- | --- |
| 21 | A4201A26 | 3லிருந்து 5வரை படிக்கும் பட்டியல் சாதி குழந்தைகளிடையே எழுத்தறிவை உயர்த்துதல் | WTS | 300.00 | 400.00 | 400.00 |
| 22 | A4201A27 | ஆறாம் வகுப்பு படிக்கும் பட்டியல் சாதி பெண் குழந்தைகளிடையே எழுத்தறிவு அதிகரித்தல் | WTS | 300.00 | 400.00 | 400.00 |
| 23 | A4201A41 | 11வது 12வது வகுப்பு படிக்கும்பட்டியல் சாதி பெண்களுக்கு சைக்கிள்கள் வழங்குதல் | WTS | 1488.76 | 2077.87 | 2268.39 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 24 | A4201A43 | முதுகலை படிக்கும் பட்டியல் சாதியை சேர்ந்த பெண்களுக்கு இலவச கல்வி | WTS | 50.00 | 52.50 | 52.50 |
| 25 | A4202B07 | பழங்குடி பெண்களுக்கு தையல் பயிற்சி நடத்துதல் | WTS | 13.04 | --- | --- |
| 26 | A4204A19 | 1 முதல் 6 வரையான வகுப்புகளில் படிக்கும் குற்றப்பரம்பரை சாதிகள் என இழிவுபடுத்தப்பட்ட மற்றும் மிக பிற்படுத்தப்பட்ட கிராமப்புற மாணவிகளுக்கான ஊக்க தொகை | WTS | 600.00 | 700.00 | 700.00 |
| 27 | A4204A24 | மிக பிற்படுத்தப்பட்ட மற்றும் குற்றப்பரம்பரை என இழிவுபடுத்தப்பட்ட சாதிகளை சேர்ந்த 11வது 12வது வகுப்புகளில் படிக்கும் பெண்களுக்கு சைக்கிள்கள் வழங்குதல் | WTS | 1680.19 | 2388.47 | 2548.40 |
| 28 | A4204A26 | 11வது 12வது படிக்கும் பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கு சைக்கிள் வழங்குதல் | WTS | 2652.03 | 3457.34 | 3580.40 |
| 29 | A4204B04 | பிற்படுத்தப்பட்ட சமூகப்பிரிவுகளுக்கு தையல் மிஷின்கள் வழங்குதல் | PWS | --- | --- | 40.00 |
| 30 | A4302E03 | தொழிற்பயிற்சி நிலையங்களை பெண்களுக்காக ஆரம்பித்தல் | WTS | 80.44 | 65.68 | 60.90 |
| 31 | A4402011 | மாற்று திறனாளிகளான கேட்க முடியாதவர், பேசமுடியாதவர் மற்றும் பெண்களுக்கான திட்டம் | PWS | 0.01 | --- | --- |
| 32 | A4402022 | மனநிலை பாதிக்கப்பட்ட வயது வந்த பெண்களுக்கான மறுவாழ்வு இல்லங்களை ஆரம்பித்தல் | WTS | 19.98 | --- | --- |
| 33 | A4403001 | பெண்குழந்தைகளை தத்து எடுப்பதற்கான வரவேற்பு மையங்களை உருவாக்குதல் | WTS | --- | --- | 47.45 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 34 | A4403017 | பெண்குழந்தைகளின் நல்வாழ்வுக்கான திட்டம் | WTS | 5625.00 | --- | 5625.00 |
| 35 | A4403020 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் பெண்குழந்தைகளுக்கான நல்வாழ்வுதிட்டம் | WTS | 1875.00 | --- | 1875.00 |
| 36 | A4404001 | விதவைகளை மறுமணத்துக்கு ஊக்கப்படுத்தும் சேமிப்பு திட்டம் | WTS | 33.40 | --- | 51.09 |
| 37 | A4404003 | ஏழை விதவைகளின் பள்ளிக்குழந்தைகளுக்கு உதவி | WTS | 9.02 | --- | --- |
| 38 | A4404008 | உழைக்கும் பெண்களுக்கான விடுதிகளை கட்டுதல் | WTS | 0.01 | --- | --- |
| 39 | A4404005 | ஏழை விதவைகளின் பெண்களுக்கான திருமண உதவி | WTS | 300.00 | --- | 1411.71 |
| 40 | A4404007 | அனாதை பெண்களுக்கான திருமண உதவி | WTS | 40.00 | --- | 116.56 |
| 41 | A4404009 | அரசாங்கத்தின் அனாதை விடுதிகளிலும் சேவை இல்லங்களிலும் இருப்போருக்கு உயர்கல்விக்கான உதவி (பெண்களின் நல்வாழ்வு திட்டத்தின் கீழ்) | WTS | 1.60 | --- | --- |
| 42 | A4404010 | பெண்களின் நல்வாழ்வு திட்டத்தின்கீழ் களத்திலும் நிர்வாகத்திலும் இருக்கிற பெண்களுக்கு மேலாண்மை பயிற்சி | WTS | 3.00 | --- | --- |
| 43 | A4404013 | மாவட்டங்களில் சேவை இல்லங்களை அமைத்தல் (பெண்களின் நல்வாழ்வு திட்டத்தின் கீழ்) | WTS | 94.96 | --- | --- |
| 44 | A4404015 | மகளிர் திட்டம் | WTS | 2979.50 | 5327.85 | 4960.24 |
| 45 | A4404016 | சமூக நலத்துறையின் சார்பாக குடும்ப நல ஆலோசனை மையங்களை அமைத்தல் | WTS | 6.60 | --- | --- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 46 | A4404035 | வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள புதுமண தம்பதிகளுக்கு சமையல் கியாஸ் கனெக்சனை இலவசமாக தருவதற்காக தமிழக அரசின் மகளிர் மேம்பாட்டுக்கான கழகத்துக்கு நிதி உதவி | WTS | 0.01 | --- | --- |
| 47 | A4404036 | விடுமுறை காலங்களில் நடக்கும் திறன் மேம்பாட்டு திட்டங்களுக்கான உதவி | WTS | 0.01 | --- | --- |
| 48 | A4404037 | சுய உதவிக்குழுக்களை உருவாக்குவதற்கான உதவி | WTS | 87.50 | --- | 175.00 |
| 49 | A4404038 | மனிதர்களை கடத்துவதையும் பெண்களையும் குழந்தைகளையும் பாலியல்ரீதியாக தடுக்க ஒரு தனியான ஒரு பிரிவை உருவாக்குதல் | WTS | 0.05 | --- | --- |
| 50 | A4404040 | பெண் நெசவாளர்களுக்கான சிறப்பு திட்டம் | WTS | 0.01 | --- | --- |
| 51 | A4404041 | சுய உதவிக்குழுக்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக | WTS | 1500.00 | --- | 2542.17 |
| 52 | A4404043 | மகளிர் நலத்திட்டத்தின் கீழ் விடுதிகளை நடத்துதல் | WTS | 0.02 | --- | --- |
| 53 | A4404044 | வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள பெண்களுக்கான திருமண உதவி | WTS | 10000.00 | 20000.00 | 35782.90 |
| 54 | A4404045 | மகளிர் நலம் திட்டத்தின் கீழ் சுய உதவி திட்டத்தில் உள்ள இளையோருக்கு உதவுதல் | WTS | 1500.00 | --- | --- |
| 55 | A4404047 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் அனாதை பெண்களுக்கு திருமண உதவி | WTS | 14.80 | --- | 52.52 |
| 56 | A4404048 | சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் ஏழை விதவைகளின் பள்ளிக்குழந்தைகளுக்கு உதவி | WTS | 2.30 | --- | --- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 57 | A4404049 | சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் ஏழை விதவைகளின் பெண் குழந்தைகளுக்கு திருமண உதவி | WTS | 100.00 | --- | 399.17 |
| 58 | A4405012 | ஏழையான, வயதான தனிப்பெண்களுக்கான ஓய்வூதியம் | WTS | --- | --- | 1710.09 |
| 59 | A4407002 | பழங்குடி மக்களுக்கான தையற்பயிற்சி மையங்கள் | WTS | --- | --- | 8.49 |
| 60 | A4408009 | கலப்பு மணத்துக்கான உதவித்திட்டம் | PWS | --- | --- | 35.66 |
| 61 | A4408010 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் கலப்பு மண உதவிக்கான திட்டம் | PWS | --- | --- | 698.72 |
| 62 | A4404053 | தையல் மிஷின்கள் வழங்குதல் | WTS | 55.00 | --- | --- |
| 63 | A4404B04 | உழைக்கும் பெண்களுக்கான விடுதிகள் கட்டுதல் | WTS | 37.50 | --- | --- |
| 64 | A4405009 | ஆதரவற்ற விதவைகளுக்கு தையல் மிஷின்கள் வழங்குதல் | WTS | 132.00‘ | --- | --- |
| 65 | A4405007 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் ஆதரவற்ற விதவைகளுக்கு தையல் மிஷின்கள் வழங்கல் | WTS | 22.65 | --- | --- |
| 66 | A4406013 | குற்றம் செய்ததால் தண்டனை பெற்று மறுவாழ்வு இல்லங்களில் வாழும் பெண்குழந்தைகளுக்கான உதவி | WTS | 0.01 | --- | --- |
| 67 | A4408015 | விதவைகள், மாற்றுத் திறனாளிகள், முதியோர் பென்ஷன் பெறுவோர் களுக்கான இலவச ரேசன் | PWS | 811.37 | 661.93 | 621.81 |
| 68 | A4408028 | மாற்று திறனாளிகளுக்கும் ஆதரவற்ற விதவைகளுக்கும் ஓய்வூதியம் | PWS | 7271.66 | --- | --- |
| 69 | A4408029 | கைவிடப்பட்ட மனைவிகளுக்கான ஓய்வூதியம் | WTS | --- | 4636.00 | 10179.13 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 70 | A4408041 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் கைவிடப்பட்ட மனைவிகளுக்கான ஓய்வூதியம் | WTS | 22699.65 | 1464.00 | 3105.10 |
| 71 | A4408049 | கணவனால் கைவிடப்பட்டவர் களுக்கு பழங்குடி மக்கள் துணைத்திட்டத்தின் கீழ் மாத உதவித்தொகை | WTS | --- | --- | 269.12 |
| 72 | A4408043 | ஆதரவற்ற விதவைகளுக்கான WTS மாத உதவித்தொகை | --- | --- | 33962.89 | |
| 73 | A4408044 | ஆதரவற்ற விதவைகளுக்குசிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் மாத உதவித்தொகை | WTS | --- | 4425.00 | 9982.90 |
| 74 | A4408045 | ஆதரவற்ற விதவைகளுக்கு பழங்குடி மக்கள் துணைத் திட்டத்தின் கீழ் மாத உதவித்தொகை | WTS | ---- | ---- | 993.65 |
| 75 | A4408036 | சுய உதவிக்குழுக்களுக்கு இடையே போட்டிகளை ஒருங்கிணைத்தல் | WTS | ---- | ---- | 160.00 |
| 76 | A4409001 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் மகளிர் திட்டம் | WTS | 744.88 | 1331.96 | 1259.86 |
| 77 | A4409002 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் சுய உதவிக்குழுக்களுக்கு பயிற்சிகள் | WTS | 500.00 | ---- | 847.39 |
| 78 | A4409003 | வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள பெண்களுக்கு சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் திருமண உதவி | WTS | 5000.00 | 10000.00 | 12855.25 |
| 79 | A4409008 | மாற்று திறனாளிகளுக்கும் கணவனால் கைவிடப்பட்ட வர்களுக்கும் சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் மாத உதவித்தொகை | PWS | 9532.87 | --- | --- |
| 80 | A4408052 | விதவைகள், ஊனமுற்றோர், முதியோர் பென்சன் வாங்குவோருக்கு பழங்குடி மக்கள் துணைத்திட்டத்தின் கீழ் இலவச ரேசன் திட்டங்கள் | PWS | ---- | ---- | 40.12 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 81 | A4409009 | விதவைகள், ஊனமுற்றோர், முதியோர் பென்சன் வாங்குவோருக்கு சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் இலவச ரேசன் திட்டங்கள் | PWS | 291.85 | 441.29 | 441.29 |
| 82 | A4501032 | கர்ப்பமான பெண்களுக்கு சத்தான மதிய உணவு திட்டத்தின் மூலம் உணவு அளித்தல் | WTS | 0.05 | --- | --- |
| 83 | A4801033 | நபார்ட் வங்கி கடன்களை வைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளிட்டவற்றையும், தாலுகா மருத்துவமனைகளாக இல்லாதவற்றையும் கட்டுதல் | PWS | 0.02 | --- | --- |
| 84 | A4801040 | நபார்ட்டு வங்கி கடன்கள் மூலம் ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல் | PWS | 0.03 | --- | --- |
| 85 | A4801075 | ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல் | PWS | 1.70 | --- | --- |
| 86 | | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் தேசிய விதவை பென்சன் திட்டம் | WTS | --- | 3150.00 | --- |
| **மொத்தம்** | | | | **142157.37** | **109580.23** | **225182.84** |

*ஆதாரம்:*

2009-10 - TN Finance Department, Budget Publication 62, Annual Plan - Plan-Budget Link

2010-11 - TN Finance Department, Budget Publication 62, Annual Plan - Plan-Budget Link

2011-12 - TN Finance Department, Budget Publication 65, Annual Plan - Plan-Budget Link

பெண்களை நோக்கிய, அல்லது பெண்களுக்கு சாதகமான திட்டங்கள் என மேலே சொல்லப்பட்ட 86 திட்டங்களில் தலித் பெண்களை நோக்கிய அல்லது தலித் பெண்களுக்கு சாதகமான திட்டங்கள் என உண்மையாக எடுத்துக்கொள்ளக்கூடியவை வெறும் 18 மட்டுமே. சிறப்புக்கூறு திட்டத்துக்கு கீழே உள்ள திட்டங்களையும் நாம் அந்த 18ல் இருந்து நீக்கிவிட்டால் தலித் பெண்களின் நல்வாழ்வுக்கு என தெளிவாக தெரியும் வகையிலும் தனிப்பட்ட வகையிலும் எந்த வொரு திட்டமும் இல்லாத நிலையில் தான் இருக்கிறது.

**தலித் என்ற வகையிலும் பெண் என்ற வகையிலும் இந்த இரண்டு வகையிலுமே தலித் பெண்கள் புறக்கணிக்கப்பட்டு உள்ளனர் என்பது தெளிவாக தெரிகிறது.**

| "தலித் பெண்களை நோக்கிய" திட்டங்கள் (ரூ. லட்சங்களில்) | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எண் | திட்டத்தின் குறியீடு | திட்டம் | GRB | 2009-10 | 2010-11 | 2011-12 |
| 6 | A3104001 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் கட்டணமில்லா சமையல் கியாஸ் கனெக்சன்களும் ஸ்டவ்களும் ஏழைக்குடும்பங்களுக்கு வழங்குதல் | PWS | 3000.00 | 4500.00 | --- |
| 17 | A3709010 | சிறப்புக் கூறுதிட்டத்தின் கீழ் பெண்களுக்கான பிரசவ உதவி | WTS | 7000.00 | 9000.00 | 14893.05 |
| 22 | A4201A27 | ஆறாம் வகுப்பு படிக்கும் பட்டியல் சாதி பெண் குந்தைகளிடையே எழுத்தறிவு அதிகரித்தல் | WTS | 300.00 | 400.00 | 400.00 |
| 23 | A4201A41 | 11வது 12வது வகுப்பு படிக்கும் பட்டியல் சாதி பெண்களுக்கு சைக்கிள்கள் வழங்குதல் | WTS | 1488.76 | 2077.87 | 2268.39 |
| 24 | A4201A43 | முதுகலை படிக்கும் பட்டியல் சாதியை சேர்ந்த பெண்களுக்கு இலவச கல்வி | WTS | 50.00 | 52.50 | 52.50 |
| 35 | A4403020 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் பெண்குழந்தைகளுக்கான நல்வாழ்வுதிட்டம் | WTS | 1875.00 | --- | 1875.00 |
| 55 | A4404047 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் அனாதை பெண்களுக்கு திருமண உதவி | WTS | 14.80 | --- | 52.52 |
| 56 | A4404048 | சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் ஏழை விதவைகளின் பள்ளிக்குழந்தைகளுக்கு உதவி | WTS | 2.30 | --- | --- |
| 57 | A4404049 | சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் ஏழை விதவைகளின் பெண் குழந்தைகளுக்கு திருமண உதவி | WTS | 100.00 | --- | 399.17 |
| 61 | A4408010 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் கலப்பு மண உதவிக்கான திட்டம் | PWS | --- | --- | 698.72 |
| 65 | A4405007 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் ஆதரவற்ற விதவைகளுக்கு தையல் மிஷின்கள் வழங்கல் | WTS | 22.65 | --- | --- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 70 | A4408041 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் கைவிடப்பட்ட மனைவிகளுக் கான ஓய்வூதியம் | WTS | 22699.65 | 1464.00 | 3105.10 |
| 73 | A4408044 | ஆதரவற்ற விதவைகளுக்கு சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் மாத உதவித்தொகை | WTS | --- | 4425.00 | 9982.90 |
| 76 | A4409001 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் மகளிர் திட்டம் | WTS | 744.88 | 1331.96 | 1259.86 |
| 77 | A4409002 | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் சுய உதவிக்குழுக்களுக்கு பயிற்சிகள் | WTS | 500.00 | --- | 847.39 |
| 78 | A4409003 | வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள பெண்களுக்கு சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் திருமண உதவி | WTS | 5000.00 | 10000.00 | 12855.25 |
| 79 | A4409008 | மாற்று திறனாளிகளுக்கும் கணவனால் கைவிடப் பட்டவர்களுக்கும் சிறப்பு கூறு திட்டத்தின் கீழ் மாத உதவித்தொகை | PWS | 9532.87 | --- | --- |
| 81 | A4409009 | விதவைகள், ஊனமுற்றோர், முதியோர் பென்சன் வாங்குவோருக்கு சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் இலவச ரேசன் திட்டங்கள் | PWS | 291.85 | 441.29 | 441.29 |
| 86 | | சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் தேசிய விதவைபென்சன் திட்டம் | WTS | --- | 3150.00 | --- |
| **மொத்தம்** | | | | **52622.76** | **36842.62** | **49131.14** |

## இந்திய தலித் பெண்களாகிய நாங்கள் கீழ்வருமாறு கோருகிறோம்:

- பொதுவான பெண்கள் என்ற வகையில் வைத்து எங்களை மூடி மறைப்பதற்கு பதிலாக தலித் பெண்களை மிகவும் பாதிக்கப்பட்டவர்களாகவும் தனியான ஒரு சமூக குழுவாகவும் அங்கீகரிக்கவேண்டும்.
- மக்கள் தொகை கணக்கெடுப்புகள், நிலவர அறிக்கைகள்,அமலாக்க அறிக்கைகள், வளர்ச்சி மற்றும் தாக்கம் பற்றிய ஆய்வறிக்கைகள் ஆகியவற்றில் தலித் பெண்கள் பற்றிய தனித்து பிரிக்கப்பட்ட விபரங்களைத்தரவேண்டும்.
- தேசிய மகளிர் ஆணையம்,தேசிய மனித உரிமை ஆணையம்,தேசிய SC/ST ஆணையம், கையால் மலமள்ளுவோருக்கான தேசிய ஆணையம் ஆகியவை தலித் பெண்களின் உரிமைகளை பற்றி குறிப்பான முறையில் சிறப்பு கவனம் செலுத்தச் செய்க.
- தலித் பெண்களுக்கு கல்வியிலும் தனியார் மற்றும் அரசுத்துறைகளிலும் போதுமான இடஒதுக்கீட்டை வழங்குக.
- தலித் பெண் உழைப்பாளிகளுக்கு அவர்கள் கண்ணியமான முறையில் வாழ்வதற்கு தேவையான, நியாயமான சம்பளம் கிடைப்பதை உறுதி செய்யும் வகையிலான சட்டங்களை கடுமையான முறையில் உருவாக்குக.
- கையால் மலமள்ளுகிற பெண்களையும், இளம்பெண்களையும் சிறுமிகளையும் பற்றிய ஒரு ஆய்வை செய்யவும் கண்ணியமான வாழ்க்கையைத் தரும் வகையிலான மறுவாழ்வை அவர்களுக்கு தருவதையும் போர்க்கால அடிப்படையில் நடத்திடுக.
- வளர்ச்சி மற்றும்மேம்பாட்டுக்கான திட்டமிடல்களிலும் அத்தகைய திட்டங்களை அமலாக்குவதிலும் தலித் பெண்களுக்கு தனியான சிறப்புப் பிரிவுகளை உருவாக்குக. இதற்கான நிதி ஒதுக்கீடுகளை செய்க.
- தலித் பெண்களுக்கு அனைத்துவகையிலான வளர்ச்சியை உருவாக்கி அவர்களை பிரதான நீரோட்டத்தில் இணைத்து சமத்துவத்தையும் நீதியையும் அவர்களுக்கு வழங்க தேவையான ஒரு தேசிய தொலைநோக்கு திட்டத்தை உருவாக்குக.

**(தலித் பெண்கள் அறிக்கை, தேசிய தலித் பெண்கள் மாநாடு, புதுடெல்லி, 1999)**

# பல்வேறு பாகுபாடுகளையும் பற்றிய புரிதல் உள்ள பட்ஜெட்டை தலித் பெண்களுக்காக உருவாக்குதல் ஒரு அவசர தேவை

பலவகை பாகுபாடுகளின் வலையில் தலித்பெண்கள் மாட்டிக்கொண்டு உள்ளனர். பலவகையான பாகுபாடுகளின் பிடியில் சிக்கித்தவிப்போரைப்பற்றிய ஆய்வுக்கு ஏற்ற களமாக சமூகத்தின் இந்த பகுதி உள்ளது.[10] கூடுதலான பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டு அவர்கள் இருப்பதால் அவர்களின் பாதிப்புகளை இல்லாமல் செய்வதை நோக்கமாக கொண்ட சிறப்பான திட்டங்களும் ஆய்வுகளும் தேவைப்படுகின்றன. போதுமான நிதி ஒதுக்கீடுகள் தேவைப்படுகின்றன.அப்போதுதான் அவர்கள் பொதுவான திட்டங்களுக்கு உள்ளேயும், பொதுவான பெண்கள் பொதுவான தலித்துகள் என்ற வகையிலும் கூட அவர்களின் பாதிப்புகள் வெளியே தெரியாமல் அழுத்தப்படுவதை தவிர்க்க முடியும்.

பாலின புரிதல் உள்ள பட்ஜெட்டுகளை உருவாக்குவதிலும் தலித்துகளுக்கான சிறப்புக்கூறு திட்டத்திலும் கூட தலித் பெண்களுக்கான பயன்களை அவர்களுக்கு தரவேண்டும். அப்படி தருவதற்கு, அவை இன்னமும் ஒருங்கிணைந்த திட்டங்களாக தங்களை மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும். என்பது தான் முக்கியமாக நாம் இதன் மூலம் அறிந்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது.

பாலின புரிதல் உள்ள பட்ஜெட்டுக்கான எந்த ஒரு முயற்சியிலும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஒரு தலித்துக்களுக்கான சிறப்புக்கூறுதிட்டம் இருக்க வேண்டும். தலித்துகளுக்கான எந்தஒரு சிறப்பு கூறு திட்டமும் பாலின புரிதலோடு உருவாக்கப்பட்டு இருக்க வேண்டும். பாலின புரிதல் உள்ள பட்ஜெட்டை உருவாக்குவதிலும் சிறப்புக்கூறு திட்டத்திலும் தொடர்புடைய மத்திய அமைச்சகங்களின் அளவில் உள்ள எந்த ஒரு பிரிவிலும் அதே போல மாநில அரசுகளில் உள்ள துறைகளிலும் தலித் பெண்களின் பிரச்சனைகளை புரிந்து கொள்ளக்கூடிய ஒரு பிரிவு கட்டாயமாக இருக்க வேண்டும். அது போதுமான அளவு நிதி ஒதுக்கப்பட்டு அதிகாரம் அளிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் .

பாலின புரிதல் உள்ள பட்ஜெட்டோ அல்லது சிறப்பு கூறு திட்டமோ அவற்றின் முந்திய அனுபவங்களை பார்த்தால் தேவையான அளவில் நிதி ஒதுக்கப்படுவது மட்டும் போதுமானதல்ல. தரமான திட்டங்களும் தொடர்ச்சியான கண்காணிப்பும் பரிசீலனையும்தேவையாக உள்ளன என்பது தெரியவரும்.

அடுத்ததாக வருகிற “தமிழக அரசின் திட்டங்களும் தலித் பெண்களும் இடைவெளிகளும் அக்கறைகளும்” எனும் பகுதி தற்போது நடைமுறையில் இருக்கிற அரசுகளின் திட்டங்களுக்கும் தலித் பெண்களின் உண்மையான தேவைகளுக்கும் இடையே பெரும் இடைவெளி இருப்பதால் திட்டங்கள் எல்லாமே செயல்படாதவையாக உள்ளன என்பதை தெளிவாகக் காட்டுகிறது. பல்வேறுவகையான பாகுபாடுகளை புரிந்து கொண்ட பட்ஜெட்டை தலித் பெண்களுக்காக உருவாக்கும் பணி என்பது இத்தகைய அக்கறைகளை கவனத்தில் கொண்டதாக இருக்க வேண்டும்.

---

10 For concepts on intersectional analysis and its tools, refer, for example, Karin Armgren, “The Truly Untouchables - Dalit widows: Caste, Gender and class-based discrimination”, Norrkoping, Sweden, 2007 and Ramu Bishwakarma & co, “Educating Dalit Women: Beyond a One-Dimensional Policy Formulation”, Himalaya XXVII (1-2), 2007.

# தமிழக அரசு திட்டங்களும் தலித் பெண்களும்

# இடைவெளிகளும் அக்கறைகளும்

ஆய்வு எனும் தலைப்பிலான முந்தைய பிரிவில் சொன்னதைப்போல இந்த ஆய்வின் இரண்டாவது பெரிய நோக்கம் என்பது தமிழ் நாட்டின் தலித் பெண்களின் வாழ்நிலை பற்றிய அடிப்படையான உண்மைகள், அவர்களின் தேவைகளுக்கும் இந்த மாநில அரசாங்கம் உருவாக்கி வைத்துள்ள திட்டங்களுக்கும் உள்ள பெரும் இடைவெளிகளை அடையாளம் காட்டுவது ஆகும்.

இதை திறன்மிக்க முறையில் செய்வதற்கு சமூக கண்காணிப்பகம் தமிழ்நாடு, ஆய்வாளர்களின் உதவியோடு மாநிலத்தின் 10 மாவட்டங்களுக்கும் மேலான இடங்களில் நான்கு திட்டங்கள் தொடர்புடைய முக்கியமான, தலித் பெண்களின் வாழ்க்கையோடு தொடர்புடைய நான்கு பிரச்சனைகளை பற்றி, ஏறத்தாழ 160 தலித் பெண்களை சந்தித்து ஆழமான ஒரு ஆய்வை செய்தோம். எந்த பிரச்சனையோடு கூடிய எந்த திட்டத்தை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டோம் என்ற விபரம் வருமாறு:

- **கடன் உதவி கிடைத்தல்**

  – தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தின் மகளிர் திட்டம்.

- **கையால் மலம் அள்ளும் பெண் தொழிலாளிகளுக்கான மறுவாழ்வு**

  – கையால் மலமள்ளுவோருக்கும் அவர்களை சார்ந்து இருப்போருக்கும் விடுதலையும் மறுவாழ்வும் அளிப்பதற்கான தேசிய திட்டம்

- **வாழ்வாதாரங்கள்**

  – மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டம்

- **உயர்கல்வி பெறுதல்**

  – தமிழக அரசின் +2க்கு பிந்திய படிப்புகளுக்கான கல்வி உதவித்தொகைகள்

# தலித் பெண்களும்
# கடனுதவி பெறுதலும்

# ‘மகளிர் திட்டம்’

# தலித் பெண்களுக்கு
# என்ன பயன்கள்
# கிடைத்தன?

# தமிழகத்தில் "மகளிர் திட்டமும்"-தலித் பெண்களும்

பொருளாதாரரீதியாக நல்லமுறையில் பலமடைவதற்கான எந்த ஒரு முயற்சிக்கும் தங்களை ஆற்றல்படுத்திக்கொள்வதற்கும் போதுமான அளவு கடன்வசதி கிடைப்பதும் அதுவும் உரிய நேரத்தில் கிடைப்பதும் மிக அவசியமாகும்.

பெண்களுக்கான சுயஉதவிகுழுக்கள் விசயத்தில் தமிழக அரசாங்கம் பல சாதனைகளை செய்து இருப்பதாக எப்போதும் பெருமிதம் கொள்கிறது. அதிலும் குறிப்பாக அதன் முக்கியதிட்டமான மகளிர் திட்டத்தை பெண்களுக்கு நன்மைகள் செய்வதில் இந்த அரசுக்கு இருக்கிற உறுதியை எடுத்துக்காட்டுகிற திட்டமாக அது சொல்லிக்கொள்கிறது. மகளிர் திட்டம் பெண்களுக்கு சேவை செய்வதில் சாதனைகள் படைப்பதால் மாநில அரசுக்கு பெண்களை நோக்கிய பாலின புரிதல் உள்ள பட்ஜெட்டை போட வேண்டும் என்ற அவசியம் கூட எழ வில்லை என்று தொடர்ச்சியாக பொது இடங்களில் பேசுமளவுக்கு தமிழக அரசு இருக்கிறது.

தமிழக அரசின் கிராமப்புற வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறையின் 2013-2014 கொள்கை அறிக்கையில் தமிழகத்தில் 5.56 லட்சம் சுயஉதவிக்குழுக்கள் இருக்கின்றன. 85.70 லட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். 3374.60 கோடிகள் சேமிப்பு அவர்கள் மூலம் இருக்கிறது. அவர்களின் சேமிப்போடு தொடர்பு கொண்ட வங்கி கடன் உதவி என்பது 15,633.83 கோடிகளாக உள்ளது என்று சொல்லப்பட்டு உள்ளது.

உண்மையிலேயே ஒரு பெரிய சாதனைதான்!

ஆனால், "இத்தகைய பெரிய திட்டம் என்பது தலித் பெண்களுக்கு எந்த வகையில் பயனுள்ளதாக அமைகிறது?" என்பதே நமது கேள்வி.

மகளிர் திட்டம் பல சாதிகளை கலந்த கலவையான சமூக குழுக்களை கொண்டதாக உள்ளது. இருந்தாலும் தனிப்பட்ட தலித்பெண்கள் மட்டுமே உள்ள குழுக்கள், சுய உதவிக்குழுக்களில் உள்ள பெண்களின் சாதிவாரியான விபரம் உள்ளிட்ட விபரங்கள் கிடைப்பது சிரமம். மாநிலம் மற்றும் மாவட்டங்களின் மட்டத்தில் இதுதான் நிலைமை.

மகளிர் திட்டத்தின் கீழ் தலித் பெண்களால் நடத்தப்படுகிற சுய உதவிக்குழுக்கள் பெரும்பாலும் பலவீனமாக இருக்கின்றன. அல்லது வாங்கிய பணத்தை கட்ட முடியாமல் போய் விட்டன. அல்லது செயலற்று ஒன்றுமில்லாமல் போயுள்ளன என அரசு சாரா நிறுவனங்கள் உள்ளூர் மட்டத்தில் செய்த ஆய்வுகளால் கணிக்கின்றன.

பொதுவான பெண்களுக்கு என்று நடத்தப்படுகிற ஒரு திட்டத்தில் இருந்து நலிந்த தலித் பெண்கள் தமக்கான பலன்களை அடைவதை பலவீனமான பொருளாதார சமூக காரணங்கள்தான் தடுக்கின்றன என்பது எளிதில் புரிந்து கொள்ளக்கூடியது.

தலித் பெண்களின் மீது ஏவப்பட்டுள்ள பலவகையான பொருளாதார சமூக பாகுபாடுகளும் அவர்களின் இயலாத நிலையும் காரணமாக அவர்களுக்கு போதுமானஅளவு கடன்வசதி கிடைப்பது அரிதாக இருக்கிறது. அவர்களின் பொருளாதாரரீதியான அதிகாரமடைதலுக்கு இத்தகைய போதுமான அளவு கடன்பெறும் வசதிதான் உதவி செய்யும். அரசாங்கத்தின் கடன் வழங்கும் திட்டங்களிலும் நிதி நிறுவனங்கள்,வங்கிகளின் கடன் வழங்கும் திட்டங்களிலும் பெரும்பாலானவை தொடர்ச்சியான முறையில் தலித் பெண்களை சென்று அடைவதில்லை.

களஆய்வு:

## மல்லிகா

(மீனாம்பூர் கிராமம், செஞ்சி வட்டாரம், விழுப்புரம் மாவட்டம்)

“எனக்கு 16வயசுல கல்யாணம் ஆச்சு. மூணு பொ‘ண்ணும் ரெண்டு பையனும் இருக்காங்க. நாங்க தினக்கூலிக்கு விவசாய வேல செய்றோம்.அதுல இருந்து வர்ற வருமானம் எங்க தேவைங்களுக்கு பத்தல. நான் வீட்டு வேலைங்களும் செய்றேன்.அதுல கொஞ்சம் எக்ஸ்ட்ரா வருமானம் வருது.

வீட்டு வேலை செய்ற இடத்துல ஒரு அம்மா எனக்கு சுய உதவிக்குழுக்கள் பத்தி சொன்னாங்க. அவங்க யோசனைப்படிதான் நான் அதில சேர்ந்தேன்.அதை கல்வி கேந்திரா நடத்தியது. மூன்று வருடத்துக்கு நான் வாரம் ரூ 10 சேமித்தேன்.இப்போ வாரம் 25 சேமிக்கிறேன். குடும்ப தேவைகளுக்கு சின்ன சின்ன கடன்களை குழுவுல் இருந்து நான் எடுத்து உள்ளேன்.

நான் குழுவுல சேர்ந்தப்ப என் வீடு குடிசையாக இருந்தது. நா 10 ஆயிரம் ரூபாய் லோன் போட்டு வீட்டை ரிப்பேர் செஞ்சேன். திரும்பவும் 7ஆயிரமும் 25 ஆயிரமும் லோன் போட்டேன். அதை வைத்து கூரையை மாற்றி ஆஸ்பெஸ்டாஸ் ஓடு போட்டுட்டேன்.இப்போ கொஞ்சம் திருப்தியாக இருக்கேன்.

ஒரு 75ஆயிரம் ரூபாய் கடனும் எனக்கு கிடைத்தது.குழந்தைகளின் படிப்புக்கும் வேறு சில குடும்ப செலவுகளுக்கும் அதை நான் வைத்துக் கொண்டேன். என் வீட்டுக்காரர் ஒரு குடிகாரர்.சம்பாதிப்பதில் பாதியை குடிச்சே அழிப்பார். அதனால குடும்பத்தை நடத்துறதும் கடன்களை திருப்பி அடைக்கிறதும் கஷ்டமாக இருக்கிறது.

எங்களது குழுவுக்கு பல்லவா கிராம வங்கியில் இருந்து 3லட்சத்து 75ஆயிரம் கடன் கிடைத்தது. அதை வைத்து நெல் கொள்முதல் செய்து விற்பனை செய்ய நினைச்சோம். ஆனால் தவறான ஆலோசனையாலும் நிர்வாகத்தாலும் நாங்க நெல்லை ஸ்டாக் வைச்சோம். விலை ஏறி இருக்கும் போது வித்தா நல்லாயிருக்கும் என நினைச்சோம்.ஆனால் கடைசியிலே குறைஞ்ச விலைக்கு தான் அதை விற்க வேண்டி வந்தது. அதனால 50ஆயிரம் நட்டம் வந்தது.வங்கிகளில் கடன் வாங்க நினைச்சோம். எங்கள் முயற்சி பலிக்கலே. வியாபாரத்தை தொடர்ந்து நடத்தவோ நட்டத்தை சரிகட்டவோ எங்களுக்கு எந்த நிதி உதவியும் கிடைக்கலே.

## களத்தில் கண்டறிந்தவை:

தமிழக அரசின் மகளிர் திட்டத்துக்கும், மாநிலத்தில் உள்ள தலித் பெண்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை உண்மை நிலவரத்துக்கும் இடையே உள்ள இடைவெளியை ஆழமாக புரிந்து கொள்வதற்காக சமூக கண்காணிப்பகம் தமிழ்நாடு தனது ஆய்வின் உதவி அமைப்புகளில் ஒன்றான, விழுப்புரத்தை மையமாக கொண்டு செயல்படும் அரசு சாரா நிறுவனமான "கல்விகேந்திரா"வை[11] களத்தில் இறக்கியது. அந்த அமைப்பின் மூலமாக மகளிர் திட்டத்தோடு தொடர்புடைய விசயமான, சுயஉதவிக் குழுக்களின் மூலமாக கடனுதவி பெறுதல் என்பதில் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள 30 தலித்பெண்களின் அனுபவங்களை எடுத்து ஒரு மாதிரி–ஆய்வை நடத்தத் திட்டமிட்டோம்.

மகளிர் திட்டம் போன்று, பொதுவாக பெண்களுக்காகப் போடப்படுகிற திட்டங்கள், தேவையான அளவு கூடுதல் நிர்வாக அமைப்புகளை இணைத்துக் கொள்ளவில்லை என்றால் தலித் பெண்களுக்கு எந்த வகையான பயனும் தரமுடியாது என்ற எங்களின் பயத்தைத்தான் கள ஆய்வுகளும், இந்த ஆய்வின் ஒட்டுமொத்த அனுபவமும் உறுதிப்படுத்துகின்றன.

- சுய உதவி குழுக்களிலும், வங்கிகளிலும் கடன்களை பெறுவதை தவிர்த்து, வேறு வகையான வருமானம் வரக்கூடிய திட்டங்களை உருவாக்கிக் கொள்ளக்கூடியவர்களாக அவர்கள் இருக்கிறார்களா? எனக் கேட்டதற்கு 30ல் 22 தலித் பெண்கள் "இல்லை" என்றுதான் பதில் சொன்னார்கள். வெறும் எட்டுபேர் மட்டும்தான் "பால்மாடு வாங்கினோம், இட்லி கடை வைத்தோம், சோப் தயாரிக்கும் கம்பெனி வைத்தோம்" என்றனர்.

- வங்கிக் கடன்கள், சுய உதவிக் கடன்கள் தவிர்த்து, அவர்களால் அவர்களுக்கான சொத்தை உருவாக்கி கொள்ள முடிந்ததா என்ற கேள்விக்கு 30ல் 26 பேர் "இல்லை" என்றனர். இருவர் "வீடு" என்றனர். ஒருவர் "நிலம்" என்றார். இன்னொருவர் "பசு" என்றார்.

- சுயஉதவிக்குழுக்களில் ஈடுபடுவது என்பது அவர்களின் வாழ்க்கைக்கு முன்னேற்றமாக இருக்கிறதா என கேட்டதற்கு 11 பேர் "இல்லை" என்றனர். 9 பேர் தங்களின் பிள்ளைகளை படிக்க வைக்க முடிந்துள்ளது என்றனர். இன்னும் 10பேர் தங்களுக்கு குறிப்பிடத்தக்க பொருளாதார முன்னேற்றம் இல்லை என்றாலும்கூட தன்னம்பிக்கை வளர்ந்துள்ளது என்றனர். கிராம சமூகத்தில் தற்போது முன்பிருந்ததைவிட கூடுதல் அந்தஸ்து உள்ள வாழ்க்கையை நடத்துவதாக கூறினார்கள். எதிர்காலத்துக்கான நம்பிக்கை இங்கே இருக்கிறது. சரியான முறையில் வடிவமைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டால் இந்த திட்டங்கள்கூட தலித் பெண்களை அதிகாரமுள்ளவர்களாக்க முடியும்.

---

11 மேலும் கல்விகேந்திரா பற்றிய தகவல்களுக்கு பார்க்க www.kalvikendra.org

கள ஆய்வு:

## கஸ்தூரி

(பாம்பூர் கிராமம், வானூர் வட்டாரம், விழுப்புரம் மாவட்டம்)

“நான் 18 வயசுல கல்யாணம் செஞ்சேன், எனக்கு இப்போ இரண்டு பையன், ஒரு பொண்ணு.

என் மூத்த பையன் ஒரு சாலை விபத்தில மாட்டிக்கிட்டான். அவனால நடக்கமுடியாது. தொடர்ந்து பராமரிப்பும் மருத்துவ சிகிச்சையும் அவனுக்கு தேவைப்படுகிறது.

நானும் எனது கணவரும் தினக்கூலி ஆட்கள். எனது கணவர் மதுவுக்கு அடிமை. பாதி சம்பளத்தை குடித்தே அழிப்பார். என்னோட கம்மியான சம்பளத்தை வச்சுக்கிட்டு நான் குழந்தைகளோட படிப்பு செலவுக்கும் டாக்டர் செலவுக்கும் அல்லாடுறேன்.

என்னோட சொந்த கிராமம் பாம்பூர். அங்கே இருந்த அன்னை தெரசா சுயஉதவிக்குழுல ஒரு மெம்பரா நான் 1998 லே சேர்ந்தேன்.

முதல்ல எனது குழந்தை படிப்புக்காக நான் ரூ. 7,500 லோன் எடுத்தேன். சரியான நேரத்துக்கு அதை திருப்பி கட்டிட்டேன்.

அடுத்து நான் என் பொண்ணு கல்யாணத்துக்கு ரூ. 10,000 லோன் எடுத்தேன். ஆனால் பணக்கஷ்டத்துல என்னால அதை திருப்பி கட்ட முடியலே.

கரெக்டா பணத்தை கட்டுற நானே லோனை கட்டமுடியாத ஆகிட்டதாலே குழுவுல இருக்கிற மற்ற மெம்பர்களும் லோனை திருப்பி கட்டலே.

ஆரம்பத்தில இருந்தே, எங்க குழுவுக்கு லோன் தருவதிலே பேங்குகளுக்கு அவ்வளவு இஷ்டமில்லை. நாங்க நல்லா செயல்பட்டு கிட்டு இருந்தப்பவே பாம்பூரில் உள்ள பஞ்சாப் நேஷனல் பேங்கோட மேனேஜர் எந்த லோனும் எங்களுக்கு கொடுக்கிறது இல்ல. அவரை பார்த்து பலமுறை பேசியும்கூட எங்கள் கோரிக்கைகயை கேட்க மாட்டேனுட்டார். லோனுக்கு கேரண்டி டாக்குமெண்டாக ஏதாவது நிலம் டாக்குமெண்ட் எடுத்துட்டு வா என்று கேட்டுக்கிட்டே இருக்கார். எங்க கிட்டே அப்படி நில டாக்குமெண்டுகளோ சொத்துக்களோ கிடையாது.

**சுய உதவிக்குழு உருவாக்கி 14 வருடம் ஆகிவிட்டது. அது மூலமா நல்ல நிலைமைக்கு வந்துடலாமுனு நினைச்ச நம்பிக்கை எல்லாம் இன்னமும் நிறைவேறாத கனவாகவே இருக்கிறது. இப்போ எங்கள் சுயஉதவிக்குழு செயல்படாம போச்சு. சுய உதவிக்குழுவால என்னோட பொருளாதார நிலை ஒன்னும் வளர்ச்சி அடையலே. எனது சமுதாய அந்தஸ்தும் உயரலே. அதே நிலைமைல தான் நான் இன்னும் உழல்றேன்.”**

## முக்கியமான ஆய்வு முடிவுகள்:

1. மகளிர் திட்டம் போன்ற அரசுத் திட்டங்களில் தலித் பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் தாக்கங்கள் ஏற்படுத்துகின்ற விபரங்களை ஆய்வு செய்ய தேவையான தகவல்கள் அதிகார பூர்வமாக அரசிடம் இல்லை. தனித்தனியாக பிரிக்கப்பட்ட தகவல்களை அது வைத்து இருக்க வில்லை. மாநில அளவிலும், மாவட்டங்களிலும் தலித் குழுக்கள் எவ்வளவு எண்ணிக்கையில் இருக்கின்றனர் என்பது பற்றிய தகவலும் இல்லை. இந்த தலித் சுய உதவிக்குழுக்களுக்கு என்றே ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு எவ்வளவு, அது செலவு செய்யப்பட்டது எவ்வளவு என்ற விபரம் இல்லை.

2. முன்னதாக கொடுக்கப்பட்டுள்ளது போல, தலித் பெண்களின் தீவிரமான, சமூக, பொருளாதார ரீதியான இயலாமைகளால், மகளிர் திட்டம் போன்று எல்லாப் பெண்களுக்காக வடிவமைக்கப்பட்ட பொதுத் திட்டங்கள்மூலம் மிகவும் அரிதாகத்தான் தலித் பெண்கள் பயனடைகின்றனர். ஆதரவற்ற நிலை, வேலை இன்மை, இடம் விட்டு இடம் போதல், நிதி ரீதியாக கொத்தடிமைத்தனத்தில் இருத்தல். அதுமட்டுமில்லாமல் குடிகார கணவர்கள் என பல காரணிகளால் கடும் பிரச்சனைகளில் தலித் பெண்கள் சிக்கி உள்ளனர். சுய உதவிக்குழுக்களில் இருந்து தொடர்ச்சியான நிதி உதவியை அவர்கள் பெற முடியாத இயலாமைக்கு இவைதான் பிரதான காரணங்களாக உள்ளன. தலித் பெண்களின் சுயஉதவிக் குழுக்களிடமிருந்து ஏன் பெரும்பாலும் குடும்பச் செலவுக்கு கடன் வாங்குகிறார்கள், தொழில் முனையவோ, சொத்து சேர்க்கவோ ஏன் முயலவில்லை என்பதற்கும் இதுவே காரணம்.

3. சுய உதவிக்குழுக்களில் இருந்து தலித் பெண்கள் பணம் எடுப்பதற்கான பிரதான காரணங்களில் ஒன்று அவர்களது பிள்ளைகளுக்கான படிப்புச் செலவு. தலித் குழந்தைகளின் கல்வி நிலையும், அவர்களின் பெற்றோர்களின் கல்வி நிலையும் பார்த்தால் சுயஉதவிக் குழுக்களின் பாத்திரம் குழந்தைகளின் கல்வியில் எத்தகைய நல்ல விளைவுகளை ஏற்படுத்தி இருக்கிறது என்று அறிய முடியும். நாம் ஆய்வு செய்த 30 பெண்களில் 8பேர் படிக்காதவர்கள். 30 பேரில் ஒருவர்கூட 12ஆம் வகுப்பு தாண்டவில்லை.

   அவர்களின் பள்ளி செல்லும் வயதில் உள்ள குழந்தைகளில் எல்லோரும் படித்துக் கொண்டு இருந்தவர்கள். அல்லது கொஞ்சமாவது படித்து முடித்துவிட்டு வீட்டில் இருந்தார்கள். (23பெண் குழந்தைகள் +2 வும் அதற்கு மேலும்கூட படித்துஇருந்தார்கள்).

   சுய உதவிக்குழுக்களால் தாங்கள் அடைந்த நன்மை என்பது குழந்தைகளை கொஞ்சம் படிக்க வைத்ததுதான் என்று தலித் பெண்கள் எல்லோரும் கூறுவதும் சுவையான விசயம்தான்.

4. எந்த ஒரு சிறு தொழிலை செய்யவோ, ஏதேனும் சொத்து சேர்க்கவோ செய்த தலித் பெண்ணை காண்பது மிக சிரமம். சில பெண்கள் முயற்சி செய்துள்ளனர். ஆனால் அவர்களின் குடும்ப பிரச்சனைகளும் மற்ற சமூக காரணங்களாலும் அவர்களால் அதை தொடர்ந்து நடத்த முடியவில்லை.

5. தலித் பெண்கள் குழுக்களுக்கு கடன்கள் வழங்குவது பற்றிய விசயத்தில் வங்கி மேனேஜர்களுக்கு எதிர்மனப்பான்மை பரந்த அளவில் இருக்கிறது. பெரும்பாலான மேனேஜர்கள் தலித் சுயஉதவிக் குழு கடன்கள் வழங்க மறுப்பதற்கு “கடன் தருவதற்கான செக்யூரிட்டி ஆவணங்கள் இல்லை” வாங்கிய கடன்களை திருப்பி செலுத்தாமல் இருக்கிற முந்திய அனுபவம் இருக்கிறது என்ற காரணங்களை கூறுகின்றனர். தலித் பெண்கள் தொடர்ச்சியான முன் முயற்சிகள் எடுப்பதற்கு எதிரான முதன்மையான காரணங்களில் ஒன்றாக இது குறிப்பிடப்படுகிறது.

களஆய்வு:

# ராணி

(பாலூர் கிராமம். கடலூர் மாவட்டம்)

“நான் 16 வயசுல கல்யாணமானேன். மூன்று குழந்தைங்க இருக்காங்க. நானும் என் வீட்டுக்காரரும் விவசாயக்கூலி வேலை செய்றோம். குடும்பத்தை நடத்த முடியாம கஷ்டப்படுறோம்.

எங்க குழந்தைகளின் படிப்புச் செலவுக்கு நாங்க வட்டிக்கு பணம் தருபவர்களிடம் கடன் வாங்குவோம்.

BWDA எனும் தொண்டு நிறுவனம் ஆரம்பிச்ச சுயஉதவிக்குழுவிலதான் நான் 2004ல் சேர்ந்தேன். எனது குடும்பத்தோட பொருளாதார நிலையை சரி செய்யலாம்னு நம்பிக்கையோட அதில் சேர்ந்தேன்.

எனக்கு 5ஆயிரம் லோன் கிடைச்சது. அதை வச்சு நான் இட்லிக்கடை வைச்சேன். அதனால எனக்கு மாதம் 1000ரூபாய் வருமானம் கிடைச்சது. இந்த கூடுதல் வருமானத்தை வச்சு நான் என் இரண்டு பொண்ணுங்களுக்கும் கல்யாணம் முடிச்சேன்.

மூணாவது பொண்ணோட காலேஜ் படிப்புக்கும் நான் 2000 ரூபாய் லோன் எடுத்து சமாளிச்சேன். எங்க சுயஉதவிக்குழுவுக்கு கிடைத்த வங்கிக்கடன் வட்டி அதிகமாக இருந்ததால எங்களால லோனை திரும்ப கட்ட முடியலே. தற்போது எங்க குழு ரொம்ப பலவீனமாக இருக்குது.

ஒரு பாங்க் மேனேஜரை பார்த்து லோன் போடலாம் என்ற எங்க முயற்சிகள் எல்லாம் வீணா போயிடுச்சு. அவரு எங்கள நம்பல. எங்களுக்கு லோன் தர நில பத்திரங்கள் கொண்டு வந்து கேரண்டிக்கு கொடுங்கள் என்று சொல்கிறார். இதனால எங்களால பேங்க் லோனை பயன்படுத்த முடியலே”

## தலித் பெண்களும் கடனுதவி கிடைப்பதும்

A) தாட்கோ தலித் சுய உதவிக் குழுக்களுக்கு 10 லட்சம் ரூபாய் கடன்கள் வழங்க வேண்டும். அதில் 75 சதவீதம் மானியமாக தர வேண்டும்.

B) தலித் உதவிக்குழுக்களின் தயாரிப்புகளுக்கு சந்தை தொடர்புகளை அரசாங்கம் உருவாக்க வேண்டும். மார்க்கெட்டிங் செய்வதற்கும், வாகனங்கள் வாங்கவும் அரசு நிதி உதவ வேண்டும்.

C) ஆட்டோ ஓட்ட பயிற்சியும், லைசென்சும் தலித் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

D) தலித் பெண்களின் சுய உதவிக்குழுக்களுக்கு டிராக்டர், டிரில்லர், நடவு இயந்திரங்கள் உள்ளிட்டவற்றை வழங்க வேண்டும்.

E) நுகர்கடன் வழங்க ஒவ்வொரு கிராமத்திலும் வங்கி இருக்க வேண்டும். அதில் தலித் பெண்கள் ஊழியராக நியமிக்கப்பட வேண்டும்.

F) தலித் பெண்கள் சுயஉதவிக் குழுக்களுக்கு 10 லட்சம் நிதி நிலம் வாங்கவும், அதை மேம்படுத்தவும் தரப்பட வேண்டும்.

G) ஒவ்வொரு பஞ்சாயத்திலும் தலித் பெண்களுக்கு ஒரு சமூகநிலை மையம் அமைக்க வேண்டும்.

H) ஒவ்வொரு சுயஉதவிக்குழுவுக்கும் சூரிய சக்தி யூனிட்டுகள் முழுமையான மானியத்தோடு தரப்பட வேண்டும்.

I) படித்த தலித் பெண்கள் நிர்வாக பணியாளர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

J) சுய உதவிக்குழுக்களின் கணக்குகளை பராமரிக்கும் நிர்வாக பணியாளர்களில் குறைந்தபட்சம் 60 சதவீதம் பேர் தலித் பெண்களாக இருக்க வேண்டும். அவர்களுக்கு மாதம் குறைந்த பட்சம் 10ஆயிரம் ரூபாய் சம்பளம் தர வேண்டும்.

K) இயற்கை உரம் தயாரிப்பு சுய உதவிக்குழுக்கள் மட்டத்திலும் பஞ்சாயத்து மட்டத்திலும் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அதற்கு கட்டுமானம் மார்க்கட்டிங்குகளுக்கான முழுமையான மானியம் தரப்பட வேண்டும்.

L) தலித் பெண்கள் சுய உதவிக்குழுக்களுக்கு நியாயவிலைக் கடைகள் நடத்த லைசென்ஸ் தரப்பட வேண்டும்.

M) பஞ்சாயத்து அளவில் நடக்கும் திட்டப் பணிகளை செய்ய தலித் பெண்களுக்கு ஒப்பந்தம்.

N) தலித் விதவை, மாற்றுத் திறனாளி, கணவனால் கைவிடப்பட்டோருக்கு மாத உதவித் தொகையாக ரூ.5000-/ தரப்பட வேண்டும்.

*(இந்த ஆய்வுக்கான துணை அமைப்புகளில் ஒன்றான மனிதவள மேம்பாட்டுக்கான அமைப்பு 15 டிசம்பர் 2012ல் ஒருங்கிணைத்த தலித் பஞ்சாயத்து தலைவிகளுக்கான பயிலகத்தில் உருவான பரிந்துரைகள்)*

## பரிந்துரைகள்:

1. தமிழ் மகளிர் மேம்பாட்டுக் கழகம் மாநிலத்தில் உள்ள தலித் சுய உதவிக்குழுக்களைப் பற்றிய எண்ணிக்கையையும், அவர்களின் நிலைபற்றிய விபரங்களையும் தனியாக தொகுக்கும் முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டும். அதைப்போலவே இந்த குழுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் சதவீதத்தைப்பற்றிய விபரங்களையும் தனியாக பராமரிக்க வேண்டும். அப்படி செய்தால்தான் தலித் சுய உதவிக்குழுக்களை சிறப்பாக செயல்பட வைப்பதற்காக சரியான திட்டமிடுதலை செய்ய முடியும்.

2. மகளிர் திட்டத்துக்கு ஒதுக்கப்படுகிற மொத்த நிதியில், தலித் பெண்கள் குழுக்களுக்கு போதுமான நிதிஆதாரங்கள் தனியாக ஒதுக்கி எடுத்து வைக்கப்படுகின்றனவா? நிதி சரியான முறையில் பயன்படுகிறதா? என்பதையும் அது தலித்துக்களுக்கான சிறப்புத் திட்டத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப இருக்கிறா? பாலின புரிதலோடு உள்ள பட்ஜெட் அடிப்படையில் இருக்கிறதா என்பதை தமிழக அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

   இந்த நோக்கத்திற்காக தமிழக மகளிர்மேம்பாட்டு கழகத்தில், சிறப்புக்கூறு திட்டத்தின் அடிப்படையிலான ஒரு செயல் பிரிவு தனியாக உருவாக்கப்பட வேண்டும்.

3. தலித் பெண்களின் உண்மையான தேவைகள், அவர்களின் திறன்களை கணக்கில் கொண்டு, முன்னோட்டமான ஒரு திட்டத்தை மகளிர் மேம்பாட்டு கழகம் ஆரம்பிக்க வேண்டும். இந்த முயற்சியில் சிவில் சமூகத்தின் நிபுணர்கள், நுண் கடனிலும் தலித் பெண்களுக்கு அதிகாரமளிக்கும் தலித்துகளுக்கான சிறப்புக்கூறு திட்டத்திலும், பாலின புரிதலோடு பட்ஜெட் உருவாக்கப்படுதல் பற்றிய ஆய்வுத் தளங்களிலும் சிறப்புத்திறன் கொண்டஅரசு அதிகாரிகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் ஆகியோரும் ஈடுபடுத்த வேண்டும்.

4. தலித் பெண்களுடைய சமூக, பொருளாதார இயலாமைகளுக்கும் நிபுணத்துவமான திறன்கள் இல்லாத நிலையும் தலித் சுயஉதவிக் குழுக்களுக்கு குறிக்கோள் மீது தொடர்ச்சியான ஈடுபாடு இல்லாத நிலையை ஏற்படுத்துகிறது. எனவே தலித் பெண்களின் சுய உதவிக்குழுக்களுக்கு பல்வேறு கட்டத்திலும் இணைந்து உழைக்கும் தொடர்ச்சியான செயல்பாடு தேவைப்படுகிறது. எனவே குறிக்கோள் மீதான தொடர்ச்சியான ஈடுபாடு இருப்பதற்கும் அவர்களின் திறன்களை வளர்த்து எடுப்பதற்கும் சிறப்பான உத்திகளோடு பயிற்சிகள் உண்டாக்கப்பட வேண்டும்.

5. இத்தகைய எல்லா தடைகளையும் தாண்டி சில தலித் பெண்கள் சுய உதவிக் குழுக்களை பயன்படுத்தி பொருளாதார மேம்பாடுஅடைந்துள்ளனர். சில இடங்களில் சொத்துள்ளவர்களாகவும் மாறி உள்ளனர். இத்தகைய வெற்றிச் சம்பவங்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய முயற்சிகளில் ஈடுபடும் பெண்களை ஊக்குவிக்கும் ஆதார தகவல்களாக இது இருக்கும்.

6. தலித் சுய உதவிக் குழுக்களுக்கு தொடர்ந்து கடன்களை வழங்க மறுத்துக் கொண்டு இருக்கும் வங்கிகளுக்கு, தமிழக அரசு ஒரு பலன் தரும் மாற்றை கண்டுபிடிக்க வேண்டும். சிறப்பான வங்கிகள், நுண்கடன் நிறுவனங்கள், தாட்கோ, பட்டியல் சாதியினர் நிதி மேம்பாட்டு கழகங்கள் போல உருவாக்க வேண்டும்.

# தமிழ்நாட்டில் கையால் மலமள்ளும் தொழிலாளிகளுக்கான மறுவாழ்வு

# அனைத்து திட்டங்களும் படுதோல்வி

களஆய்வு:

## நிர்மலா

(சென்னை)

“என் வீட்டுக்காரர் சுத்தம் செய்யும் வேலைதான் செய்தார். அவர் ஆயுசு பூரா தினக்கூலிக்கு வேலை செய்தார். உடம்புக்கு கெடுதியான முறையில் வேலை செய்தாலும் அவருக்கு தேவையான எந்த பாதுகாப்பு சாதனங்களும் தரப்படாததாலும் சின்ன வயசுலேயே அவர் செத்துட்டாரு.

நான் விதவையாயிட்டேன். எனக்கு ரண்டு பசங்களும் ரண்டு பொண்ணுங்களும் இருக்காங்க.எனக்கு வேற வழியில்ல. கையால கழிவை அள்ளுற அதே வேலைக்குத்தான் நானும் போனேன்.தினமும் எனக்கு வாழ்க்கையே தினமும் போராட்டமாகவே இருக்கிறது.

என்னோட எந்த குழந்தையும் படிப்பை முழுதாக முடிக்கலே.எனக்கிருந்த பணக்கஷ்டம் அப்படி இருக்கு. நான் வாங்கின கடன் எல்லாத்தையும் கழிச்சப்பறம் எனக்கு மாசம் 4000 ரூபாய் கையில வருது. கூடுதலாக வருமானம் வேணுங்கிறதுக்காக நான் எக்ஸ்ட்ராவா வீட்டுவேலை செய்றேன். வாழ்க்கை தொடர்ந்த போராட்டமாக இருக்கிறது.

இந்த கடன் வலையில் இருந்து தப்பிக்க நான் சொஸைட்டியில் இருந்து லோன் போட்டேன்.அதுவும் உதவலே. அதுக்கே நான் லோன் வாங்கிக்கொடுக்கிற ஏஜெண்டுக்கு 5 ஆயிரம் லஞ்சம் கொடுக்க வேண்டி இருந்தது.

கடும் வட்டி,மோசமான கண்டிசன்கள் தெரிந்தும் கூட நான் திரும்பவும் கந்துவட்டி கடன் வலையில் போய் மாட்டினேன். சொஸைட்டில வாங்கின கடனை நான் இந்த மாதிரி கந்து வட்டி கடன்களை சமாளிக்கவே பயன்படுத்தினேன்.

என்னுடைய 10 முழு நாளுக்கான தினக் கூலியைத் துறந்து நான் இந்த 10 நாள் பயிற்சியில் கலந்து கொண்டேன். ஆனால் இந்த பயிற்சி மறுவாழ்வுக்கான எந்த நடைமுறைக்கும் இட்டுச் செல்லவில்லை. தாட்கா நிறுவனத்திலிருந்து எனக்கு தேர்வுக்கான அழைப்பு வந்தபோதிலும் ஒன்றும் நடக்கவில்லை. சிண்டிகேட் வங்கி எந்த கடனையும் வழங்க மறுத்துவிட்டது.”

சுதந்திரம் அடைந்து 60 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஆனால் இன்னமும் கையால் மலம் அள்ளுதல் எனும் கொடுமை மாநிலத்தில் பரந்த அளவில் உள்ளது. நாடு தழுவிய அளவிலும் உள்ளது. நமது சமூகத்தில் ஒரு அவமானமாகவே இன்னமும் நீடிக்கிறது. இதனை ஒழிப்பதற்கு தேவையான வலிமையான அரசியல் உறுதியும் இல்லை. மக்களிடம் இருந்து போதுமான அளவுக்கு அரசாங்கத்துக்கு நெருக்கடியும் தரப்படவில்லை.

மாநிலத்தில் உள்ள கையால் மலம் அள்ளும் தொழிலாளர்களில் கணிசமானோர் பெண்களாக உள்ளனர்.

மத்திய அரசும், மாநில அரசும், கையால் மலம் அள்ளும் தொழிலாளிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக என வரிசையாக பல திட்டங்களை வெளியிட்டனர். ஆனால் கையால் மலம் அள்ளுவோரின் சமூக பொருளாதார நிலைமைக்கும், இந்த திட்டங்களுக்கும் இடையே பாதாள இடைவெளி இருக்கிறது. இதனால் ஏறத்தாழ எல்லா திட்டங்களுமே படுதோல்வி அடைந்துள்ளன.

## கையால் மலமள்ளுவோர் மற்றும் அவர்களை சார்ந்து இருப்போரின் விடுதலைக்கும், மறுவாழ்வுக்குமான தேசிய திட்டம்

இந்த திட்டத்தை இந்திய அரசு. 1992 மார்ச் மாதம் தொடங்கியது. ஐந்து ஆண்டுகள் முடிக்க வேண்டும் என இந்த திட்டம் தனக்குத்தானே இரண்டு குறிக்கோள்களை வைத்துக் கொண்டது. அவை வருமாறு:

- மலத்தையும், கழிவுகளையும் கையால் அள்ளுகிற மனிதத்தன்மையற்ற நிலையிலும் பரம்பரை பரம்பரையாக இத்தகைய இழிவில் இருக்குமாறு செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களையும், இவர்களை சார்ந்து இருப்பவர்களையும் விடுதலை செய்வது.
- கையால் மலம் அள்ளும் தொழிலாளர்களுக்கும் அவர்களை சார்ந்து இருப்போருக்கும் மறுவாழ்வு அளிப்பது.

இதற்காக அவர்கள் மேற்கொண்ட முக்கியமான இரண்டு வழிமுறைகள் வருமாறு:

- உலர் கழிப்பறைகளை, நவீன தண்ணீர்வசதி உள்ள கழிப்பறைகளாக மாற்றி அமைப்பது.
- கண்ணியமான, ஆதாயமுள்ள மாற்றுவேலை வாய்ப்பை வழங்குதல்.

ஆனால் இன்று வரை இந்த திட்டம் என்பது ஏராளமான நிதிகளை வீணாக்குவதாகவும், உறுதி மொழிகளை நிறைவேற்றாததாகவும் தொடர்கிறது.

**மத்திய தலைமை கணக்கு மற்றும் தணிக்கை அறிக்கை இந்த திட்டத்தை ஆய்வு செய்துள்ளது. இந்த 10 ஆண்டுகாலம் (1992 - 2002), 600 கோடி ரூபாயை மத்திய அரசு, மாநிலங்களுக்கு அனுப்பி வைத்தது என்பது "சாக்கடைக்குள் காணாமல் போய்விட்டது" எனக் குறிப்பிட்டுள்ளது!**

களஆய்வு:

## சிரோன்மணி

**(சூளை, சென்னை)**

“என்னோட அம்மாவும், அப்பாவும் இந்த வேலைதான் செஞ்சாங்க. நானும் ஒரு மாநகராட்சி பள்ளியிலே பகுதி நேர துப்புரவாளராக இருக்கேன்.

ஒரு மனுசன கல்யாணம் செஞ்சேன். அவரு குடிகாரராக ஆயிட்டாரு. என்னையும் கைவிட்டுட்டாரு. நான் என் குடும்பத்தை நடத்த என்னால ஆன வரைக்கும் முயற்சி செய்றேன். அதுக்காக நான் டிபன் கடை, டெய்லர் வேலை, எக்ஸ்போர்ட் கம்பெனி வேலை, என பலதை செய்றேன். ஜனோதயம் அமைப்போடு நான் இரண்டு வேலை செய்றேன்.

தாம்ஸ் அமைப்பின் துணைத் தலைவராக 2001 முதல் இருக்கேன். நானும் என்னை மாதிரி ஆளுங்க 20 பேர் கையால் மலம் அள்ளுகிறவர்களாக சேர்ந்து ஒரு குழு அமைத்தோம். தாட்கோவின் சானிட்டரி மார்ட் திட்டத்தில் இணைஞ்சோம். ஒரு கடையை நடத்துகிறது பற்றிய விசயங்களில் நாங்கள் தேர்ச்சி பெற 10 நாட்கள் பயிற்சியும் தரப்பட்டது.

ஆனாலும், எங்களின் தொடர்ந்த பல முயற்சிகள் இருந்தாலும் எங்களால் தொடர்ந்து அந்த கடையை நடத்த முடியவில்லை. இதற்கு கீழ்க்கண்ட பின்னடைவுகள் ஏற்பட்டன.

- தாட்கோ 2 லட்ச ரூபாய் கடனாகவும், 2 லட்ச ரூபாய் மானியமாகவும் சேர்த்து நான்கு லட்ச ரூபாய் கடனுதவி அளித்தது. ஒரு கடையை தொடர்ந்து லாபம் தர்ற மாதிரி நடத்துறதுக்கு இந்த தொகை போதுமானதாக இல்லை. பெரும்பாலான பணம் வாடகைக்கும் இதர செலவுகளுக்குமே போய்விட்டது.

- தாட்கோவின் கடன்கள் எதுவுமே சரியான நேரத்தில் வரவில்லை. அதனால் வேற வேறு வகையில் நாங்கள் கடன்களை வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

- சந்தையில் எப்படி செயல்படணும் என்பது பற்றியும் நிர்வாகத் திறமைக்கும் எங்களுக்கு தரப்பட்ட பயிற்சி மிகவும் குறைவு. இது விசயத்தில் தொடர்ந்து கண்காணிப்போ, எங்களது திறன் வளர்ப்புக்கு தொடர் முயற்சிகளோகூட இல்லை.

- 20பேர் கொண்ட குழுவுக்கு தருவதற்கு பதிலாக, போதுமான ஆதரவுகளோடு ஒவ்வொரு தனி நபருக்கும் கடனுதவி கிடைத்து இருந்தால் இந்த திட்டம் வெற்றியடைந்து இருக்கும். எங்களின் பெரும்பான்மையோருக்கு ஒரு குறிக்கோள் சார்ந்த ஈடுபாட்டின் மட்டம் குறைவாக இருந்தது. ஒரு சிலர் கூடுதலாக பல முயற்சிகளை எடுத்தோம். ஆனாலும் இதுவும் போதுமான அளவு திறமை கொண்டதாக இல்லை என்றாகியது.”

## (கையால் மலமள்ளுவோர் மற்றும் அவர்களை சார்ந்துள்ளோர் விடுதலை மற்றும் மறுவாழ்வுக்கான தேசிய திட்டம் தமிழகத்தில் செயல்பட்ட முறை)

- மத்திய அரசால் இந்த திட்டம் 1992 டிசம்பரில் அறிவிக்கப்பட்டபிறகு மாநில அரசு இந்த திட்டத்தை அமலாக்குவதற்கான அமைப்பாக தாட்கோவை நியமித்தது.
- இந்த திட்டத்தில் கையால் மலமள்ளும் தொழிலாளிகளும் அவர்களை சார்ந்து இருப்போருக்கும் ஒரு நிதி உதவி அளிக்கும் பிரிவு இருக்கிறது. பல்வேறு திட்டங்களுக்கு ரூ.50,000/- வரை (மானியம் 50% மும் அல்லது அதிகபட்சம் ரூ.10,000மும், 15% மார்ஜின் பணமாக ரூ.7,500/-மும் தவணைகளாக கட்டவேண்டிய கடனுதவியாக ரூ.32,500மும்) ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் இருந்து கிடைக்கும்.
- 2006ல், மாநில அரசாங்கம் 35,561 கையால் மலமள்ளும் தொழிலாளிகள் அடையாளம் காணப்பட்டதாக அறிவித்தது. அவர்களில் 23,832 பேருக்கு நிதி உதவி ரூ.4156.207 லட்சங்களும் ( மானியமாக ரூ.2005.881 லட்சங்களும், மார்ஜின் பணமாக ரூ.581.33 லட்சங்களும், தேசிய கையால் மலமள்ளுவோர் மற்றும் அவர்களை சார்ந்து இருப்போருக்கான நிதி மேம்பாட்டு கழகத்திடம் இருந்து பெற்ற தவணை முறையில் கட்டக்கூடிய கடனுதவி ரூ.1568.99 லட்சங்கள்) பல்வேறுவகையான சுயதொழில் செய்வதற்கு வழங்கப்பட்டன.
- ஆனால் யதார்த்தநிலைகளை ஆராயாமல், மாநில அரசாங்கம் அனைத்து 23,832 கையால் மலமள்ளும் தொழிலாளர்களும் மறுவாழ்வு அளிக்கப்பட்டு விட்டதாக அறிவித்தது.

ஆனால், அரசுக்கு சொந்தமான அமைப்புகளும் தனியார் அமைப்புகளும் பல்வேறு ஆய்வுகளில் கண்டபடி நிதி ஒதுக்கீடுகளுக்கும் பல்வேறு அமைப்புகளின் மூலம் இந்த திட்டத்தை ‘அமலாக்கும்போது நடக்கிற உண்மையான செலவுகளுக்கும் இடையே ஒரு பாதாள இடைவெளி இருக்கிறது. மேலும் பணம் பெருமளவில் பயன்படுத்தப்படாமல் இருப்பதை அது சுட்டிக்காட்டுகிறது.

- **கையால் மலமள்ளுவோர் மற்றும் அவர்களை சார்ந்து இருப்போரை விடுதலை செய்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தலுக்கான தேசிய திட்டம் அமலாகி பத்து ஆண்டுகளுக்கு பிறகும்கூட மாநில அரசால் அடையாளம் காணப்பட்ட சுமார் 12,500 தொழிலாளிகளுக்கு எந்த ஒரு உதவி கூட கிடைக்கவில்லை என்கிறது 2003 தலைமைத் தணிக்கையாளர் அறிக்கை. இந்த திட்டத்துக்கான மத்திய அரசின் உதவித்தொகையான சுமார் ரூ 30 கோடிகள் தாட்கோவில் மார்ச் 2002 வரை பயன்படுத்தப்படாமல் கிடந்தது.**
- தாட்கோவின் அறிக்கைகளைப் பயன்படுத்திய தணிக்கை அறிக்கை மறுவாழ்வு தரமுடியாமல் தடை ஏற்பட்டதற்கான பிரதான காரணம் வங்கிகள் மலமள்ளும் தொழிலாளிகளுக்கு கடன்கள் தர மறுத்துவிட்டதே எனக் குறிப்பிடுகிறது,அதை பரிசோதித்து பார்த்தபோது ஏறக்குறைய 40,000 விண்ணப்பங்களில் சுமார் 60% விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு தாட்கோ மூலம் 1998-2002, காலகட்டத்தில் அனுப்பப்பட்டன. அவை பல காரணங்களை சொல்லி நிராகரிக்கப்பட்டன. அதனால் வழங்கப்பட்ட 57.80 கோடி ரூபாய்களில் ரூ.32.72 கோடிகள் பயன்படுத்தப்படாமல் கிடந்தன.

களஆய்வு:

## பத்மா

(கீழ்ப்பாக்கம், சென்னை)

"எங்க அப்பா ஒரு துப்புரவு தொழிலாளியாக இருந்தார்.

என் வீட்டுக்காரர்தான் வீட்டுல சம்பாரிக்கிற ஒரே மனுசன்.கேஎம்சி ஆஸ்பத்திரி முன்னால டீ விக்கிறாரு. அதுல கொஞ்சமாத்தான் வருமானம் வருது.அதனால நான் சீட்டு பிடிப்பேன்.

எனக்கு மூணு பசங்க.12ஆங்கிளாஸ்,10ஆங்கிளாஸ்,7ஆங்கிளாஸ் படிக்கிறானுங்க.

ஜனோதயம் அமைப்போட நான் 7 வருசமாக இருக்கேன். அருண்ஜோதி பெண்கள் மேம்பாட்டு சங்கத்துல நான் தலைவராக இருக்கேன்.ஜனோதயம் அமைப்பில இருக்கிறது எனக்கு சுயமரியாதையையும் தைரியத்தையும் மக்கள் மத்தியில தருது.

கையால் மலம் அள்ளும் பெண் தொழிலாளிகளுக்கான சுபமதி திட்டத்தை தாட்கோ அறிவித்தது. அதனால கீழ்ப்பாக்கத்துல 40குழுக்களை ஜனோதயம் ஒருங்கிணைச்சது. அவர்களை பதிவு செய்யவும் ஏகப்பட்ட அதிகாரிங்க கேட்கிற விபரங்களை எல்லாம் தர்றது உள்பட ஏராளமான பேப்பர் வேலையை அது செஞ்சது. என் குரூப்பில 10 பேர் இருந்தோம். அதில 4பேர் லோன் கேட்டோம். ஆனால் எங்களுக்கு லோன் அந்த பாங்க் மேனேஜர் தரவே இல்லை.லோன் கிடைக்கணுங்கிறதுக்காக ஒரு ஏஜெண்ட்டுக்கு 2500 ரூ லஞ்சம் தரவேண்டி இருந்தது. ஆனால் அதற்கு பிறகும் ஒண்ணும் நடக்கலே.

இந்த மொத்த திட்டமும் ஒரு அரசியல் லாபத்துக்காக தான் வெளியாகி இருக்கிறது.கையால் மலமள்ளும் பெண் தொழிலாளிகளுக்கு மறுவாழ்வு தரவோ அவர்களுக்கு உண்மையாகவே அதிகாரம் வழங்கவோ இந்த திட்டத்துக்கு அக்கறை இல்லை என்பது வெளிப்படையாக தெரிகிறது.

அரசியல் தலைவர்கள் மேடையில தருகிற பெரிய பெரிய காசோலைகள் எல்லாத்தையும் ஒருபோதும் பணமாக்க முடியல.

தாட்கோ தான் லோன் தருகிறது என்றாலும் கூட அந்த லோனை வாங்குவதற்கான தகுதிகளை ஆராய்வது மகளிர்திட்ட அதிகாரிகள்தான். அவர்களின் எதிர்பார்ப்புகளிலும் அவர்களின் வரையறைகளிலும் நாங்கள் யாரும் கையால் மலமள்ளுவோர்தான் என்று நிருபிக்க முடியாத நிலைதான் இருக்கிறது.

எங்களோடைய குழுக்களில் ஒன்று தான் லோனை வாங்கியது.ரூ.3.75 லட்சம் லோனில் ரூ 2 லட்சம் திருப்பி கட்டணும். மற்றவர்கள் எல்லாம் லோன் வாங்க முடியவில்லை. லோன் வாங்கிய குழு கூட தாக்குப்பிடித்து நிற்கவில்லை. அந்த பணத்தை அவர்கள் தங்களுக்குள் பிரித்துக்கொண்டார்கள். அதற்கு பிறகு வழக்கமான எல்லா செலவுகளும் நடந்து முடிந்தது.'

இந்த மொத்த திட்டமுமே எங்களை மாதிரியான பெண் மலமள்ளும் தொழிலாளிகளுக்கும் ஜனோதயம் அமைப்புக்கும் ஒரு கசப்பான அனுபவமாக மாறிவிட்டது!".

✦ ‘தேசிய கையால் மலமள்ளுவோர்களுக்கான நிதிமேம்பாட்டுக் கழகத்தின் ஒரு கூட்டத்தில் ஜுன் 8, 2011, அன்று தாட்கோ பிரதிநிதிகள், கையால் மலமள்ளுவோர் மற்றும் அவர்களை சார்ந்துள்ளோர் விடுதலை மற்றும் மறுவாழ்வுக்கான தேசிய திட்டத்துக்காக, 2009ல் பெறப்பட்ட 50 கோடிகளில் 38 கோடிகளை செலவு செய்யாமல் வைத்து இருப்பதாக தெரிவித்துள்ளனர். அந்த 38கோடிகளை திருப்பி தந்துவிடும்படி மாநில அரசாங்கத்துக்கு தெரிவிக்கப்பட்டது.

✦ சபை கரம்சாரி அந்தோலன் அமைப்பின் தேசிய கவுன்சில் உறுப்பினர் திருமிகு. தீப்தி சுகுமார் இதே கூட்டத்தில் ஆதிதிராவிட நலத்துறையிடம் 12 மாவட்டங்களில் உள்ள 174 கையால் மலம் அள்ளும் தொழிலாளிகளின் பட்டியலை ஒப்படைத்தனர். கையால் மலமள்ளுவோர் மற்றும் அவர்களை சார்ந்துள்ளோர் விடுதலை மற்றும் மறுவாழ்வுக்கான தேசிய திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து மீட்கப்பட வேண்டியவர்கள் என்ற அந்த அமைப்பால் அவர்கள் அடையாளம் காணப்பட்டவர்கள். **ஆனால் அவர்களில் ஒருவர் கூட இந்த திட்டத்தின் கீழ் மீட்கப்படவில்லை.**

## சானிடரி மார்ட் திட்டம்

- 2000 ல் இந்திய அரசாங்கம் சானிடரி மார்ட் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. குறைந்தபட்சம் 20பேர் கொண்ட குழுக்களுக்கு நிதி உதவி செய்யப்படும். சுகாதாரப்பணிகளுக்கான பொருள்களான பினாயில், பிளீசிங் பவுடர், டாய்லெட் மெட்டீரியல்கள் உள்ளிட்டவற்றை உற்பத்தி செய்ய உதவி செய்யப்படும். அதற்கான கடன் உதவி (ஆளுக்கு 10ஆயிரம் மானியத்துடன் கூடிய 20ஆயிரம் ரூபாய்,15 சதவீத மார்ஜின் பணமாக ரூ 3 ஆயிரமும் ரூபாய் 7ஆயிரத்தை தவணைகளில் கட்டக்கூடிய 35 சதவீத கடனாக) ரூபாய் 4 லட்சத்தை தேசிய கையால் மலமள்ளுவோர்களுக்கான நிதிமேம்பாட்டுக்கான கழகம் வழங்குகிறது.
- ஆயிரம் சானிடரி மார்ட் கடைகளை உருவாக்க மாநில அரசுக்கு 40. 17 கோடிகள் தரப்பட்டது.

**ஆயிரம் கடைகளை உருவாக்கி 25ஆயிரம் பேருக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என திட்டமிடப்பட்டது.ஆனால் 158 கடைகள்தான் உருவாக்கப்பட்டன 3100 பேருக்கு உதவியது என்று 2003 தலைமை தணிக்கையாளர் அறிக்கை கூறுகிறது.**

✦ தெளிவில்லாத பார்வையோடும் மோசமான முறையில் நிர்வகிக்கப்படுவதாகவும் இந்த திட்டம் இருக்கிறது என்று படுமோசமாக விமர்சிக்கப்படுகிறது:

✦ அவர்கள் தயாரிக்கிற பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு எந்த ஒரு உள்கட்டமைப்புகளும் இல்லை. இந்த திட்டத்தில் பயனடைபவர்களின் திறன்களை வளர்ப்பதற்கான எவ்வித பயிற்சிகளும் அளிக்கப்பட வில்லை.

✦ 20 பேரை ஒரு குழுவாக கொண்டு செயல்படுத்தப்படுகிற ஒரு திட்டத்தில் வரக்கூடிய கடுமையான நிர்வாகப்பிரச்சனைகள் திறன்மிக்க முறையில் கையாளப்பட வில்லை.

✦ சானிடரி பொருள்களை மட்டும்தான் உற்பத்தி செய்ய வேண்டும் என்று கட்டுப்படுத்தி வைக்கும்படியானதாக இந்த திட்டம் இருப்பது என்பது அதை உருவாக்கியவர்களின் சாதிய மனப்பான்மையை காட்டுகிறது. அதற்கு எந்த பொருளாதார தர்க்கமோ பொருத்தப்பாடோ இல்லை.

# சுபமதி சுய உதவிக்குழுக்கள்

தமிழக அரசு ஜூன் 2002ல், கையால் மலமள்ளுவோர் மற்றும் அவர்களை சார்ந்து இருப்போருக்கான பொருளாதார மேம்பாட்டுக்காக ஒரு புதிய திட்டத்தை மத்திய அரசுக்கு அளித்தது.(பார்க்க: அரசு ஆணை எண் 5109/ADW-8/2001-B, தேதி 18.06.2002). மிகவும் ஏழையாக இருக்கிற கையால் மலமள்ளும் தொழிலாளிகளும் அவர்களை சார்ந்து இருப்பவர்களும் இந்த திட்டத்தின்படி தங்களை சுபமதி சுயஉதவிக்குழுக்களாக அமைத்துக்கொள்ள வேண்டும்.அவர்களுக்கு சுய உதவிக்குழுக்களின் திட்டங்களின்படி ஏதாவது ஒரு தொழில்முறை பயிற்சியும் நிதி உதவியும் அளிக்கப்படும்.

மகளிர் திட்டத்தை அமல்படுத்திக்கொண்டு இருக்கிற தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகம் இந்த திட்டத்துக்கும் பொறுப்பாக ஆக்கப்பட்டது.இந்த திட்டத்துக்கான அதிகபட்ச நிதி உதவி ஒவ்வொரு தனிநபருக்கும் 50ஆயிரம் என நிர்ணயிக்கப்பட்டது. (NSLRS மானியம் ரூ.10ஆயிரமும், 15% மார்ஜின் பணமாக ரூ 7500 மும் மாத தவணைகளாக கட்டக்கூடிய கடனாக ரூ 32,500 மும் இவை எல்லாம் உள்ளடங்கியது) பத்து பேர் கொண்ட ஒரு சுய உதவிக்குழுவுக்கு நிதி உதவி ரூ 5 லட்சம் (மானியமாக ரூ 100,000 மும், ரூ 75,000 மார்ஜின் பணமாகவும் ரூ 3,25,000 மாத தவணைகளாக கட்டக்கூடிய கடனாகவும்) தருவோம் என உறுதியளிக்கப்பட்டது.

- ஆனால் ஆகஸ்ட் 2005ல், தாட்கோ மேலாண் இயக்குநர் கீழ்க்கண்டவாறு ஒப்புக்கொள்ளவேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டார். “ இந்த குழுக்களின் உறுப்பினர்கள் மிக மோசமான பொருளாதார நிலையில் இருக்கின்றனர். **கடன்வலைகளில் மாட்டிக்கொண்டு உள்ளனர்.அதன் காரணமாக பெரும்பாலான சுபமதி சுயஉதவிக்குழுக்கள் ஒரு சுய உதவிக்குழு எப்படி செயல்பட வேண்டுமோ அத்தகைய முறையில் அவற்றால் செயல்பட முடியவில்லை.அதனால் சுழல் நிதியை கொண்ட குழுக்களாக இருப்பதே அவர்களுக்கு மிகவும் கடினமானதாக இருக்கிறது.!” (பார்க்க: ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு ஆணை எண் 136, தேதி 19.08.2005).**
- ஒவ்வொரு சுபமதி உதவிக்குழுவுக்கும் ரூ 10,000 சுழல்நிதி அளிக்கப்பட்டதும் கூட இந்த நிலையை மேம்படுத்த உதவ வில்லை.
- தாட்கோ நிறுவனம் 2007 ஆம் ஆண்டில் 1397 சுபமதி உதவிக்குழுக்களும் அவற்றில் 17,897 பேர்களும் அமைக்கப்பட்டதாகவும் அவர்களுக்கான நிதி உதவியாக 730.50 லட்சங்கள் வழங்கப்பட்டதாகவும் அறிவித்தது. இருந்த போதிலும் கூட அவற்றில் எந்த ஒரு குழு கூட தற்போது நடைமுறையில் இல்லை என்பது அரசாங்க அதிகாரிகள் மட்டத்திலும் சிவில் சமூக அமைப்புகளின் மட்டத்திலும் ஒரு பொதுவான நம்பிக்கையாக இருக்கிறது.

# களத்தில் கண்டவை

பல்வேறு வகையான மறுவாழ்வு திட்டங்களுக்கும் கையால் மலமள்ளுவோர் மற்றும் அவர்களை சார்ந்து இருப்போர்களின் உண்மையான பொருளாதார நிலைமைகளுக்கும் குறிப்பாக அவர்களில் உள்ள பெண்களின் வாழ்நிலைமைகளுக்கும் இடையே உள்ள இடைவெளியை பற்றிய ஆழமான புரிதலை ஏற்படுத்துவதற்காக சமூக கண்காணிப்பகம் தமிழ்நாடு தனது ஆய்வுப்பணியில் ஆய்வுத்துணைவர்களாக உள்ள அமைப்புகளில் ஒன்றாக இருக்கிற ஜனோதயம் எனும் அமைப்பை (அது கையால் மலமள்ளுவோரை அதிகாரப்படுத்துகிற பணிகளில் நீண்டகால அனுபவம் பெற்றது. சென்னையில் இயங்கும் ஒரு அரசுசாரா தொண்டு நிறுவனம்) ஈடுபடுத்தியது.கையால் மலமள்ளும் 30 பெண்தொழிலாளிகளிடையே ஒரு மாதிரி – ஆய்வை செய்யுமாறு கோரியது.அந்த 30பேரில் தமிழகத்தின் மாவட்டங்களான சென்னையைசேர்ந்தவர்கள் 20பேரும்,வேலூரை சேர்ந்த 5பேரும், திருநெல்வேலியை சேர்ந்த 5பேரும் இருந்தனர்.

அனைத்து பெண்களும் தாங்கள் பல்வேறு வகையான மறுவாழ்வு திட்டங்களின் கீழ் ஏதோ ஒரு வகையான கடன் உதவியை கோரியவர்கள். (20 பேர் தனது பேரிலேயே கேட்டுள்ளனர்.5 பேர் தங்களின் மகன்களின் பேரிலும், 5பேர் தங்களின் மகள்களின் பேர்களிலும் கேட்டுள்ளனர்.)

இந்த திட்டத்தில் அவர்கள் கேட்டுள்ள உதவிக்கான தொழிலில் அவர்களுக்கு அனுபவம் இருக்கிறதா என அவர்களிடம் கேட்கப்பட்டு இருக்கிறது. அவர்களில் 7 பேர் எந்த ஒரு அர்த்தமுள்ள தகவல்களையும் அதற்கு தரவில்லை. அதற்கு பதிலளித்த 23 பேரில்:

- ✦ 13 பேர் தாங்கள் அந்த திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட வில்லை என்றனர்.
- ✦ கடன் உதவி கிடைத்தவர்களில் 7 பேர் அதனை எதற்காக வாங்கினார்களோ அதற்கு செலவழிக்காமல் வேறு நோக்கங்களுக்கு செலவழித்துள்ளனர்.
- ✦ கடனுதவி வாங்கியவர்களில் இரண்டு பேர் அந்த தொகை மிகவும் குறைவானது என்றும் அதையும் கூட வைத்துக்கொண்டு எப்படி குறிப்பிட்ட தொழிலை செய்வது என்பதற்கான பயிற்சி எதுவும் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை என தெரிவித்தார்கள்.
- ✦ ஒரு பெண் தனக்கு அந்த திட்டம் பற்றியே எதுவும் தெரியாது என்று சொன்னார்.

பல்வேறு வகையான மறுவாழ்வு திட்டங்கள் தங்களின் அடிப்படையான நோக்கங்களை நிறைவேற்றுவதில் எவ்வளவு தூரம் பயனற்று போய் உள்ளன என்பதை இந்த கள ஆய்வில் கண்டு அறிந்தவை தெளிவாக காட்டுகின்றன. இந்த திட்டங்கள் மூலம் பயனடையக்கூடிய பயனாளிகளின் உண்மையான ஆற்றல்கள் அவர்கள் இப்போது இருக்கக்கூடிய நிலையில் அவர்களால் என்ன செய்ய முடியும் என்பதை கணக்கில் கொண்டு இப்போது இருகக்கூடிய மறுவாழ்வு திட்டங்கள் எல்லாவற்றையும் மறுவடிவமைப்பு செய்ய வேண்டிய தீவிரமான நெருக்கடி இருக்கிறது.

# தலித் பெண்களும் தமிழ்நாட்டில் மகாத்மாகாந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டமும்

## வேலை வழங்குதலில் மறைமுக சாதியம் இருக்கிறதா?

# தமிழகத்தில் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம்

தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தை அமலாக்குவதில் சிறப்பாக அமலாக்குகிற மாநிலங்களில் பொதுவாக தமிழகமும் ஒன்றாக மதிப்பிடப்படுகிறது.அரசாங்கத்தின் அமைப்புகளால் உருவாக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட புள்ளிவிபரங்கள் உண்மை என்றால் நாம் தமிழக அரசின் சாதனையை பற்றி உண்மையாகவே நல்ல தன்மையாகவே எடுத்துக்கொள்ளலாம்.

## தமிழகத்தில் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதி திட்டம் செயல்படும் முறை பற்றிய தகவல்கள் (2005-2012)

| வருடம் | வேலை வழங்கப்பட்ட குடும்பங்கள் | பெண்கள் | SC/ ST | 100நாள்கள் வேலை தரப்பட்ட குடும்பங்கள் | உருவாக்கப்பட்ட மனித வேலை நாள்கள் (லட்சத்தில்) | உருவாக்கப்பட்ட மனித வேலை நாள்கள் (%) | Labour Budget (கோடி களில்) | செலவினம் (கோடிகளில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2005-06 | 23,141 | 41 | 25 | N.A. | 2.29 | N.A. | N.A. | 3 |
| 2006-07 | 6,83,481 | 81 | 58 | N.A. | 182.87 | N.A. | N.A. | 151.64 |
| 2007-08 | 14,18,825 | 82 | 61 | 0.77 | 642.99 | 84 | 615 | 516.42 |
| 2008-09 | 32,56,419 | 78 | 62 | 6.39 | 1203.60 | 56 | 1722 | 1005.15 |
| 2009-10 | 40,04,871 | 83 | 62 | 8.84 | 2391.75 | 82 | 1963 | 1762.37 |
| 2010-11 | 44,13,124 | 83 | 58 | 11.29 | 2685.63 | 93 | 2895 | 2294.08 |
| 2011-12 | 58,16,369 | 83 | 59 | 14.08 | 3205.99 | 110 | 3572 | 2932.52 |
| 2012-13 | 55,47,170 | 84 | 56 | 4.66 | 3047.11 | 80 | 5002 | 3109.91 |

*குறிப்பு: உருவாக்கப்பட்ட மனித வேலைநாட்கள் என்ற கட்டத்தில் சதவீதம் என்று உள்ள விபரங்கள் மொத்த இலக்கை ஒப்பிட்டு எடுக்கப்பட்டவை.*

N.A. விபரம் கிடைக்கவில்லை.

- 2012 டிசம்பர் 31 நிலவரப்படி
- 2013 ஜனவரி 23 நிலவரப்படி

ஆதாரம்: அரசின் கிராமப்புற மேம்பாட்டு ஆணையரகம்

ஆனால் மாநில அரசு மிகச்சரியானதாக ஒரு தோற்றம் தருகிற இந்த அறிக்கையை தருகிற அதே நேரத்தில் இதற்கு எதிராக சிவில் சமூக அமைப்புகளும் அரசாங்கத்தின் கண்காணிப்பு அமைப்புகளும் கடுமையான விமர்சனங்களை எழுப்புகின்றன.

தலைமை தணிக்கைத்துறை தலைவரின் சமீபத்திய அறிக்கை ஏப்ரல் 2013ல் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. மாநில சட்டசபையிலும் 2013 மே 15ல் அந்த அறிக்கை வைக்கப்பட்டது.[12] அதில்தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டத்தை தமிழக அரசு நிறைவேற்றிய முறையை பற்றிய எதிர்மறையான குறிப்புகள் உள்ளன.

- ஒவ்வொரு கிராமப்புற குடும்பத்துக்கும் 100 நாள் வேலைவாய்ப்புகள் வழங்குவதற்கு இந்த திட்டம் உருவாக்கப்பட்டு இருந்தாலும் தமிழகத்தில் இந்த திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குடும்பங்களில் 24 சதவீதத்துக்கு மட்டும்தான் 100நாட்கள் வேலை வழங்கப்பட்டு உள்ளது.
- வேலை வழங்கப்பட்ட குடும்பங்களில் 98 சதவீதம் பேருக்கு சம்பளம் பணமாக கொடுக்கப்பட்டு உள்ளதாக மாநில அரசு சொல்லிக்கொண்டாலும் 2007-12 காலகட்டத்தில் எடுக்கப்பட்ட வேலைகளில் 43 சதவீதம் மட்டும்தான் முடிக்கப்பட்டு உள்ளது.அதாவது மொத்த திட்டப்பணிகளான 2.57 லட்சம் பணிகளில் 1.11 லட்சம் திட்டப்பணிகள் மட்டும்தான் முடிக்கப்பட்டு உள்ளன.
- 2009-12 காலகட்டத்தில் வழங்கப்பட்ட சராசரி கூலிகள் ரூ.72 முதல் 87 வரை இருந்தன.ஆனால் அவை பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச கூலியான 90~119 வரையான கூலியாக இருந்து இருக்க வேண்டும்.
- இந்த திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட திட்டப்பணிகள் மதிப்புள்ள எந்த ஒரு சொத்தையும் உருவாக்கக்கூடியதாக பொதுவாக இருக்க வில்லை.
- சம்பள பட்டியல்,வேலையாட்கள் பட்டியல் உள்ளிட்ட ஆவணங்களை பராமரிப்பதில் ஏராளமான குறைபாடுகள் இருந்தன.கிராமப்புறங்களில் மட்டும் அல்ல. வட்டாரஅளவிலும் மாவட்ட அளவிலும் கூட இந்த குறைபாடுகள் இருந்தன.

**தலைமை தணிக்கைத்துறைத்தலைவரின் அறிக்கையில் உள்ள குற்றச்சாட்டுகளை தமிழக அரசு முரட்டுத்தனமான முறையில் மறுத்த போதிலும் அரசின் இத்தகைய நடத்தை யானது சிவில் சமூக அமைப்புகளும் அரசியல்கட்சிகளும் இந்த திட்டம் மாநிலத்தில் அமலாகும் முறையைப் பற்றி தொடர்ச்சியான முறையில் எழுப்பி வந்த தீவிரமான பிரச்சனைகளைத்தான் மீண்டும் உறுதிப்படுத்தியது.**

தற்போதைய நிலையில் நமது தேடுதல் மேலும் குறிப்பானது. மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய கிராமப்புற வேலை உறுதித்திட்டம் எந்த அளவுக்கு தலித் பெண்களுக்கு உண்மையில் உதவியாக இருந்தது? அவ்வாறு இல்லை என்றால் ஏன் ?

12 பார்க்க: டைம்ஸ் ஆப் இந்தியா, 25 ஏப்ரல் 2013 தி இந்து, 17 மே 2013

# தலித் பெண்களும் தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டமும்

1) தேசிய கிராமப்புற வேலைஉறுதி திட்டத்தை கண்காணிக்கக்கூடிய சமூக தணிக்கைக்குழுவில் தலித் பெண்களுக்கு 3:1 பிரதிநிதித்துவம் வேண்டும்.

2) பணித்தல பொறுப்பாளராக தலித் பெண்கள் நியமிக்கப்பட வேண்டும்.

3) குறைந்த பட்ச தினக்கூலியாக ரூ.250 தரவேண்டும்.

4) ஒவ்வொரு கிராமத்திலும் 100 ஏக்கர் பொதுவான நிலம் அடையாளம் காணப்பட்டு அதில் கூட்டுறவு அடிப்படையில் விவசாயம் செய்வதற்காக அந்த நிலம் தலித் பெண்களுக்கு தரப்படவேண்டும்.

5) 21வயதும் அதற்கும் மேலும் உள்ள ஒவ்வொரு தலித் பெண்ணுக்கும் ஒரு வருடத்தில் குறைந்தபட்சம் 200 நாட்கள் வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தவேண்டும்.

6) தலித் பெண்கள் தங்களின் நிலத்தை மேம்படுத்துவதற்கு ஒவ்வொரு வருடமும் ரூபாய் 30ஆயிரம் மானியமாக தரப்பட வேண்டும்.

7) தலித்துகளின் நிலத்தை மேம்படுத்துவதற்கான தனியான திட்டம் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் உருவாக்கப்பட வேண்டும்.

8) தேசிய கிராமப்புற வேலைஉறுதிதிட்டத்தில் பணியாற்றுவோருக்கு வருடத்துக்கு இருமுறை கருவிகள் வழங்கப்பட வேண்டும்.

9) ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு கிராம வங்கியை துவக்கவேண்டும்.அதற்கு ஒரு கோடி ரூபாய் நிதி சிறப்புக்கூறு திட்ட நிதியில் இருந்து தரப்படவேண்டும்.

10) அந்த வங்கியின் முதல்தர அதிகாரிகள் உள்ளிட்ட பொறுப்புகளுக்கு தலித்பெண்கள் நியமிக்கப்படவேண்டும்.

11) கூட்டுறவு விவசாயத்தை மேம்படுத்துவதற்காக தலித் பெண்களையும் உள்ளடக்கிய கிராம அளவிலான விவசாயக்குழுக்களை அமைக்க வேண்டும்.

12) கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம் எங்கெல்லாம் நடக்கிறதோ அங்கு தலித் பெண் நர்ஸாக நியமிக்கப்படவேண்டும்.

13) தேசியகிராமப்புற வேலை உறுதி திட்டம் தலித்துகள் இடம் விட்டு இடம் மாறி புலம் பெயர்தலை தடுப்பதை நோக்கி மறுவடிவமைக்கப்பட வேண்டும்.

14) தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டத்தில் வேலை செய்வோருக்கு இன்சூரன்ஸ் திட்டமும் இருக்கவேண்டும்.

15) விபத்துகளுக்கு ரூ. 2.5 லட்சமும் மரணங்களுக்கு ரூ. 5 லட்சமும் தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டத்தில் பணியாற்றுவோருக்கு வழங்கப்பட வேண்டும்.

16) தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டத்தில் பணியாற்றுவோருக்கு ஒரு வருடத்துக்கான மொத்த நிதியும் ஒதுக்கப்படவேண்டும்,

*(இந்த ஆய்வுக்கான துணை அமைப்புகளில் ஒன்றான மனிதவள மேம்பாட்டுக்கான அமைப்பு 15 டிசம்பர் 2012ல் ஒருங்கிணைத்த தலித் பஞ்சாயத்து தலைவிகளுக்கான பயிலகத்தில் உருவான பரிந்துரைகள்)*

# தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டமும் சாதியும்

இந்தியாவை போன்ற சாதிய அடிப்படையிலான சமூகத்தில் குறிப்பாக தமிழ்நாட்டில் தனியாரோ பொதுத்துறையோ வாழ்வின் எந்த பகுதியும் சாதியத்தில் இருந்து விடுபட்டதாக இல்லை. இத்தகைய சாதியத்தால் பாதிக்கப்படுபவர்களாக எப்போதும் தலித்துகளும் தலித் பெண்களும்தான் இருக்கிறார்கள்.

தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டத்தை போன்ற ஒரு பொதுவான திட்டத்தில் தலித்துகளுக்கும் தலித் பெண்களுக்கும் பயன்தரும் ஒரு தனிபட்டப் பகுதி இல்லாத நிலை உள்ளது. இந்த திட்டத்தில் பெரும்பான்மையாக தலித்துகள் தான் பயனடைகின்றனர் என்று அரசு தெரிவித்தாலும் இந்த திட்டம் தலித்துகளை மற்றவர்களோடு போட்டியிட்டு ஜெயிக்கவேண்டிய சமமற்ற ஒரு போட்டியில்தான் வைத்துள்ளது.

தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டம் இந்திய அளவில் அமலாக்கப்பட்ட விபரங்களில் தமிழ்நாடு 73.3 சதவீதத்துக்கும் மேற்பட்ட கிராமப்புற பெண்கள் இந்த திட்டத்தில் பயனடைந்துள்ளனர் என தெரிகிறது.இந்த சாதனை அளவில் கேரளாவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு உள்ளது.[13] தமிழகத்தில் உள்ள கிட்டத்தட்ட 60 சதவீத தலித்துகள் இந்த திட்டத்தால் பயனடைந்துள்ளனர் என்றும் அரசு புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.[14] ஆனால் தலித் பெண்களை பொறுத்தவரை அவர்களைப்பற்றி இத்தகைய தனியான புள்ளிவிபரங்கள் கிடையாது.

தலித்துகள், தலித் பெண்களின் உண்மையான வாழ்க்கை நிலவரம் பற்றிய முழுமையான ஆய்வுகள் எதுவும் இல்லை. தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டம் பற்றிய ஆய்வுகளும் கிடையாது. ஆனால் உள்ளூர் மட்டத்தில் செய்யப்பட்ட சில ஆய்வுகளும் அனுபவங்களும் இந்த திட்டத்தை அமலாக்குவதில் சாதியம் பரவிக்கிடக்கிறது என்பதை காட்டுகிறது.

விழுப்புரம் மாவட்டத்தின் தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டம் பற்றிய அதிகாரபூர்வ 2007~சமூக தணிக்கை அறிக்கையில் கீழ்க்கண்ட குறிப்புகள் உள்ளன:[15]

**"சமூக தணிக்கையில் இருந்து கவனிக்க வேண்டிய சில கண்டுபிடிப்புகள் எழுந்து உள்ளன. வேலைவாய்ப்புகள் பல்வேறு 'வார்டு'கள் 'இடையே சுழலுகின்றன.தனித்தனியாக வசிக்கும் சாதிப்பிரிவினர் இடையே வேலைவாய்ப்புகள் போகும்போது அவை தெளிவாக சாதியாக பிரிந்து போகின்றன….. அனைத்து தரப்பினரையும் உள்ளடக்குவது என்ற வேலை முறைக்கு பதிலாக சமூகபிரிவுகளை மேலும் வலுப்படுத்துகிற ஒரு அபாயமான சூழலில் விழுப்புரத்தில் நடக்கும் தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டம் இருக்கிறது."**

**"தலித் பழங்குடி மக்களையும் வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ளவர்களையும் இந்த திட்டத்தில் ஈடுபடுத்துவதில் ஒரு விருப்பமில்லாத ஒரு நிலை, நிர்வாகத்தில் ஒரு வெளிப்படையான தன்மையில்லாத நிலை ஆகியவை குறிப்பிட்டு சொல்லவேண்டிய முக்கிய பிரச்சனைகள். தலித்பழங்குடிமக்கள், வறுமைக்கோட்டுக்கு கீழே இருப்போரின் நிலங்கள் தொடர்பான வேலைத்திட்டங்களை எடுத்துச்செய்வதற்கு விருப்பமில்லாத நிலை தமிழகத்தில் பரவிக்கிடக்கிற ஒரு தீவிரமான பிரச்சனை என்று தேசிய கிராமப்புற வேலைஉறுதி திட்டத்திற்கான கவுன்சில் உறுப்பினரான திருமிகு.ஆன்னி ராஜா எச்சரிக்கிறார்."**

---

[13] பார்க்க *"TN ranks 2nd in employing women under job scheme", Times of India, பிப்ரவரி 28, 2013*

[14] *பார்க்க* "beneficiaries to audit rural job scheme works", The Hindu, 6 *பிப்ரவரி*, 2013

[15] *பார்க்க Jean Dreze & Sowmya Kidambi, "Long Road to Employment Guarantee", The Hindu, 2 ஆகஸ்ட் 2007; "Rural Job Scheme: Many Positives, A Few Concerns", The Hindu, 30 டிசம்பர் 2007*

# சந்தன மேரி

## தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டத்தையும் தலித் பெண்களையும் பற்றி

“MGNREGS தலித்துகளை போன்ற விளிம்பு நிலை குடும்பங்களில் பெரும்பாலானவர்களுக்கு தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டம் என்பது மொத்த வாழ்வாதாரமே அதுதான் என்ற அளவுக்கு மாறிவிட்டது. இது ஒரு அரசுத்திட்டமாக இருந்தாலும் கூட அதன் செயல்பாட்டில் ஒரு சாதியம் பரவி இருக்கவே செய்கிறது.

பஞ்சாயத்து தலைவர்கள் ஆதிக்க சாதிகளை சேர்ந்தவர்களாக இருந்தால் அந்த சாதிகளை சேர்ந்த பெண்களுக்கு எளிதான வேலைகள் கிடைக்கும். அவர்கள் மரியாதையாக நடத்தப்படுவார்கள். அதே நேரத்தில் தலித் பெண்கள் கடுமையான வேலைகளை செய்யுமாறு கட்டாயப்படுத்தப்படுவார்கள். அவர்கள் மேல் தங்கள் அதிகாரத்தை காட்டுவார்கள். அவமரியாதை செய்வார்கள். சமீபத்தில் எங்கள் பகுதியில் தலித்பெண்களை மட்டும் தனிக்குழுவாக போட்டு இருப்பதிலேயே கடுமையான வேலைகளை அவர்களுக்கு ஒதுக்கினார்கள்.

ஆதிக்க சாதியினரின் குக்கிராமங்களில் தான் எங்களுக்கு அடிக்கடி வேலை தருவார்கள். ஆனால் அந்த வேலைகளை பதிவு புத்தகத்தில் எழுதும்போது தலித் குடியிருப்புகளில் சுத்தம் செய்தது, குழிகளை வெட்டியது என்று எழுதிக்கொள்வார்கள்.

தலித் பெண்கள் தொடர்ச்சியாக அவமரியாதையாக திட்டப்படுகிறார்கள்.பயமும் ஆபத்தும் நிறைந்த ஒரு சூழலில் தான் தலித் பெண்கள் வேலை செய்ய வேண்டி உள்ளது.அல்லது அவர்களுக்கு வேலை வழங்குவதற்கான அட்டையை அவர்களிடமிருந்து பறித்து விடுவார்கள்.

வேலை நடக்கிற இடத்தில் பொறுப்பானவர்களாக இருக்கிற மக்கள் நல பணியாளர்கள் தொடர்ச்சியாக தலித் பெண்களை மரியாதைக்குறைவாக நடத்துவார்கள். ஆதிக்க சாதிகளை சேர்ந்த பஞ்சாயத்து தலைவர்களிடமும் அதிகாரிகளிடமும் தலித் பெண்களுக்கு எதிரான கதைகளை அடிக்கடி சொல்கிறார்கள்.

இதே மக்கள் நல பணியாளராக எப்போதாவது ஒரு தலித் பெண் வந்துவிட்டால் ஆதிக்க சாதி பஞ்சாயத்து தலைவர்களால் அவள் தொடர்ந்து துன்புறுத்தப்படுகிறார்.மட்டமான முறையில் நடத்தப்படுகிறார்.

ஒருபோதும் கூலிகள் தினமும் தரப்படுவது இல்லை. வாரத்துக்கு ஒருமுறை கூட தரப்படுவதில்லை. 4,5 வாரங்கள் தள்ளித்தான் தரப்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமைகள் தலித் பெண்களை கடன்வலைக்குள் தள்ளுகிறது. அப்போதுதான்அவர்களால் தங்களின் அடிப்படை தேவைகளையாவது நிறைவேற்றிக்கொள்ள முடியும். இப்படிப்பட்ட நேரங்களில் ஆதிக்கசாதிகளை சேர்ந்த பெண்கள் மிக அதிகமான வட்டிக்கு தலித் பெண்களுக்கு கடன்களை தருவதுதான் கொடுமையின் உச்சகட்டம்.

கூலி வங்கிகளின் மூலமாக தரப்படுகிறது என்றால் அது ஒரு தனி சுமையாக ஏழை தலித் பெண்களுக்கு மாறுகிறது. வங்கிக்கணக்கை ஆரம்பிப்பது என்பது ஒரு பத்து நாள் வேலையையும் கூலியையும் கொடுப்பதுக்கு சமம். ஓடி ஓடி அலையணும். வங்கியில் இருந்து பணத்தை எடுக்கணும்னா அது ஒரு 15 கிலோமீட்டர் பயணம். அதுக்கு ஒரு 30ரூபாய் செலவு. அன்னக்கி நாள் வேலையும் கூலியும் கெட்டுப்போகும்.

எந்த ஒரு வேலை நடக்கும்இடத்திலும் குழந்தை காப்பகம் கிடையாது. தலித் பெண்களுக்கு மதிய உணவுக்கு ஒதுங்க கூட ஒரு இடம் கிடையாது.”

**களத்தில் கண்டவை:**

தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிற தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டத்துக்கும் தமிழக தலித் பெண்களின் உண்மையான சமூக பொருளாதார நிலைக்கும் உள்ள இடைவெளியை பற்றிய ஆழமான புரிதலை பெறுவதற்காக சமூக கண்காணிப்பகம்தமிழ்நாடு சிவகங்கையை மையமாக கொண்டு செயல்படும் உறுதிமிக்க தலித் அரசியல் செயல்பாட்டாளரும் நமது ஆய்வுக்கான துணைவர்களில் ஒருவருமான சந்தனமேரியை ஏற்பாடு செய்தோம். அவர் இந்த திட்டத்தின் கீழ் வேலை செய்த 30பெண்களின் அனுபவங்களை வைத்து ஒரு மாதிரி – ஆய்வை நடத்தினார்.ராமநாதபுரம்,புதுக்கோட்டை மாவட்டங்களில் இருந்து அந்த பெண்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

ஆனால் ஒரு அமைப்புரீதியான ஆதரவு அவருக்கு இல்லாமல் போனதால் எங்களது கூடுதலான முயற்சிகள் கூட இந்த மாதிரி ஆய்வுக்கான தரவுகளை போதுமான அளவு பெறுவதில் வெற்றி பெறவில்லை.குறிப்பான முடிவுகளுக்கு போக எங்களுக்கு உதவக்கூடிய அத்தகைய தரவுகள் பெறுவதில் வெற்றி பெற முடியவில்லை.

ஆனாலும் திருமிகு. சந்தனமேரியின் ஆழமான பார்வைகள் (முன்பக்கத்தில் சொல்லப்பட்டவை) உண்மையில் முக்கியமானவை.அவை மேலும் ஆழமாக இந்த ஆய்வில் நாம் செல்வதற்கும் பிரச்சனைகளை வெளிக்கொண்டு வருவதற்கும் தேவையான கருத்துக்களை நமக்கு தருகின்றன.

முன்னரே சொன்னது போல, தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டம் போன்ற திட்டங்கள் தலித் பெண்கள் போன்ற சமூகபிரிவுகளுக்கு திறன்மிக்க முறையில் பயன்பட வேண்டும் என்றால் இந்த திட்டத்துக்கு பல் வேறு பாகுபாடுகள் பெண்களை பாதிக்கின்றன என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையிலான ஆய்வு அணுகுமுறை அவசியம் தேவை. அது தலித் பெண்களை நோக்கி கவனம் செலுத்தப்பட்ட திட்டங்களை உருவாக்க அவர்ளை பற்றிய தகவல்களை தனித்தனியாக பிரித்து எடுத்து ஆராய்வதற்காக உருவாக்க தொடங்குவதில் இருந்து ஆரம்பமாக வேண்டும்.

# தலித் பெண்களும் அவர்களுக்கு தமிழகத்தில் உயர்கல்வி கிடைப்பதும்

# அங்கும் இங்கும் ஓடி அலைவதா?

# தலித் பெண்களும் அவர்களுக்கு உயர்கல்வி கிடைப்பதும்

தலித் பழங்குடி மக்களை போன்ற விளிம்பு நிலை மக்களுக்கும் அவர்களது இடையே உள்ள பெண்களுக்கும், மறுக்கப்பட்ட உரிமையாக, கல்வி குறிப்பாக உயர்கல்வி இருப்பதை, கல்வி உரிமைச்சட்டத்தை சுற்றி எழுகிற விவாதங்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்த பிரச்சனையை மத்திய மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை போட்டு அதன் மூலம் தீர்க்க முயற்சிக்கின்றன. ஆனாலும் கூட இந்த பிரச்சனையில் நிறைய குறைபாடுகள் இருப்பதை நம்மால் எளிதாக அடையாளம் காண முடியும். உதாரணமாக பட்டியல் சாதியினருக்கும் பழங்குடி மக்களுக்குமான கல்வி முன்னேற்றம் என்ற தலைப்பில் மத்திய தலைமை தணிக்கைத்துறை தலைவரின் 2007ம் வருட அறிக்கையை பார்த்தால் தெரியும்:

1. **நிதியை பயன்படுத்தாமல் இருப்பது, நிதியை ஒதுக்குவதில் மாநிலங்களுக்கு இடையேயான ஏற்ற இறக்கங்கள், மத்திய நிதி உதவி கிடைக்காமல் போவது, தாமதமாக, குறைவாக நிதியை தருவது, நிதியை தராமலே இருப்பது, மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் பயன்படுத்தப்படாத நிதிகள் கிடப்பது, ஒதுக்கப்பட்ட நிதிகளை மற்ற திட்டங்களுக்கு மாற்றிவிடுவது உள்ளிட்ட பல சம்பவங்கள் தலித் பழங்குடி மக்களுக்கான இந்த திட்டங்களில் நிதிநிர்வாக குறைபாடுகள் ஏராளம் இருக்கின்றன என்பதை காட்டுகின்றன.**
2. **இந்த திட்டங்களுக்கு போதுமான அளவில் விளம்பரம் என்பது இல்லாததால் அவை யாருக்கு போய் சேர வேண்டுமோ அவர்களுக்குகூட அந்த திட்டங்களை பற்றிய விழிப்புணர்ச்சி குறைவாக இருக்கிற நிலை உள்ளது.**
3. **இந்த திட்டங்களை தணிக்கை செய்தபோது கல்வி உதவித்தொகைகள், புத்தக வங்கிகள், விடுதிகள், பயிற்சி வகுப்புகள், விருதுகள் விசயத்தில் இத்தகைய பயன்கள் தரப்பட வேண்டியவர்களுக்கு தரப்படாமல் இருக்கிற ஏராளமான சம்பவங்கள் தெரியவருகின்றன.**
4. **கல்வி உதவித்தொகைகளை வழங்குவதிலும், புத்தகவங்கிகளை உருவாக்குவதிலும் ஆசிரம பள்ளிகளையும் விடுதிகளையும் கட்டுவது உள்ளிட்ட வற்றில், நிறைய கால தாமதங்கள் இருக்கின்றன.**
5. **கல்வி உதவித்தொகைகளை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமானவரம்பை விட அதிக வருமானம் கொண்ட பெற்றோர்களின் குழந்தைகள் உள்ளிட்ட தகுதியற்ற பயனாளிகள் கல்வி உதவித்தொகைகளை பெற்றுவிடுகிறார்கள். இந்த விசயங்களில் உள் பரிசீலனைகள் செய்யும் கட்டுப்பாடு தளர்ந்து இருக்கிறது.**
6. **பயனாளிகளுக்கு அளிக்கப்படுகிற விடுதிகளில் வழங்கப்பட வேண்டிய குடிநீர், கழிப்பறைகள், மின்சாரம், அறைகலன்கள் உள்ளிட்ட அடிப்படை தேவைகள் குறைவாக உள்ளன.**
7. **இந்த திட்டங்கள் தொடர்பான பல்வேறு பட்ட அறிக்கைகளையும் அவற்றின்விளைவுகளையும் கண்காணிப்பதில் தோல்வி, பல்வேறுபட்ட திட்டங்களை பற்றிய தகவல்களை பராமரிப்பது, மாநில அரசுகள், யூனியன் பிரதேசங்கள், அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவற்றில் கள சோதனைகள் செய்வது, இந்த திட்டங்களை பற்றி சுயேச்சையான ஆய்வறிக்கைகளை உருவாக்குதல், ஆகிய எல்லாவற்றிலும் தோல்வியை சந்தித்து இருப்பதும் போதுமான அளவில் உள்தணிக்கை இல்லாததும் இந்த திட்டங்களின் உள்புற கட்டுப்பாடுகளை பலவீனமாக்கி உள்ளன.**

கீழே சொல்லப்பட்ட அறிக்கையில் தரப்பட்டுள்ள பல்வேறுபட்ட பரிந்துரைகளும் மிக சரியான நேரத்தில் செய்யப்பட்டவை. மிகவும் கவனத்துடன் அவற்றை பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

a) பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடிகளுக்கான கல்வித்திட்டங்கள் நிதி நிர்வாகம் மற்றும் கட்டுப்பாடு ஆகியவை வலுப்படுத்தப்பட வேண்டும். நிதிகளை பயன்படுத்துதல், செலவழியாத நிதிகளை அட்ஜஸ்ட் செய்வது, நிதிகளை வேறு திட்டங்களுக்கு திருப்பிவிடுவதை தடுப்பது உள்ளிட்டவற்றின் மீது கூடுதலாக கவனம் செலுத்தப்பட்டு இந்த வலுப்படுத்தல் நடக்க வேண்டும்.

b) நிதிகளை ஒதுக்குவதில் ஏற்றத்தாழ்வுகளும், நிதிகளை கேட்டுப்பெறுவதில் மாநில அரசாங்கங்களின் தரப்பில் இருக்கிற முன்முயற்சி இல்லாத நிலை, ஆகிய பிரச்சனைகள் எதிர்கொள்ளப்பட்டு நல்ல செயல்பாட்டுக்கு பொருத்தமான அணுகுமுறையை உருவாக்கிகொள்வதன் மூலம் அவை தீர்க்கப்பட முடியும்.

c) பயனாளிகளுக்கு பணப்பயன்கள் குறைவாகவும், தாமதமாகவும், போதுமான முறையில் கிடைக்கச்செய்யாமல் இருப்பதற்கான காரணங்கள், அடையாளம் காணப்பட வேண்டும். அவற்றை சரி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

d) பயனாளிகளை தேர்வுசெய்தல், புத்தக வங்கிகளை உருவாக்கல், இன்னும் பல வற்றுக்கு உருவாக்கப்பட்டுள்ள தேர்வு அமைப்புகள் தகுதியற்ற பயனாளிகளுக்கு பணப்பயன்களை அளித்தல், கூடுதலான பணத்தை செலவழித்தல், காலாவதியான அல்லது பொருத்தமில்லாத புத்தகங்களை வாங்குதல் உள்ளிட்ட நிர்வாக பற்றாக்குறைகளை தவிர்க்கும் அமைப்புகளாக இருப்பவைகளை மேம்படுத்துதல்.

e) கழிப்பறைகள், குடிநீர், மின்சாரம், போதுமான அளவு வேலையாட்கள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் இல்லாதநிலையில் இருக்கிற விடுதிகளின் தரம் மேம்படுத்தப்பட வேண்டும். அதே போல உள்கட்டமைப்புகள் போதுமானஅளவு இல்லாத இடங்களில் நடக்கிற சிறப்பு பயிற்சிபற்றியும், தேவையான எண்ணிக்கையில் வகுப்புகளும் நடத்தப்பட்டனவா என்பது பற்றியும் தக்க கவனத்துடன் ஆராய வேண்டும்.

f) அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலமாக திட்டங்கள் நிறைவேற்றப்படுவதை அந்த திட்டத்தின் நோக்கமாக அறிவிக்கப்பட்டது உண்மையில் நடைமுறையில் நடந்துள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும் நிதிகள் தவறாக கையாளப்படுவதை தடுக்கும்வகையிலும் தீவிரமாக பரிசீலிக்கப்படுவது தேவையாக உள்ளது.

g) இந்த திட்டங்களை மேலும் திறன்மிக்க முறையில் செயல்பட வைக்க மத்திய அளவிலும் மாநில அளவிலும் திறன்மிக்க கண்காணிப்பு அமைப்புகள் அமைக்கப்படவேண்டும்.

## தலித் பெண்களும் தமிழ்நாட்டில் அவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகளும்

தமிழக அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக சமீப காலத்தில் வெளியிடப்பட்டுள்ள கொள்கை அறிக்கைகளும் செயல்பாட்டு வரவுசெலவு அறிக்கைகளும், தலித் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கான கல்வியின் பல நிலைகளில், ஒரு கணிசமான பணம் கல்வி உதவித்தொகைகளாக வழங்கப்பட்டுள்ளதாக கூறுகின்றன.

உதாரணமாக, தேதியிட்ட கொள்கை அறிக்கையின்படி,

- 2011-12 நிதியாண்டில் ரூ 18,615.62 லட்சங்கள் மெட்ரிக் கல்விக்கு பிந்திய கல்விஉதவித்தொகைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. (10வது வகுப்புக்கு பிறகு)
- 2011-12 நிதியாண்டில் ரூ 919.06 லட்சங்கள் மாநில அரசின் சிறப்பு மெட்ரிக் கல்விக்கு பிந்திய கல்வி உதவித்தொகைகள் (10வது வகுப்புக்கு பிறகு)
- 2011-12 நிதியாண்டில் ரூ 1813.50 லட்சங்கள் உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித்தொகைகளுக்காக ஒதுக்கப்பட்டது.
- 2011-12 நிதியாண்டில் ரூ 21.55 லட்சங்கள் வெளிநாடுகளில் படிப்போருக்கான கல்வி உதவித்தொகைகளுக்காக ஒதுக்கப்பட்டது.
- 2011-12 நிதியாண்டில் ரூ 750.90 லட்சங்கள் டியூசன் கட்டண தள்ளுபடிக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.
- 2011-12 நிதியாண்டில் ரூ 94.50 லட்சங்கள் இளங்கலை பட்டங்கள் பயிலுகிற மாணவர்களுக்கான தேர்வுகட்டணம் மற்றும் ஸ்பெஷல் கட்டணங்களை தள்ளுபடி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.
- 2011-12 நிதியாண்டில் ரூ 52.50 லட்சங்கள் முதுகலை பட்டம் பயிலுகிற மாணவிகளின் தேர்வுகட்டணம் மற்றும் ஸ்பெஷல் கட்டணங்களை தள்ளுபடி செய்வதற்ககாக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் பழங்குடி மக்களின் நல்வாழ்வுத்துறையின் 2012-13 ஆம் வருட செயல்பாட்டு வரவு செலவு அறிக்கையின்படி 2011-12 காலகட்டத்தில் ரூ 36068.56 லட்சங்களை கல்வி உதவித்தொகையாக செலவழித்ததாக மாநில அரசு கூறுகிறது. அதனால் 7,42,329 மாணவர்கள் பயனடைந்ததாகவும் அது கூறுகிறது.

இத்தகைய திட்டங்கள் உண்மையாக எந்த நிலைமையில் நிறைவேற்றப்பட்டு உள்ளன என்பதை பற்றி ஆழமாக நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். ஆனால் அதை செய்வதற்கு பதிலாக நாம் இந்த திட்டங்கள் பல்வேறு வகையான ஒடுக்குமுறைகளுக்கு ஆட்பட்டுள்ளவர்களை பற்றி என்னவகையான பார்வையோடு இருக்கின்றன என்பதை பற்றி முதலில் பார்க்க வேண்டும். தலித் பெண்கள் உயர்கல்வி பெற முயலும்போது இவை எவ்வாறு பயனளிக்கின்றன, அத்தகைய தொலைநோக்குப் பார்வைகள் இந்த திட்டங்களுக்கு இருக்கின்றனவா என்ற கேள்விகளோடு நாம் தலித் பெண்கள் மீது சிறப்பு கவனம் செலுத்துவோம்.

தலித் பழங்குடி மக்களுக்காக என அறிவிக்கப்பட்ட பெரும்பாலான திட்டங்களில் தலித் பெண்களின் பிரச்சனைகளின் மீது உணர்ச்சிபூர்வமான கவனம் செலுத்தும் ஒரு பகுதியை கூட இந்த திட்டங்களில் பார்க்க முடியவில்லை என்பது வெளிப்படையாக தெரிகிறது. மிக குறைவு அல்லது ஒட்டுமொத்தமாக ஒன்றுமே இல்லை என்பதுதான் நிலை. 2011-12ல் அறிவிக்கப்பட்ட எல்லா திட்டங்களிலும் ஒன்றே ஒன்றுதான் 52.50 லட்சம் ரூபாய் ஒதுக்கீட்டோடு தலித் மாணவிகள் மீது சிறப்பு கவனம் வைக்கிறது.

சமீப ஆண்டுகளில் உயர்கல்விக்காக சிறப்புக்கூறு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டவற்றை அலசி ஆராய்ந்தாலும் அவையும் எல்லாம் எவ்வாறு பாலினரீதியான பார்வை இல்லாமல் இருக்கின்றன என்பதும் வெளியாகும். இதே போல தமிழகத்தில் நடத்தப்படுகிற உயர்கல்விக்கான திட்டங்கள் பெண்களை நோக்கியுள்ள அல்லது பெண்களுக்கு சார்பானதாக இருந்தாலும் அவையும் சாதிய புரிதல் இல்லாமல் இருக்கின்றன.

தலித் பெண்களுக்கும் சிறுமியருக்கும் உயர்கல்வி கிடைப்பது சம்மந்தமான பிரச்சனை பற்றி எந்த ஒரு ஆய்வும் அரசாங்கத்தின் தரப்பிலோ தனியார் தரப்பிலோ கிடையாது. ஒரு விதிவிலக்காக இவ்வாறு மதிப்பிடக்கூடிய சிறப்பான ஒரு ஆய்வை தமிழக அரசின் மதிப்பிடுதல், செயல்படுத்துவதற்காக ஆராய்தல் பற்றிய துறை 2011ல் நடத்தியது. அதன் தலைப்பு, 'தலித்பழங்குடி பெண்கள் மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம், சட்டம் ஆகிய படிப்புகளில் சேருவதை மதிப்பிடும் ஆய்வு'. அந்த ஆய்வில் கண்டறியப்பட்டவை உண்மையில் பிரச்சனையை தெளிவுபடுத்தக்கூடியவை:

- ✦ பொறியியல் படிப்புகளில் தலித் பழங்குடி மாணவர்கள் நுழைவது என்பது மொத்த மாணவர்களின் சதவீதத்தில் 2006-07ல் 9.5 சதவீதமாக இருந்தது. அது 10.8 சதவீதமாக 2009-10 ல் உயர்ந்துள்ளது.
- ✦ தனியார் பொறியியல் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட தலித் பழங்குடி மாணவர்களின் எண்ணிக்கை குறைவு.
- ✦ பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்த மொத்த தலித் பழங்குடி மாணவர்களில் ஏறத்தாழ மூன்றில் ஒருபகுதியினர் பெண்கள்.
- ✦ பொறியியல் படிப்புகளை படிக்கும் தலித்பழங்குடி பெண்களின் சதவீதம் என்பது 2003-04ல் 26 சதவீதம். அது 2008-09ல் 35 சதவீதமாக உயர்ந்தது. 2009-10 ல் கொஞ்சமாக குறைந்துள்ளது.
- ✦ சென்னை, கடலூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி மாவட்டங்களை விட காஞ்சிபுரம், மதுரை, சேலத்தில் கூடுதலான பெண்கள் பொறியியல் படிப்புகளில் சேர்ந்துள்ளனர்.
- ✦ மருத்துவ படிப்புகளில் சேர்ந்துள்ள தலித்பழங்குடி மாணவிகள் 2010-11ல் 8.8 சதவீதமாக இருந்தனர். தலித் பழங்குடி மாணவர்களை விட மாணவிகள் கூடுதலாக மருத்துவ கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர்.
- ✦ கால்நடை மருத்துவ பல்கலைகழகத்தில் சேர்ந்த தலித்பழங்குடி மாணவர்களில் தோராயமாக ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு மாணவிகள் இருந்தனர்.(35 சதவீதம்). கால்நடை மருத்துவ படிப்புகளில் 26 சதவீதம் மாணவிகள் 2003-04 மற்றும் 2005-06 ஆம் ஆண்டுகளில் சேர்ந்தனர்.இதுவே 45 சதவீதத்துக்கு 2006-07 ஆம் வருட காலகட்டத்தில் உயர்ந்தது.
- ✦ சட்டப்படிப்புகளில் சேர்ந்துள்ள மொத்த தலித்பழங்குடி மாணவர்களில் தோராயமாக 27 சதவீதம் பேர் பெண்கள்.

எங்களுடைய அமைப்பின் வரம்புகளுக்கு உட்பட்ட செயல்பாடுகளால், மேற்கண்ட பிரச்சனையில் ஒரு மாதிரி~ஆய்வை செய்ய நாங்கள் எடுத்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை.ஆனால் கீழ்க்கண்ட இந்த களஆய்வு தலித் பெண்களுக்கும் அரசுத்திட்டங்களுக்கும் இருக்கிற இடைவெளியை நமக்கு காட்டுகிறது.

# தலித் சிறுமியின் கனவை வறுமை கலைக்கிறது

The New Indian Express

25 ஜூலை 2009

சென்னை: ஒரு டாக்டராக வேண்டும் என்ற ஒரு இளம் தலித் சிறுமியின் நீண்ட நாள் கனவு. அவளுக்கு அரசாங்க கோட்டாவில் மருத்துவ சீட்டும் கிடைத்தது.ஆனாலும் அவளது ஏழை விதவைத் தாயாரால் ரூ.2,25 லட்சத்தை அந்த தனியார் சுயநிதி மருத்துவகல்லூரிக்கு கட்ட முடியாததால், அவளது டாக்டர் கனவு கலைந்தது.

விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த எலவம்பத்தூரை சேர்ந்தவர் வி.ரேவதி. மேல்மருவத்தூரை சேர்ந்த ஆதிபராசக்தி இன்ஸ்டிட்டியூட் ஆப் மெடிக்கல்சயின்ஸ் அண்ட் ரிசர்ச் எனும் நிறுவனத்தில் ஜூலை 23 கடைசி தேதியில் பணத்தை கட்ட முடியாததால் தனக்கு கிடைத்த சீட்டை இழந்துவிட்டார். அரசாங்கத்தின் தேர்வு கமிட்டியில் இருந்து ஒரு சிபாரிசு கடிதத்தை ஒரு வேளை அவர் வாங்கி வந்தால் அவருக்கு சீட் கிடைக்கலாம் என தனியார் கல்லூரியின் நிர்வாகத்தை சேர்ந்த முருகேசன் தெரிவிக்கிறார்.

ரேவதி அவரது ஊரில் உள்ள மேனிலைப்பள்ளியில் பத்தாவது வகுப்பு தேர்வில், முதலாவதாக வந்துள்ளார்.பிறகு தியாகதுருவம் உயர்நிலைப்பள்ளியில் ஒரு கல்விஉதவித்தொகையை பெற்றுள்ளார்.+2 தேர்வில் 1200க்கு 1105 மதிப்பெண்களை பெற்றுள்ளார்.மெடிக்கல்சீட் ரேங்க் பட்டியலில் அவரது இடம் 331 ஆக தலித் பிரிவில் இருந்துள்ளது.

“சரியான மருத்துவசிகிச்சை இல்லாதவர்களாக யாரும் இருக்க கூடாது என்ற நிலையை உருவாக்க நான் விரும்பினேன்” என்கிறார் ரேவதி. “ நான் மெடிக்கல் சீட் கிடைப்பதற்காக கடுமையாக உழைத்தேன். ஆனால் கல்லூரி நிர்வாகம் பணத்தை கட்டு இல்லை என்றால் வெளியே போ என்று சொன்னபோது எல்லாம் வீணாகி போனது” என்று எக்ஸ்பிரசிடம் போனில் தெரிவித்தார்.

“என் அம்மா என் படிப்பை பற்றி மிகவும் கவலைப்படுவார்.அவரது வருமானம் தினமும் ஒரு 80 ரூபாய்தான்” என்றார் அவர். கல்லூரியின் நிர்வாக அதிகாரி அவரது கல்லூரிக்கு 97 சீட்கள் அரசாங்க கோட்டாவிலும் 53 சீட்டுகள் மேனேஜ்மெண்ட் கோட்டாவிலும் ஒதுக்கப்பட்டதாக சொன்னார். ரேவதி 2.25 லட்சம் கல்லூரிக்கும் ரூ 25,000 தேர்வு கமிட்டிக்கும் தரவேண்டி இருந்தது. தேர்வுகமிட்டிக்கு அவர் கட்டிவிட்டார்.ஆனால் கல்லூரிக்குதான் அவரால் கட்ட முடியவில்லை. என அவர் சொன்னார். “நாங்கள் எங்களது காலி இடங்கள் பற்றி மாலை 4மணிக்குள் அரசாங்கத்துக்கு தெரிவிக்க வேண்டும்.அந்த பெண் இப்போது சீட்டை இழந்து விட்டார்.” என்றார்.

ரேவதிக்கு எட்டாங்கிளாஸ் வரைக்கும் கணக்குவாத்தியாராக இருந்தவர் நாகராஜன்.அவள் ஒரு டாக்டராக ஆக வேண்டும் என எப்போதும் கனவு கண்டாள் என்கிறார். “உங்களது கனவுகளை நிறைவேற்ற கடின உழைப்பு மட்டுமே பத்தாது.வண்டி வண்டியாக பணமும் தேவை”என்கிறார் ஏமாற்றமடைந்த ரேவதி.

# தலித் பெண்களும் உயர்கல்விக்கான வாய்ப்பும்

1 உயர்நிலைப் பள்ளிக்கல்வி முடித்த தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு கல்வியாண்டின் துவக்கத்திலேயே தனியார் மற்றும் அரசுக்கல்லூரிகள் கேட்கும் கல்விக்கட்டணங்கள், போக்குவரத்துக்கட்டணங்கள் வழங்கப்பட வேண்டும்.

2 ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வட்டாரத்திலும் தலித் உள்ளாட்சிகளை ஒருங்கிணைத்து கலை மற்றும் பொறியியல் கல்லூரிகளை கட்டுவதற்கு 75 சதவீதம் மானியம் அளிக்கப்பட வேண்டும்.மேலும் அந்த பகுதியில் உள்ள அனைத்து தலித் மாணவர்களுக்கும் இலவச சேர்க்கை அனுமதி வழங்கப்பட வேண்டும்.

3 பள்ளியில் இருந்து பாதியிலேயே நின்றுவிட்டதலித் மாணவிகளுக்கு அவர்கள் கல்வியை தொடர்ந்து படிக்க நிதி உதவி வழங்கப்பட வேண்டும்.

4 ஒவ்வொரு வட்டாரத்திலும் தலித் மாணவர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய உண்டு உறைவிட கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

5 ஒவ்வொரு வட்டாரத்திலும் தலித் மாணவர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய விடுதிகள் அமைக்கப்பட வேண்டும்.அதில் உணவு வழங்குவதற்கான ஒப்பந்தங்கள் தலித் பெண்களின் சுய உதவிக்குழுக்களுக்கு தரப்பட வேண்டும்.

6 தலித் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு மட்டும் அல்லாமல் காலை உணவும் வழங்கப்பட வேண்டும்.

7 தலித் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு இலவச போக்குவரத்து வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.அதற்கான ஒப்பந்தம் தலித் பெண்களின் சுயஉதவிக்குழுக்களுக்கு தரப்பட வேண்டும்.

8 தலித் பெண் கலைஞர்கள்,எழுத்தாளர்கள்,கவிஞர்கள், பாடகர்கள், அடையாளம் காணப்பட்டு ஒரு லட்சம் ரூபாய் நிதி அளிக்கப்பட வேண்டும்.

9 ஒவ்வொரு பஞ்சாயத்தில் இருந்தும் மூன்று தலித் மாணவர்களை மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்புக்கு அனுப்பும் பொறுப்பை அரசு ஏற்க வேண்டும்.

10 இந்திய ஆட்சிப்பணி (IAS), இந்திய காவல்பணி (IPS), உள்ளிட்ட அதைப் போன்ற பிற படிப்புகளை தலித் மாணவர்களுக்கு கல்வி செலவு அளிக்கப்பட வேண்டும்.

*(இந்த ஆய்வுக்கான துணை அமைப்புகளில் ஒன்றான மனிதவள மேம்பாட்டுக்கான அமைப்பு 15 டிசம்பர் 2012ல் ஒருங்கிணைத்த தலித் பஞ்சாயத்து தலைவிகளுக்கான பயிலகத்தில் உருவான பரிந்துரைகள்).*

**தலித் பெண்களின் பட்ஜெட் உரிமைகளுக்கு ஆதரவாக மக்களை வாதாட வைப்பதை நோக்கி...**

‘சமூக கண்காணிப்பகம் - தமிழ்நாடு’

# சமூக கண்காணிப்பகம் - தமிழ்நாடு

தமிழ் மாநில அளவில், மக்களுக்கான கொள்கை சார்ந்த ஆய்வும், அதன் அடிப்படையில் வாதாடிப் பரிந்துரையும், செய்யும் மையமாக சமூக கண்காணிப்பகம், தமிழ்நாடு இருக்கிறது.

சமூக சமத்துவமே இச் சமூக கண்காணிப்பகத்தின் மையக் கண்ணோட்டம் ஆகும்.

நாட்டின் கொள்கை முடிவுகளை எடுப்பவர்கள், சமூக ஆய்வு செய்வோர், தமிழ்மாநில, மற்றும் பிறமாநில, மனித உரிமைகள் - அடித்தட்டு மக்கள் - இயக்கத்தினர் ஆகியோருடன் கலந்து பேசுவதும், மாநிலத்தில் உள்ள தலித் மக்கள், பழங்குடியினர், பெண்கள், குழந்தைகள் ஆகிய சமூக விளிம்பு நிலைப் பிரிவினரின் வாழ்வாதார உரிமைகளையும் பொதுமக்களுக்கான கொள்கையையும் இணைத்துச் சமூக சமத்துவத்தை உறுதிப்படுத்த முயற்சிகள் எடுப்பதும் கொண்டு, பலதரப்பட்ட ஆய்வுச் செயல்பாடுகளிலும் வாதாடுவதற்கான முன் முயற்சிகளிலும் இம்மையம் ஈடுபடுகிறது.

சமூக கண்காணிப்பகம் 'பட்ஜெட்டுக்கான ஆதரவு திரட்டும் பணியை ஒரு முக்கிய கருவியாகக் கருதுகிறது. இக்கருவியை மக்களுக்கான கொள்கை உருவாக்கத்தைக் கண்காணிக்கவும் மாற்றுக் கொள்கை உருவாக்கங்களைப் படைப்பதற்கும் பயன்படுத்துகிறது.

சமூக கண்காணிப்பகம் இதுவரை செய்துள்ள பல்வேறு ஆய்வுகளிலும் ஆதரவு திரட்டும் முயற்சிகளிலும் சமூக சமத்துவப் 'பட்ஜெட்டிங்' எனும் ஆய்வு முறை அனைத்து முயற்சிகளையும் உள்ளடக்கி முழுமையாக இருப்பதாகக் கண்டுணர்ந்துள்ளது.

(மேலும் விபரங்களுக்கு, பார்க்க www.swtn.org)